O.23:38.2ll2f
N11

118327

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பாடியெனவழங்கும்

# திருவலிதாய புராணம்.

23-ஐதிக படங்களுடன்

(கத்தியரூபமாய்)

துரைத் தமிழ்ச்சங்கத்து மகாவித்துவானாகிய

ந்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரால்

இயற்றப்பட்டு,

ஷை தேவாலய தருமகர்த்தராகிய

பா. தணிகாசலமுதலியாரவர்கள்

த்தின்படி

முன் பதிப்பித்த பிரதிக்கிணங்க

பூவிருந்தவல்லியினை அடுத்த குழுமணிப்பாக்கம்

ஸ்ரீ பாலீஸ்வரர் தேவஸ்தான பரம்பரை தருமகர்த்தரும்

ஷை கிராம மிராசுதாரருமாகிய

கு. முருகு - கந்தசாமிமுதலியாரால்

சென்னை:

மினர்வா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நான்காம் பதிப்பு.

சாதாரண௵-பங்குனி௴

1911.

118327

பதி4



OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
2 AUG 1911

உ

சிவமயம்.

# சிறப்புக்கவி.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனம்

திருப்பூவணூர்வாசம்

ஸ்ரீமத். சுப்பிரமணியத்தம்பிரான்சுவாமிகள்

அருளிச் செய்தது.


உலகனைத்தும் புகழ்தொண்டை மண்டலமா தின்றிலக<br>
 வொண்பதியாம் வலிதாயத்தி<br>
னுயரியவா சியபுரா ணத்தனைப்பாற் சடலினிடை<br>
 யுரமுறைத் தமிழி லாக்கி<br>
நலங்கொளுநல் லன்பரெலாந் தெளிட்டா கிங் கேயுண்ண<br>
 நயமொழியி னளித்திட் டானல்<br>
நம்வாயி லார்காயனுர்மரபி லவதரித்த<br>
 நற்கீர்த்தி வளர்வே ளாளன்<br>
வலமருவு மிலக்கணயி லக்கியநூல் பலதேர்ந்த<br>
 மாணக்கர் குழு வாழ்வோன்<br>
வைதிகசைவசித் தாந்தசாத் திரத்துண்ணம<br>
 மகிழுலகில் வழங்கு சீலன்<br>
கலிவிறைபு மகச்சமயந் தாபித்துப் புறச்சமயங்<br>
 கால்வாரச் செயுமோர் தீரன்<br>
கவின்பூவை யவதானங் கலியாண சுந்தரநற்<br>
 கவிராஜ சிங்க மாதோ!

உ

சிவமயம்.

# சருக்கவட்டவணை.


௧. நைமிசாரணியச் சருக்கம்.
௨. கமலவல்லியார் பூசித்த சருக்கம்.
௩. விநாயகவிவாகச் சருக்கம்.
௪. பாரத்துவாசர் பூசித்த சருக்கம்.
௫. தேவகுரு காமநாசச் சருக்கம்.
௬. கேசவன் பாவநாசச் சருக்கம்.
௭. அநுமாரபராத மன்னிப்புச் சருக்கம்.
௮. சுக்கிரீவன் பூசித்த சருக்கம்.
௯. இராமர் தரிசித்த சருக்கம்.
௧௦. குசலவர் பூசித்த சருக்கம்.
௧௧. அகத்தியாத்தியொழிந்த சருக்கம்.
௧௨. பிரமன் முத்தியடைந்த சருக்கம்.
௧௩. வாயுதேவன் பூசித்த சருக்கம்.
௧௪. மன்மதன் இந்திரன் பூசித்த சருக்கம்.
௧௫. அக்கினி பூசித்த சருக்கம்.
௧௬. சூரிய சந்திரர் பூசித்த சருக்கம்.
௧௭. விண்டு பூசித்த சருக்கம்.
௧௮. இயமன் பூசித்த சருக்கம்.
௧௯. திருவிழாச் சருக்கம்.
௨௦. தீர்த்த மகிமைச் சருக்கம்.
௨௧. க்ஷேத்திரமாலைச் சருக்கம்.



OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 25 JUL 1911 MADRAS

உ

சிவமயம்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

# திருவலிதாயதேவாரம்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பத்தரோடு பலரும் பொலியம் மலரங்கைப் புனறூவி
ஒத்தசொல்லி யுலகத்தவர்தாந் தொழுதேத்தவுயர் சென்னி
மத்தம்வைத்த பெருமான் பிரியா துறைகின்ற வலிதாயஞ்
சித்தம் வைத்த வடியாரவர் மேலடையாமற்றிடர் நோயே. (௧)

படையிலங்கு கரமெட்டுடை யான்படிறாகக் கனலேந்திக், கடையிலங்கு மனையிற் பலிகொண்டுணுங் கள்வன்னுறைகோ யில், மடையிலங்கு பொழிலின்னிழல் வாய்மது வீசும் வலி தாய, மடைய நின்றவடி யார்க் கடையாவினை யல்லற்றுயர் தானே. (௨)

ஐயனொய்யனணியன் பிணியில்லவ ரென்றுந் தொழுதேத் தச், செய்யன் வெய்யபடை யேந்தவல்லான் றிருமாதோடு றை கோயில், வையம் வந்து பணியப்பிணி தீர்த்துயர்கின்ற வலிதாயம், உய்யும் வண்ண நினைமின் னினைந்தால் வினை தீரு நலமாமே. (௩)

ஒற்றையேற துடையானடமாடி யோர் பூதப்படை சூழப்
புற்றினாக மரையார்த் துழல்கின்ற வெம்பெம்மான்மட வாளோ
டுற்றகோயி லுலகத் தொளிமல்கிட வுள்கும் வலிதாயம்
பற்றிவாழு மதுவே சரணாவது பாடுமடியார்க்கே. (௪)

புந்தியொன்றி நினைவார் வினையாயின தீரப்பொருளாய
அந்தியன்ன தொரு பேரொளியானமர் கோயிலய லெங்கும்
மந்திவந்து கடுவன்னொடுங் கூடி வணங்கும் வலிதாயம்
சிந்தியாதவர் தம்மடும் வெந்துயர் தீர்த லெளிதன்றே. (௫)

ஊனியன்ற தலையிற் பலிகொள்ள லுகந்தா னுமையோடுங்
கானியன்ற கரியின் னுரிபோர்த்துழல் கள்வன் சடைதன்மேல்
வானியன்ற பிறைவைத்த வெம்மாதி மகிழும் வலிதாயந்
தேனியன்ற நறுமாமலர் கொண்டுநின் றேத்தத் தெளிவாமே.

கண்ணிறைந்த விழியின் னழலால் வருகாமனுயிர் வீட்டிப், பெண்ணிறைந்த வொருபான் மகிழ் வெய்திய பெம்மானுறை கோயில், மண்ணிறைந்த புகழ் கொண்டடியார்கள் வணங்கும் வலிதாயத், தண்ணிறைந்த பெருமான் கழலேத்த நம் முன்மைக் கதியாமே. (எ)

கடலினஞ்ச மமுதுண்டிமையோர் தொழுதேத்த நடமாடி
அடலிலங்கை யரையன் வலிசெற்றருளம்மா னமர் கோயில்
மடலிலங்கு கமுகின் பலவின் மதுவிம்மும் வலிதாயம்
உடலிலங்கு முயிருள்ளளவுந் தொழவுள்ளத் துயர் போமே. (அ)

பெரியமேரு வரையே சிலையா மலைவுற்றா ரெயில் மூன்றும்
எரியவெய்த வொருவன் னிருவர்க்கறி வொண்ணா வடிவாகும்
எரியதாகி யுறவோங்கி யவன் வலிதாயந் தொழுதேத்த
உரியராகவுடையார் பெரியாரெனவுள் குமுலகோரே. (கூ)

ஆசியார மொழியார மண்சாக்கியரல்லாதவர் கூடி
ஏசியீரமிலராய் மொழிசெய்தவர் சொல்லைப்பொருளென்னேல்
வாசிதீரவடியார்க்கருள் செய்துவளர்ந்தான் வலிதாயம்
பேசுமார்வமுடையாரடியாரெனப் பேணும் பெரியோரே. (க0)

வண்டுவைகும் மணமல்லிகை சோலைவளரும் வலிதாயத்
தண்டவாணனடியுள் குதலாலருண்மாலைத் தமிழாகக்
கண்டல்வைகு கடற்காழியுண் ஞானசம்பந்தன் றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசை பாடவல்லார் குளிர்வானத்துயர் வாரே.

திருச்சிற்றம்பலம்.

---

சுப்பிரமணியக்கடவுள் வரப்பிரசாதியாகத்
திருவண்ணாமலையி லெழுந்தருளியிருந்த
அருணகிரிநாத சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

# திருப்புகழ்.

## திருவலிதாயம்.

மருமல்லி யார்குழலின் மடமாதர்
மருளுள்ளி நாயடிய னலையாமல்,
இருநல்ல வாகுமுன தடிபேண
இனவல்லமான மன தருளாயோ;
கருநெல்லி மேனியரி மருகோனே
கனவள்ளியார் கணவ முருகேசா
திருவல்லி தாயமதி லுறைவோனே
திகழ்வல்லமா தவர்கள் பெருமானே.

---

பாடியெனவழங்கும் இத்தலத்திற்கு, வலிதாயம், முல்லைவனம், இந்திரபுரி, பிரமபுரி, பங்கயபுரம், சுருபபுரம், அஷ்டாதசாப்பதி, மீளிநகர், வன்னீச்சரம், ஆதித்தபுரம், சிவபதிநகரம், பஞ்சாக்கரப்பதி, முத்திநகர் எனத் திருநாமங்கள் உண்டு.



சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளுக்குத் திருவலிதாயத்தின் மகிமையை யெடுத்துரைத்தது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பாடியென வழங்கும்

# திருவலிதாயபுராணம்.

## காப்பு.

### வாசித்தி விநாயகர்.

ஆரசித்தி சாமுகம னைத்தினிது மேசெல்ல வயவருக்கப்
பரசித்தி வாய்க்தொளிர வமரர்பணி பரிந்தேத்திப் பாடியாட
வரசித்தி மிகக்கருளும் பசிநானிருழ் வலிதாயத் தமர்ந்தருளை
வரசித்தி விநாயகனை யெந்நாளு மேபணிந்து வந்திப்போம்.

### வலிதாயநாதர்.

பொலிதாயதுக்கொன்றை நன்னீமுடிமர்த்தருளிப்புகழ்பலி த்த, பலிதாய மேனிதிகழ்மெய்யன்பர் பணியேற்றுப் பன்னாடனாரின், மலிதாய வினையகற்றி ஸினைத்தவையெலாமருளியன்னி வாழும், வலிதாயநாதனிரு செங்கமலப் பொற்பாதம் வாழ்த்து வோமால்.

### தாயம்மை.

வேயம்மையுறழ்குலவுத்தோளினிருபாக்கரி னுய்வினங்கி னீறு, பாயம்மை யறப்பருகு மலைமகளென்னலாமகன்பக பகர்ந்திறைஞ்ச, வாயம்மை மலர்ந்தருளாதருளையிரு கட்கனிப்பால் வழங்கிக்காக்கும், தாயம்மையினைப்பரவியும்மையினையிம்மையினிற்சாடிவாழ்வாம்.

### சுப்பிரமணியர்.

தென்னியசெந் தமிழ்க்குழகாய் விளக்குறாகற் றிருப்புகழைத் தினமும் பாடி, யுள்ளுருகு மன்பர்மனை முவகையுறவுயர் செல்வமோங்கச்செய்து, வள்ளிதெய்வயானையிரு மருங்கினிலுமேயிலக வந்து காட்சி, புள்ளிமயின் மேவருளுஞ்சண்முகனிரு சரணைப்போற்றுவோமால்.

### சமயகுரவர்.

சிவபெருமான்றிருவடியேதமக்குரிய செல்வமெனச் சிந்தித்தேத்தி, வையமுறச்செந்தமிழ் மொழியிலிசை மலியத்திருமுறைக ணவின்றுதீய, வவனிதனைப்புன் சமயமெக் குறவற்புதங்கள் பலவழியிற்செய்த, தவமுனிவ ராய்விளங்கு நம்நால்வர் பொற்சரணைச் சாற்றுவோமால்.

## நைமிசாரணியச் சருக்கம்.

செந்தாமரைப்பூம் பொருட்டில் அரசு வீற்றிருந்தருளும் சிருட்டி கர்த்தாவாகிய பிரமதேவனிடத்திற் சன்மார்க்கமாகிய சைவசமயாசாரநெறியினரான சில முனிவர்கள் பூர்வகாலத்திற்சென்று வணங்கித்தாங்கள் தவஞ்செய்தற்குத்தக்க இடந்தெரிவிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். நான்முகக்கடவுள் ஒரு தருப்பையினை நேமியாக (சக்கரமாக) வளைத்து உருட்டிவிட, அதன்பின்னே ஞானத்திற் சிறந்த முனிவர்கள் சென்று அந்த நேமிதங்கிய நைமிசவனத்திலிருந்துகொண்டு அனந்த கல்யாணகுணசம்பன்னரான சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில் அவ்விடத்தில் வைதிக சிகாமணியாகிய வியாசரது மாணாக்கர் சூதமாமுனிவர் நாவினுக் கருங்கலமாகிய நமசிவாய மந்திரத்தை யுச்சரித்துக் கொண்டே வரக்கண்டு, பரமசந்தோஷத்து டெதிர்கொண்டு சென்றழைத்துவந்து, ஆசனத்தின்மே லெழுந்தருளச்செய்து அர்க்கியபாத்தியம் ஆசமனீய முதலியதந்து சமீபத்திலிருந்து விண்ணப்பஞ் செய்வாராயினர். சிவபக்த சிரோமணியே! தேவர்கள் எப்போதும் அமுதத்தினையே விரும்புகிறார்கள். அதுபோல நாங்கள் எப்போதுஞ் சிவசரித்திரத்திலேயே ஆசையுடையவர்களாயிருக்கின்றோம். ஆகலின், தேவரீர் முன்னொருகாலத்தில் தேவாதி தேவனாகிய சிவபெருமானது தலமான்மியங்களைத் திருவாய்



மலர்ந்தருளியபோது இரத்தினவனத்திற்குச் * சமீபத்தில், அன்பர்க்கு அகண்டசெல்வத்தினை யளித்தருளும் 'திருவலிதாய' மெனவோர் தலமுண்டெனச் சொல்லியிருந்தீர். அத்தலத்து மான்மியத்தினை யிப்போது விரும்புகின்றேமென்றனர். சூதமாமுனிவர் கேட்டு அஞ்சலித்து ஆனந்தக் கண்ணீர்சோர முனிவர்களை நோக்கிச் சொல்லுவாராயினர். தவநெறியிற்சிறந்த பெரியோர்களே! அமுதபானம் நரைதிரைமூப்பைப் போக்குவதேயன்றி முத்தியைத்தருவதன்று. சிவதலமான்மியமோ, நரைதிரை மூப்பைத்தருவதாகிய தேகபந்தத்தை யொழித்து முத்தியைத்தரும் அதிசயத்தை யுடையது ஆகையால், இப்போது ஆதியந்தமில்லாத சிவபெருமான் அமர்ந்தருளும் அந்தத் திருவலிதாய மான்மியத்தினைச் சொல்ல நேர்ந்த என் புண்ணியமே புண்ணியம். காசி, காளத்தி, கருவூர், காஞ்சி, பேரூர், ஆரூர், புகலூர், தில்லை, வன்னிக்குன்றம் மணிக்குன்றம், சம்புநாத முதலிய தலங்களினுஞ் சிறந்து விளங்குவது. இந்நகரில் வசித்தோர், வந்தோர், பிறந்தோர், இறந்தோர், வலம்வந்தோர் யாருமுத்தியடைவர். நாயேனை யடிமையாகக்கொண்ட திருவலிதாயநாதனது சரணாரவிந்தங்களைச் சோமவாரமாதி விசேடதினங்களிற் பூரணபத்தியுடன் தொழுது வணங்குகின்றவர்கள் சகலசம்பத்துடனே யுலகில் பலநாள் வாழ்ந்து பின்னர் நவரத்தினசோதி விமானத்தின்மேலேறிக்கொண்டு அரம்பையர் வெண்சாமரைப்போடவும், அமரர்கள் போற்றவும், பலவாத்தியங்கள் மெல்ல முழங்கவும், தேவேந்திராதி தேவர்கள் இவ்வளவு வைபவம் நமக்கில்லையே யென்று பொறாமை யடையவும்,

* வடதிருமுல்லை வாயலுக்குக் கிருதயுகத்தில் இரத்தினவனம் என்றும் திரேதாயுகத்தில் வில்வவனம் என்றும், துவாபரயுகத்தில் சண்பகவனம் என்றும் கலியுகத்தில் மாலதி (முல்லை வனம் என்றும் பெயர்.)


மகிழ்ந்துசென்று சிவலோகத்தையடைந்து சிவானந்த போகத்தை யநுபவிப்பார்கள். இத்தலத்திற் செய்யும் தருமமொன்று கோடியாக வளரும். இத்தலத்திற்குப் பாடி, முத்திநகர், முல்லைவனம், பஞ்சாக்கர பதி, தருமபுரம், அஷ்டாக்ஷரபதி, பங்கயபுரி, இந்திரபுரி, ஆதித்தநகர், நிசிநகர் எனப் பலபெயருண்டு. இத்தலத்தின் மகிமை முழுவதினையும் என்னொரு நாவாற் சொல்லுந்தரமன்று. ஆயினுஞ் சம்புசப்த வார்சியார்த்தராய் விளங்குஞ் சிவபெருமானாகிய வலிதாயநாதன் திருவடிகளை என்மனதிற் சிந்தித்துக் கூடியவரையில் சொல்லுகின்றேன்; ஒருமனதாய்க் கேளுங்களென்று போதசாகரமாகிய சூதமாமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

நைமிசாரணியச் சருக்க முற்றிற்று.

---

## கமலவல்லியர் பூசித்த சருக்கம்.


சிவயோகிகளே! சதுர்முகக் கடவுளாகிய பிரமதேவன் புத்திரிகளாகிய கமலை, வல்லி யென்னு மிருவர்கள் சாமலோக வாதாராபூதனாகிய பரிபூரண சச்சிதாநந்த சிவபெருமானைத் தங்கட்குக் கணவனாகக் கொள்ளக் கருதித் தங்கள் தந்தையினை யடைந்து நமஸ்காரஞ்செய்து எங்கள் பிதாவே! நாங்கள் மனதில் கொண்டிருக்கும் சங்கர்ப்பமானது எங்கட்குப் பலிக்க வேண்டுமானால் நாங்கள் செய்யவேண்டிய காரியமென்ன கட்டளையிட்டருள வேண்டுமென விரைந்துகேட்க நான்முகன் தனது புத்திரிகளை நோக்கிக் குழந்தைகாள்! நீங்கள் கொண்டவெண்ணம் மிக வருமையானது யாரும் வியக்கத்தக்கது. அது இலேசில் முடியக்கூடியதன்று. ஆயினும் எவர்கட்கும் எத்தகைய சித்தியும் வெகு சீக்கிரத்தில் அடைய விரும்பினால் சிவலிங்க பூஜையே தக்கது. அத்தகைய பூசை உள்ளங்கை



திருவலிதாயத்தில் பிரமபுத்திரிகளாகிய, கமலை, வல்லியிருவரும் பாதிரி வருக்ஷத்தின்கீழ் சுயம்புலிங்க மூர்த்தியை அர்ச்சித்து ரிஷபாரூடரை தரிசித்த ஐதீகம்.

செல்வக்கனிபோ லுதவும் என்றனர். இதனைக்கேட்ட
கமலையும், வல்லியுந் தந்தையிடத் தாவிடைபெற்று,
அதி விரைவாகத் தென்றேச நாடி மிகவலங்காரமும்
அழகும் வாய்ந்த உன்னதமான விருட்சங்களா லடர்
ந்த ஒரு வனத்தினை யடைந்து தவஞ்செய்து வருநாளை
யில் எம்பெருமான் திருவருள் கூர்ந்து காட்சி கொடு
த்துப் பெண்மணிகாள்! உங்கள் கோரிக்கை யென்ன
வென அவர்களெழுந்து வணங்கி ஐயனே அடியேங்
தேவரீரை விவாகஞ் செய்துகொள்ளக்கருதி இவ்விர
தம் பூண்டுள்ளோம் அடிமைகளை ஆளுதியெனலும்,
சிவபெருமான் கலகலெனநகைத்துப் பாவையீர்! நாம்
நமது தேகத்தினைப் பார்வதியாருக்குப் பகிர்ந்து
கொடுத்து விட்டமையின், இனி வேறொருவரை மண
ஞ்செய்யோம். ஆயினும் நீங்கள் விரும்பி யியற்றிய
தவத்திற்குப் பலன்கொடுக்கவேண்டி யிருத்தலின்
சொல்லுகிறோம் கேட்பீராக. நம்முடைய ஆனந்தவடி
வமாய்ப் பிரணவசொரூபியாய் நம்மைக்காட்டி லுஞ்
சிறிதும் வேறுகாது விளங்கும் விநாயகமூர்த்தி சில
காலத்துள் இத்தலத்தினை யடைவன். அவனை விவா
கஞ்செய்து கொள்வீராக அதுகாறும் இவ்விடத்தி
லேயே வாழ்ந்துகொண்டிருப்பீராக, இன்னம் வேண்
டியவற்றைக் கேட்பீராகவென, மாதர் அஞ்சலித்து
அண்ணலே! எங்கட்கு அறுதியா யுள்ள பாசமனைத்
து மொழியவேண்டும் இத்தலம் எத்தலத்திற்கு மாதி
தலமாக வேண்டுமென, அங்ஙனமே வரமளித்து அவர்
கட்கு அவர்கள் தவமியற்றிய பாடல விருட்சத்தின்
கீழ் சுயம்பு மூர்த்தியாகச் சிவலிங்கமாயினார். அவ்வரி
வையர்கள் அப்போது இருவரும் பாலிநதியில் ஸ்நா
னம் செய்து விபூதி உருத்திராட்சம் பூண்டு, பாடல
விருட்சத்தின் கீழே பூசைசெய்வதாகச் சங்கற்பஞ்
செய்துகொண்டு புட்பசுத்தி முதல் பூதசுத்திவரையுஞ்
செய்து மானத பூசைபுரிந்து மணமலரும் வாசனைத்

திரவியமுங் கலந்த தெள்ளுநீரால் பாத்தியம், ஆச
னம் அருக்கியங்களைப் பரிசுத்தமாக்கிச் சத்தியா
சருக விளங்க வாய்த்திருக்கும் ஆசனத்தின்மேல் வீ
ற்றிருக்கின்ற சதாசிவ மூர்த்தியாய் எங்கும் நிறைந்
திருக்கும் பரஞ்சோதியானவரும் திருவலிதாயத்தி
திருவிளக்காக விளங்குகின்றவரும் அடி நடுமுடி யி
லாமல் எங்கும் வியாபித்திருக்கின்ற அகண்ட பரிபூ
ண விமல நித்தியானந்தச் செல்வருமாகிய வலிதா
நாதனை, அஞ்ஞான விருளைப் பிளக்கு ஞாயிய வல்
மெய்ஞ்ஞானக்கண்ணால் கண்டு தெளிந்து துதிசெய்
பாதங்களில் பாத்தியமும், திருமுகத்தில் ஆசம
மும் திருமுடியில் அருக்கியமுங் கொடுத்து மதுபரு
கம் அளித்துச் சிவாகம விதிப்படி மறுபடியும் ஆச
னங் கொடுத்து நெய்யும் பாலுங் கலந்து சமைக்க
பட்ட திருவமுதளித்துத் திரு எண்ணெய்க்காப்பு
திருநெல்லிக்காப்பும் திருமஞ்சட்காப்புமிட்டுப் பஞ்
சகவ்வியத்தாலும் பஞ்சாமிர்தத்தாலும் பலகுடங்களி
னிறைந்திருக்கும் பாலாலும், தயிராலும், நெய்யாலு
இளநீராலும் அபிஷேகஞ்செய்தும், கரும்பின் இரச
தால் அபிஷேகஞ்செய்தும், பல கனிவகைகளால் அ
ஷேகஞ்செய்தும், சந்தனாபிஷேகஞ் செய்தும், பரிசு
த நீர்த்தத்தால் உருத்திர மந்திரத்தைச் சொல்
விதிப்படி பூரணாபிஷேகஞ் செய்தும் மெல்லிய நூல்
டையெடுத்துத் திருமேனியை மெத்தென்று ஒற்றி
தேவர்களும் விரும்பத்தகுந்த செம்பட்டாடையு
வெண்பூணூலும் சாத்தியும் பூஷணவர்க்கங்களையும்
மாலைகளையும் அணிந்தும், தூபதீபங்காட்டி அறுசுவை
யமைந்திருக்கும் நால்வகை யுண்டிகளைத் திருவமுத
செய்வித்துச் சீத சலங்கொண்டு திருக்கைகளையு
செம்பவளத் திருவாயையும் பூசி, மந்திரஞ்சொல்லி
தாம்பூலமும், தக்ஷிணையு மளித்துத் தீபதூபங்க
யெல்லாம் முறையாகக்காட்டி, மனமகிழ்ந்து, திரு





டிப் பரிகாரமென ஆராத்தி சுழற்றிப் பன்முறை பிரதட்சணம் பண்ணி வணங்கி வாழ்த்தி மனதினிடமாக மாறுதிருக்கும் பஞ்சாட்சர மகா மந்திரத்தினைக் கணித்து இவைபோல்வனவெல்லாஞ் செய்து பேரன்புடன் பூஜையைப் பூர்த்திசெய்து வாழ்ந்து வந்தனர். இவ்விருவரும் காமியமாகத் தவஞ் செய்தமையின் இத்தலத்திற்குக் காமியவன மெனவும், முல்லைமலர் கொண்டு அருச்சித்தமையின் முல்லைவன மெனவும் வாய்த்தது.

கமலவல்லியார் பூசித்த சருக்க முற்றிற்று.

## விநாயகர் விவாகச் சருக்கம்.

சிவஞானச் செல்வர்களே! முன்னொரு காலத்தில் தேவர்களொருங்கு கூடி, தவத்தாற் பல வரங்களைப் பெற்றுத் தன்னிகரின்றி வாழ்ந்த அமுகாசுரன் உபத்திரவம் பொறுக்கமாட்டாது கவலையடைந்து சிவபெருமான் சந்நிதானத்தில் விண்ணப்பிக்க, அவர் கருணைகூர்ந்து அவ்விடுக்கணைச் சீக்கிரம் நீக்கியருளுவதாகக் கூறி யவர்களை யனுப்பியபின், தேவர் பெருமான் தன் பத்தினியாகிய பார்வதியுடன் கைலையிலொருபாங்கர், ஓவியம்பல தீட்டியிருந்த ஒரு மண்டபத்தில் எழுந்தருளி வேடிக்கைப் பார்த்து வருகையில் ஒரு பக்கத்தில் எழுகோடி மகாமந்திரங்கள் சூழ வீற்றிருக்கும் பிரணவமனுவினைக் கண்டு பார்வதியார் இதையென்னவெனக் கேட்க, சுவாமி, பெண்ணே! இவ்விரண்டு மனுக்களே வேதாகமங்க ளுற்பத்தி யாவதற்குக் காரணமாயுள்ளன. அது சத்திப்பிரணவம் இது சிவப்பிரணவ மெனக்கூறி இருவருமுறையே இருமந்திரங்களை நோக்கித் தீட்சித்த மாத்திரத்தில், அவ்விரண்டு பிரணவங்களு மொன்றுட னொன்றாவ அவ்விரண்டினின்றும் சத்தி சந்தர்கள் உருவெடுத்திரண்டு வேழ

மாமுகமும் விளங்கு மைங்கரமும் பெருவயிறு நாலும் கியவிறு மிளிகளியமையுமாக விநாயகர் அவதரித்தனர். அம்மையப்பர் திருவரு ளவ்விநாயகரை யழைத்து மடியிலிருத்தி முத்தமிட்டுக் குழந்தாய்! நீ தேவர்கள் சங்கடத்தைத் தீர்க்கச் சென்று கயமுகனைக் கொன்று விண்டுவின் சாபத்தினை யொழித்து உன்னையே விரும்பித் தென்திசையில் தவஞ்செய்துகொண் டிருக்கிற பெண்களிருவரையு மணந்து வருக என்று இரண்டாயிரம் வெள்ளம் பூதகணங்களையும் அனேகமான வாயுதங்களையு முதவியனுப்பினர். விநாயகர் அசலனென்னு பூதன்மீதாரோ கணித்துக் கொண்டு கயமுகாசுரன் அரசுசெய்திருக்கும் மதங்க நகரத்திற் கருகில் வந்தனர். அசுரன் தெரிந்து வடவானலத்தைப் போற் கோபித்துச் சர்வாயுதபாணியாய்த் தேரிலேறி இராக்கத வெள்ளஞ் சூழ்ந்துவர இரணபேரி சயபேரி முதலிய வாத்தியங்கள் அண்டமு மதிரமுழங்கச் சென்று கணபதிக்கெதிரில் நெருங்கினன். அப்போது பூதப் படைகளும் அவுணவெள்ளங்களும் கோபாவேசராய் வெயிலும் இருளும் சேர்ந்ததைப் போலச் சீறிப் பாணங்கள் ஆயுதவகைகள் பருவதங்கள் முதலானவைகளை யொன்றனொன்றாக ஒருவர்மேலொருவர் பிரயோகித்துச் சண்டைகொடுத்த அவுணர்களில் பலர் மாளக் கண்டு மற்றவர்கள் எதிர்த்து நிற்கத் திறவாதமில்லாமற் பல திசையிலுமோடி யொளித்தார்கள். அத்தருணத்தில் பூதப்படைகள் ஜெயவுற்சாகத்துடன் பயமற்று மேலிட்டு வருவதைக் கயமுகன் கண்டு காளத்தைப்போற் சீறித் தேரை நடாத்திப் பூதப் படைகளின் மீது சரமாரி பொழிந்து சல்லடை கண்களாகத் தொளைத்து அதனுற்செய்யப் பூதப்படைகள் பின்வாங்க, அப்போது விநாயகர்மேற் கயமுகன் அக்கினிபோற் சீறித் தனது வில்லைவளைத்து அண்டங்களதிரக் குணத்தொனி செய்து அளவற்ற கொடிய பா



ணங்களைப் பிரயோகிக்க அவைக ளெரிந்து புகைந்து வருவதை விநாயகர் கண்டு தமது திருக்கரத்தில் விளங்கும் எழு வாயுதத்தினுற் பொடிசெய்து, அவன் கரத்திற்பற்றிய வில்லையுங் கண்டித்தார், பாதகன் வெகுண்டு மற்றொரு வில்லை யெடுத்து வளைப்பதற்கு முன்னங் கணபதி அதனையுந் துண்டிக்க, அவன் வலியதண்டமொன்றை எடுத்துச் சுழற்றி வீச, அதையுமழித்து அவன் மார்பு பிளக்க மோதினர். அதனுற் கயமுகன் கோபமுற்று நிற்பதைக்கண்ட இராக்கத சேனைகளும் படைத்தலைவரும் திரண்டு திவ்வியபாணங்கள், தண்டம், பிண்டி, பாலம், எழு, மழு முதலிய வாயுதங்களைச் சோனை மாரியைப்போலச் செலுத்தி, சிங்கநாதங்கள் செய்தார்கள். அப்போது கணபதி தமது திருக்கரத்திலிருந்த பாசத்தை வீசிப் படைகளையும் இரதகஜதுரகபதாதிகளையுங் கட்டி உடனே கணிச்சியைச் செலுத்திச் சின்ன பின்னப்படக் கண்டித்தார். அதைக் கயமுகன் கண்டு நடுங்கி வருந்திக் கோபமுற்றுப் பாசுபத முதலிய தேவபடைகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பிரயோகிக்க அவை நெருங்கி ஐயனுடைய பாதகமலங்களில் பணிந்திருப்பதை யறிந்து, கோபமும், மானமும் மனத்தினை வாட்ட ஒன்றுந் தோன்றாது கலங்கி யிருந்தான். அத்தருணத்தில் ஐங்கரக் கடவுள் அவன் ஆயுதங்களாற் கொல்லப்படாத வரத்தைப் பெற்றிருப்பதைத் தெரிந்து, தமது கோட்டொன்றை முறித்துச் செலுத்தினர். அது விரைந்துவந்து கயமுகனை யிருகூறாகப் பிளந்து தள்ளி வானத்தெழுந்து கங்கையில் மூழ்கிவந்து சிவகுமாரன் கரத்தில் நின்றது. கயமுகன் சிவபிரானிடத்திற் பெற்ற வரத்தினுல் அங்குப் பருத்தவடிவினையும், அக்கினியைப் போலச் சிவந்த கண்ணையும்பெற்ற பெருச்சாளியாகச் சீறிப்பாய்ந்து வரும்போது, அசலன் தோளிலிருந்த கணபதி அதன் முதுகி லாரோகணித்து, எந்நாளும் நம்மைச் சுமந்து

திரிவாயென்று நடந்தினர். இந்திரன் முதலியோர் ஐயன் புகழைப்பாடிக் குதித்து மலரைப் பொழிந்து தோத்திரித்து வாழ்த்தி, எங்களை யாட்கொண்ட தெய்வமே! நாங்கள் கஜமுகாசுரனுக்குச் செய்த பணிவிடைகளை தேவரீருக்கு நடத்தவிரும்பினோம். அவைகளை அங்கீகரித்துக் காக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அவர் மகிழ்ந்தனர். அக்காலத்தில் தேவர்கள் மும்முறைக் குட்டிக்கொண்டு செவிகளைப் பற்றிப் பாதங்களைச் சேர்த்துத் தாழ்ந்தெழுந்து போற்றி செய்து இறைவனே! இவ்வாறு உலகத்தவர்கள் நடந்து கொண்டால், அவர்கள் இஷ்ட சித்திகளையும் பூர்த்தி செய்துவிப்பாய் எனக் கேட்டுக்கொண்டனர்.

பின்னர், பிரமன் முதலியோருடு ஒரு பாலைவனத்தின் வழி வருகையில் ஒருமரத்தின் பொந்தில் குருட்டு மலைப்பாம்பாய்க்கிடந்த விஷ்ணுமூர்த்தி யானவர் தெரிந்து தன்சாப நீங்கப்பெற்று அம்மூர்த்தியினைக் கண்டு வணங்க அப்பெருமான் நாரணனை நோக்கி ஐய! நீ இவ்விடத்தில் வந்ததற்கு காரணமென்னை யென, திருமால் வணங்கி, ஓங்காரப்பொருளே! ஒருநாள் தேவரீருடைய தந்தையும் தாயாரும் ஒரு திருவிளையாட்டாகப் பகடசாலை யாடிவருகையில் என்னைச் சாட்சியாக வைத்தனர். அவ்விளையாட்டில் எமது பெருமான் தோற்றும் பாரசக்தி ஜெயித்தும், நான் மேல் வருவதை யுணராமல் சிவபெருமான் ஜெயித்தாரெனக் கேட்ட வம்மையார் கோபங்கொண்டு என்னைக் குருட்டுப் பாம்பாகப் போகக் கடவையென்று சபித்தனர். பரமேஸ்வரன் என்மீது கிருபைகூர்ந்து தேவரீர் இவ்வழியாக வருகிற வரையிலிவ்விடத்தி லிருக்கவும் தேவரீர் இப்பாலைவனம் வந்தவுடன் என் சாபம் விமோசனமாகு மெனவும் கட்டளையிட்டிருந்தனர். அங்ஙனமே இன்று சாப நீங்கித் தரிசிக்கப் பெற்றேனென்று கூறி




விடைபெற்றேகினார். அதன்பின் விநாயகர் தென்றிசை நோக்கிவந்து கொண்டிருக்கையில் பற்பல மலர் பத்துத் திசையிலும் பரிமளம் வீசத் தகுந்த முல்லை வனத்தினை யடைந்து அவ்விடத்தினையே பாடி விடாகக் கொண்டு தமது சேனையையும் ஆயுதங்களையும் அவ்விடம் வைத்துப் பாரிடங்களின் பரிவிர்த்து அவ்வனத்தில் பாடலி விருட்சத்தின் கீழ் தவஞ்செய்து கொண்டிருக்கும் பிரமன் புத்திரிகளைக் கண்டு தரிசனந்தந்து அவர்களை ஞானவுருவாக்கிப் பாவையரே! நீர் நம்மை நோக்கி இவ்விடம் தவம் புரிந்தமையின் இத்தலம் முத்திகரமென வழங்குவதாக நாமின்றைக்கு இப்பாடல விருட்சத்தின் கீழெழுந் தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானைப் பூசிப்போம் வம்மினென்றழைத்துக்கொண்டு அஷ்டமியின்று பூசைசெய்ய வாரம்பித்தனர். அம்மாதர்கள் இருபுறத்தினுமிருந்து சிவ பூசைக்கு வேண்டிய உபகரணங்களை யெடுத்துக் கொடுக்க விநாயகர் கனிரசம் நெய் பால் தேன் முதலிய கொண்டு அபிடேகித்து மல்லிகை, முல்லை, சண்பகம், அரவிந்தம், கூவிளம், குவளை, புன்னை, பாரிசாதம், கொன்றை, பாடலம், கெய்தல், மகிழம், நந்தியாவட்டம், அறுகு, தும்பை, குடமல்லி, விருட்சி, பன்னீர், முதலிய மலர்களைக்கொண் டருச்சித்து அறுசுவையுடன் கூடிய போனகம் படைத்து பலவாறு தோத்திரித்து, விடைபெற்று பிரமன் புத்திரிகளைக் கணேசமூர்த்தி அத்தலத்திலேயே விவாகஞ் செய்துகொண்டு சிவகான் தம்பி அம்மாதர்களுடன் கைலையை யடைந்தனர்.

விநாயகர் விவாகச்சருக்க முற்றிற்று.

## பரத்துவாசர் ஜநித்த சருக்கம்.

சிவானந்தச் செல்வர்களே! சகல கலைகளிலும் வல்லவராகிய உதத்தியர் என்னுமோர் முனிவரும், அவரது மனைவாழ்க்கைக்குரிய கற்பினிற் சிறந்த மமதையென்பவளும் இல்லறவாழ்க்கை நெறிதவறுபல் நடத்திவருகையில், புத்திரப்பேறின்மைப் பரிபூரண சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமானை நோக்கித் தவங்கிடக்க, மமதையென்பவள் கருப்பம் வாய்ந்தனள். அதிரூப சவுந்தரியவதியான அம்மமதையின் பரியகூந்தலினையும், பவளவாயினையும், மதுரமான சொல்லினையும், தேமற்படர்ந்த தனங்களினையும், தளிர்போன்றகைகளினையும், விசாலமான அல்குலினையும், உதத்திய முனிவரின் தம்பியாகிய வியாழ முனிவர் கண்டு அவள் தனித்திருக்குஞ் சமயத்தில் அவளைச் சமீபித்து இங்கித சரச சல்லாபபோக வார்த்தைகளை நயமாகப் பேசித் தன்னை யணையும்படி இரக்கத்துடன் வேண்டிக்கொண்டனர். அவள், தனது மைத்துனனை நோக்கிக் கொழுந்தனே! நீ இங்ஙன நினைத்தல் தகாத காரியம் இதனால் நான் கற்பிழந்தவளாகிவிடுவதே யன்றி, உன்றனக்கும் உன்றமையனுக்கும் பகை விளையும், தமையனுக்குப் புத்திரப்பேறில்லாத காலத்தில் தம்பியைக்கொண்டு புத்திரனை உண்டாக்கிக் கொள்ளலாமெனல் இந்தயுக தருமமாயினும், நானிப்போது உன் தமயனுக்கே கருப்பம் வாய்ந்திருக்கின்றேன். ஆதலின் அடாதகாரியத்திற் பிரவேசிப்பது அழகன்று. பாவத்தினையும் பழியினையும் பழிப்பினையுந் தேடிக்கொள்ளுதல் நம்மரபிற்கு நன்மையோ என்றனள். வியாழபகவான் தனது மதனியார் வார்த்தைகளைச் சிறிதுங் கவனியாது மேல்விழுந்து, வலாத்காரமாகப் புணர்ந்தனர். அப்போது மமதையின் கருப்பத்திலிருந்த சிசுவானது சிவானுக் கிரகத்தா லற்பத்தியா யிருப்ப




பரத்துவாசர் சிவபெருமானைப் பூசித்து ரிஷிபாருடனரைத் தரிசித்து, சுவாமிபெயர் வலிதாயநாதரெனவும் தான் எடுத்ததீர்த்தம் பரத்துவாச தீர்த்தமெனவும், இது வலிதாயத் தலமெனவும் வழங்க வரம்பெற்றது.

னால், இவ்வுண்மை தெரிந்துகொண்டு, வியாழ முனியின் வீரியத்தை முன்னே பிரவேசிக்கவொட்டாது தடுத்து வெளிப்படுத்தி விட்டது. வியாழமுனிவரிது தெரிந்து கருப்பத்தி லிருக்கும் குழந்தை குருடாகப் போகக்கடவது என்று சபித்தனர். வெளிப்பட்ட வீரியம் தேவ குருவாகிய வியாழபகவானுடைய தாகயின் அது வீணாகாதபடி தேவர்கள் ஒரு பரத்துவாசபட்சியினை* யுண்ணும்படி செய்தனர். அப்பறவையினின்றும் பரத்துவாச முனிவர் † பிறந்தனர். மமதை வயிற்றினின்றுங் குருடாகப் பிறந்த தீர்க்கதமுனிவர் சிலகாலக்குப்பின்னர், தனது சிறிய தந்தையாராகிய வியாழமுனிவரை நோக்கித் தந்தையே! நீ சிறிதும் விவேகமின்றி மெய்ந்நியைப் புணர்ந்ததல்லாமல் என்னையும் அந்தகனாகப்போம்படி சபித்தாய். ஆகையால், உன்மனைவி புன்மாருக்க ‡ னொருவன்பால் புத்திரனைப்பெற்றுக்கொள்ளக்கடவள் என்றனர். பின்பு பிரகஸ்பதியாகிய, வியாழபகவானுக்குப் பிறந்த பரத்துவாசர் பறவையினிடமாக வுதித்த தனது ஜென்மத்திற்குக்காரணமான வினையினை நினைந்து நினைந்து துக்கித்துத் தலயாத்திரை செய்யக்கருதிப் புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலுள்ள சிவதலங்களை யெல்லாந் தரிசித்துக்கொண்டே தென்றிசைநோக்கி வருகையில், அரும்புகளையும், மலர்களையுமுடைய சோலைகளாலும், சண்பகவிருட்சங்களாலும், வரிசைவரிசையான தென்


---

* பரத்துவாசம்=கரிக்குருவி. இது வலியனென்றும், கருங்குருயா னென்றும் வழங்குகிறது.

† சதாசிவமூர்த்தியினது திருமுகங்களிலுண்டான பஞ்சவிருடிகளி லொருவராகிய பரத்துவாசர் இவரன்று.

‡ இச்சரித்திரம் திருவான்மியூர்ப் புராணத்துச் சந்திரன்காமநாசப்படலத்திற் காண்க.

ளமரங்களாலும், வாழைகளாலும், சூழப்பட்ட தா
மரை மிகுந்திருக்கும் சுனைகள் நிறைந்த வொரு வன
த்தினைக்கண்டு அதில் வேதரூபமாகிய கொன்றை விருட
சத்தி னடியின் சுயம்புவாக வெழுந்தருளி யிருக்கு
மொரு சிவலிங்கப்பெருமானைத் தரிசித்தவுடன் தனது
மனதிலிருந்த சஞ்சலமெலா நீங்கி, ஆனந்த மேலிடக்
கண்டு ஆச்சரியமடைந்து அவ்விடத்திலோர் தீர்த்த
முண்டாக்கி வெகுகாலம் அப்பெருமானைப் பூரண
பத்தியுடன் பூசித்துக்கொண்டிருந்தனர். ஓர்நாள்
சர்வ சகத்காரணப் பிரபுவாகிய சிவபெருமான் தரும
தேவதையான இடபவாகனத்தின்மேல் மாங்குயில்
போல் மதுரவசனங்களை வசனிக்குமுமையவள் சமே
தராய் விநாயகர், சுப்பிரமணியர், திருநந்திதேவர்,
முனிவர்கள் சூழக் காட்சிகொடுத்தருளினர். அரிய
யற்கு மரிய திருவடிகளைப் பரத்துவாசமுனிவர் தரி
சித்து அடியற்ற மரம்போற் கீழேவிழுந்து எழுந்து
வலம்வந்து கூத்தாடி இருகரங்களையு மஞ்சலித்து,
ஆனந்தபாஷ்பஞ் சொரிய ஏ சங்கரா! சதாசிவா! சம்
போ! சசிதரா! கங்காதரா! கங்காளா! கண்ணுத
லோய்! கபாலீ! கறைமிடற்றோய்! காமாகா
காலகாலா போற்றி போற்றி யென்றிரந்தவுடன், அடி
யார்க்கருள்சுரக்கு மண்ணல், "சூழ்ந்தாய்! நின் பூசை
யை ஏற்றுக் களிப்புற்றனம். உன் மனதிலுண்டா
யிருக்கும் கவலையை யொழிக. உன் சிறப்பை யுன்னி
யினியாரு முன்னை மிகழார்கள். நீ முனிவர்கட்குள்
நாயகமாக விளங்குக. அரசர் குருவாகத் துரோணாச்
சாரிய னென்னு மோர் மைந்தனைப் பெற்றுச்சுகமாக
இருக்கக் கடவை" என ஆசிமொழிந் தருளினர்.
பரத்துவாசர் சுவாமியை நோக்கிப் "பெருமானே!
அடியேனுடைய பூசையினை யுரிமையாக ஏற்றுக்கொ
ண்ட தேவரீருக்கு வலிதாயநாதன்" என்றும் இவ்






விடத்திற்குப் பலிதாயத்தலம் * என்றும், என்னுலெடுத்த தீர்த்தத்திற்குப் பரத்துவாச தீர்த்தம் என்றும் வழங்கவேண்டும். இத்தலத்திற்கு வந்து தரிசிப்பார் எத்தகைய பாவிகளே யாயினும் அவர் பாவங்களை யொழித்துச் சகல வைஸ்வரியங்களையும் அவர்களுக்குக் கொடுத்தருளவேண்டும்' எனப் பிரார்த்தித்தனர். "அவ்வண்ணமே யாகுகவென் றருள் சுரந்து சாமகண்டனாகிய சிவபெருமான் பெருங்கருணைக் குடிகொண்டிருக்கும் பெருமாட்டியுடனே அந்தர்த்தானமாயினர். தீர்க்கதமுனிவரும் வலிதாயமடைந்து தவஞ்செய்து பூசித்துத் தன் கண்களைப் பெற்றனர்.

பரத்துவாசர் பூசித்த சருக்கமுற்றிற்று.

---

## தேவகுரு காமநாசச் சருக்கம்.

சைவாசாரத் தல்லியர்களே! தேவர்கட்கெல்லாம் ஆசிரியத் தலைமைபூண்டு விளங்கும் பிரகஸ்பதியாகிய வியாழபகவான், தனது தமையன் உதத்திய முனிவரது மனைவியாகிய மமதையைச் சேர்ந்து பரத்துவாசரைப் பெறுவதற்குக் காரணமாகவிருந்து தனது கருமத்தினை யெண்ணி யெண்ணி மனத்துயர மிகவடைந்து அநுதாபப்பட்டுப் பரிகார மொன்றுந் தோன்றாது சித்தாகுலத்தை யுடையரா யிருக்கையில், அச்சமயம் அங்குச் சிவபெருமான் திருவுருக் கொண்டாற்போல் முழுநீறு பூசிய மார்க்கண்டேய முனிவர் சமீபிக்க, உடனே வியாழமுனிவ ரெழுந்து அடிதொழுது

---

* பலி = பூசை = தாயம் = உரிமை. பலிதாயநாதர் = பூசையை யுரிமையாகக் கொண்டவர். பலிதாய மென்றது—தமிழில் வலிதாய மென்றாயிற்று. வலியன்—தாயம், வலிதாய மெனினும் பொருந்தும். வலியன் = பரத்துவாசர்.

கைகூப்பி நின்றிட, ஆசிர்வதித்து "ஓ தேவகுருவே! நின்முக கமலம் வாட்ட முற்றிருப்ப தென்னை?" என்றனர். தாரைத் தலைவனும் பிரகஸ்பதி நடந்த விருத்தாந்தங்களை யெல்லாமறிவித்து, "அப்பா உன்னை என்னிஷ்ட தெய்வந்தான் கொண்டுவந்து விட்டது. எனக்கு நீயே ஆணை செய்யவேண்டும்." என்றும் கூறக் கேட்டு, மறலியை வென்ற மார்க்கண்டேய முனிவர் சொல்லுவாராயினர். "முனிவரனே! நீ என்னகாரியஞ்செய்தனை? ஒரு பெண்ணின் கற்பினைக் கெடுக்கும் பாவமோ கொடிது! கொடிது! காமத்தினை யடக்கியவன்பவனே ஞானி யெனப்படுவன். காமத்தால் இந்திரன் ஆயிரங் கண்ணனானான். காமத்தாற் சூரியன் கண்ணிழந்தான். காமத்தாற் கவ்னான் பல பிறவியடைந்தான். ஆதலின் காமத்தால் விளையுங் கெடுதிகள் பல. உனக்குங் காமத்தாலுண்டாகிய பாவத்தினை யொழிக்க வோர் சூழ்ச்சி சொல்லுகின்றேன் கேட்பாயாக. இப்பாவம் சமஸ்த சரீர அந்தராத்மாவாக விளக்குஞ் சிவபெருமான் அருள் கிடைத்தாலன்றி யொருபோதும் நீங்காது. அத்திருவருள் மெய்யன்புடனே பூசைசெய்தலால் வரும். அப்பூஜை சிவலிங்கப்பூசையேயாம். அப்பூஜை செய்தற்குரிய இடம் சிவதலங்களேயாம். அத்தலங்களில் விருத்தக்ஷீரநதிதீரத்தில் தப்புயர் வில்வமோங்கும் திருவலிதாயமே மிகச்சிறப்புடைத்து. அத்தலத்துப் பெருமானைப் பூசைசெய்து தேவர்களும் முனிவர்களு மற்று மியாவரும் பெரும்பேறுபெற்றுப் பேரின்ப மடைந்தினி தாய்ந்தனர். மோட்சத்தினைக் கைவல்லியமாகப் பெறுதற்கு இந்தத்தினைக் காட்டிலும் வேறுதலமுண்டோ? இல்லை! இல்லை! அத்தலம் தென்றேயத்தில் இரத்தின வனத்திற்கும் * வேலவனத்திற்கும் மத்தியிலுள்ளது. அங்

* வேலவனமென்பது திருவேற்காட்டினை.



குச்சென்று பூசிக்கக்கடவை" எனக்கூறி விடைபெற்றேகினர்.

தேவகுருவானவர் சிவபக்தியிற் சிறந்த மார்க்கண்டேயர் கட்டளைப்படி நவரத்தின மயமாய் விளங்கும் திருவலிதாயமடைந்து, நீராடி, நித்யானுட்டானமுடித்துத் தேகமெல்லாம் நீறணிந்து நெற்றியில் திரிபுண்டரமிட்டுக் கண்டமுதலிய வங்கங்களில் உருத்திராக்கமாலிகை தரித்து, மாசில்லாது புகழ்பெற்றோங்கும் திருவலிதாயத்தி லெழுந்தருளி யிருக்குஞ் சோதிலிங்கப் பெருமானை இதயாரவிந்தத்தில் ஆவாஹனஞ்செய்து, வந்தனை வழிபாடு புரிந்துகொண்டிருக்கையில் திருவருள் கூர்ந்து, உலகமாதாவாகிய உமையம்மையுடன் சம்பு சப்த வாச்யனான சிவபெருமான் எதிரில் தோன்றிக் காட்சிக் கொடுத்தருளினார். திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியைத் தேவகுரு தரிசித்து அன்பிற்படு மெழுகு போன்று நெஞ்சுருகித் தொழுது சொல்லுவாராயினார்.


"மாலயனறியா மாதேவா! உன் பாதமே கதி. பரமசிவனே பரஞ்சுடரே - பரம்பொருளே - பரஞ்சோதியே - பசுபதியே சரணம், சரணம், எம்பெருமானே சகல வான்மகோடிகட்கும் நீ தந்தை பார்வதி தாய். அன்பான தாய் தந்தையர்களிடத்தில், தங்கள் குற்றங்களைச் சொல்லிக் கொள்வதற்கு, நாணப்படுவார்களுண்டோ? இல்லை. ஆதலின், அம்மையப்பராகிய உங்களிடத்தில் என் குறைகளை முறையிட்டுக் கொள்வதில் நான் ஏன் வெட்கப்படவேண்டும்? பெருமானே! நானறியாது செய்த காமத்தால் உலகம் பழித்து என்னை யொழித்துவிடாதபடி என்மேல் கருணைவைத்துக் காத்தருள்வது உன்பாரம் தந்தையே! தாயே! தஞ்சம், தஞ்சம், என்றனர். சர்வலோக ஆதார பூதனாகிய பெருமான் புன்னகை செய்து,

அன்ப உன்பாவம் உன்னை விட்டொழிந்தது. இனித் தேவர்களெல்லாம் உன்னைத் தங்கள் குருவெனக் கொண்டாடுவதிற் றடையில்லை. சுகமாக வாழக்கடவை யென்று திருவாய் மலர்ந்தருளிச் சிவலிங்கத்துண் மறைந்தருளினர்.

தேவகுரு காமாசச்சருக்க முற்றிற்று.

## கேசவன் பாவநாசச் சருக்கம்.

சிவானுபூதிமான்களே! தாமரை யாசனத்தில் வீற்றிருக்கும் நான்முகக் கடவுளின் புத்திரனாகிய தக்கன் தனக்குண்டாயிருந்த அதிகாரச் செருக்கினால், அகில லோகநாயகனாகிய சிவபெருமானை விலக்கித் திருமால் முதலிய தேவர்கள் சூழ வொரு வேள்வி செய்யத் தொடங்கினான். அதனை யறிந்த நாரதமுனிவர் வெள்ளியங்கிரியை யடைந்து விமலனிடத்தில் விண்ணப்பஞ்செய்தனர். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த அமுதம் போன்றவளாகிய உமாதேவியார் தனது தந்தையாகிய தக்கனடத்தும் வேள்வியைப் பார்க்கும்பொருட்டுத் தனது நாயகனிடத்தில் விடைபெற்று வேள்விச்சாலையை யடைந்தனர். துருக்கே யுருவாயமைந்த தக்கன் அம்மையாரைக்கண்டு கோபித்துப் பற்பலவிதமாகப் பரஞ்சோதியாகிய பசுபதியை நிந்தனை செய்தனன். கேட்டவம்மையார் பொறாதவராகி "ஏ, தக்கனே! அக்னி சோமேந்திர விட்டுணுவாதி சர்வதேவ ரவர்ப்புதனாகிய பெருமானை நீ பழித்தமையினால், உன் வேள்வியானது அழிபாடாகக்கடவது, உன் றலையுமற்றுப் போகக்கடவது" என்று சபித்து, அக்கினியை வளர்த்து அதில் மூழ்கித் தன்னைப் புத்திரியாகப் பெறவேண்டிச் சிவபரஞ்சோதியை நோக்



தட்சன் யாகத்தில் தனக்கு நேர்ந்த அபராதத்தைப்போக்க, கேசவன் திருவலிதாய நாதரை பூசித்துத் தன் பாபத்தைப் போக்கிக்கொண்டது.

ஐத் தவங்கிடக்கும் இமயவரசன் மகளாக அவதரித்தருளினர். பின்பு, ததீசியாதி சைவமுனி புங்கவர்கள் தக்கனைநோக்கி, "ஏ! பிரம புத்திரனே! மறையினைத்து மகாதேவனைச் சுதபதியென்றும், வேதபதியென்றும், அத்வரராஜனென்றும், யஞ்ஞபதியென்றும் பல நாமங்கள் பாராட்டி யுதகரித்திருத்தலை நீ யறிந்தாயில்லையோ? எவன் அன்னியமான சுர தெய்வங்களோடு சமானமாக ஒரு வார்த்தையாவது மகாதேவனைப் பேசுவானோ, அந்தத் துர்மதி சண்டாளனுவனன்றி, உலகப்பிரசித்தியாய் சண்டாள னென்றழைக்கப்படுபவன் சண்டாளனாகான் என்னும் புராணவசனம் கேட்டதில்லையோ? சுரசிரேஷ்டர் பிரபுவாகிய ருத்திரமூர்த்தி! உன்னை இதரதேவர்களோடு நமஸ்காரங்களாலும், அவல தோத்திரங்களாலும், ஆவாகனங்களாலும் சேவிக்கச் செய்யோம் என்ற சுருதியினையும் கேட்டிலையோ? மந்தா! யஞ்ஞபதி சிவனேயென் றறியாதவன் தலையிட றுமே: ஆகையால் இனியேனும் அகிலலோகமுந் தொழு மங்களாண்டவனுக் கவியளிப்பாயாக" என்று பல புத்தி கூறியுங் கேளாதவனாய் மேனு மேனு மிகழ்ந்தனன். இவற்றையெல்லாம் நந்தியெம்பெருமான் வாயிலாகக் கைலாசபதி யறிந்துகொண்டு வீரபத்திரக் கடவுளைத் தனது பாலநேத்திரத்தினின்று முண்டாக்கி, "ஏ வீரனே! நம்மை நிந்தித்துத் தக்கன் வேள்வி புரிகின்றனன். நீ அவ்விடஞ் சென்று நமக்கு அவியைக்கேள். கொடுத்தால் வந்துவிடக்கடவாய்; மறுத்தானேல், யாகத்தை யழித்து, அவன் றலையை யறுத்து, அவனுற்ற தேவர்களைத் தண்டஞ் செய்து வருவாய்" என்று அஞ்ஞாபித்தனர். உடனே வீரபத்திரர் தந்தையாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வேள்விச்சாலையை யடைந்து தக்கனை நோக்கி, "ஏ தக்கனே சர்வைசுவரிய சம்பன்னரான சிவபெருமானுக்குரிய அவிர்ப்பாகத்

ளைதக்கொடு" என்றனர். அதற்குச் சிறுவிதியாகிய தக்கன் பின்வருவது தெரியாமல், வடவாமுகாக்கினி போற் சீறிச் சினந்து, "அச்சடலையாடிக்கு அவிர்ப்பாகங் கொடேன்" என்றனன். அங்கிருந்த தேவர்களு மவனை மறுத்திருந்தனர். உடனே வீரபத்திர மூர்த்தி ஆக்கிரமித்து வேள்விச்சாலையிற் பிரவேசித்துப் பிரமன்றலை நான்கு மகிழும்படி குட்டினர். அவன் மனைவி சரஸ்வதியின் மூக்கை யறுத்தனர், குயில் வடிவங் கொண்டு ஓட வாரம்பித்த இந்திரனை வாளால் தகர்த்தனர், நமனைக் கொன்றனர், சந்திரனைப் பாதத்தாற் தேய்த்தனர், சூரியனது என்றொன்கு பற்களையு முதிர்த்தனர், அக்கினியின் கரங்களைத் துண்டித்தனர். இலக்குமியி னிளமுலைகளை யீர்த்தரிந்தனர், தக்கன் சிரங்கொய்தனர், இவற்றை யெல்லாங்கண்ட நாரணன் அதிகோபங்கொண்டு கர்ச்சித்து, கருடவாகனமேறி, எதிரில் வந்து தனது சக்கராயுதத்தினைச் சுழற்றிப் பிரயோகஞ் செய்தனன். வீரபத்திர ஸ்வாமி ஓர் ஹுங்காரஞ்செய்து, அச்சக்கரத்தினைத் தனது இடது கரத்தால்வாங்கி வீசி யெறிந்தனர். அதனை யொரு பூதம் வாயிற் போட்டுக்கொண்டது. பின்னர்த் திருமாலைப் பிடித்துப் பாசத்தாற் கரங்களைக் கட்டி, காலில் விலங்கிட்டு, அவ்வேள்வியி லிறந்துகிடக்கிற பிணங்களைச் சேர்த்துப் பிணித்து, அவன்றலைமேலேற்றி, வேள்விச்சாலையை மூன்றுதரம் வலம் வரும்படி செய்தனர். அச்சமயத்தில், கருணை சமுத்திரமாகிய கண்ணுதற் கடவுள் இடபவாகனராய் அவ்விடம் எழுந்தருளினர். சுவாமியைக் கண்ட விஷ்ணுமூர்த்தி நாணமடைந்து, பயந்து நடுநடுங்கி யோர்புறநின்று, "அப்ரமேய, அநாமய, நிர்க்குண, நிர்க்குண, நிரஞ்சன, பிரணவசொரூப, நாமரூபரஹித, கைலாச சிகரவாச, உமார்த்தகிருதசேகர, மிருகவஸ்த, பஸ்மதாரித விக்ரக, பஞ்சானந, சந்திரசேகர, வியாக்ர சர்மாம்பரத



திருத்திய சம்பனே. ஆண்டருளும், அடிமையை ஆண்டருளும்! அறியாது செய்த பிழையை மன்னித்தருளும்" என்று பலவாறாகத் தோத்திரஞ்செய்தனன். பரம பதியாகிய பரமேஸ்வரன் மனமிரங்கிக் கருணைகூர்ந்து சொல்வாராயினர். "மாலிற் சிக்குண்டு மயங்கும் மாயவனே! நீ நம்மைச் சிறிதுந் தெரிந்துகொள்ளாது, மற்றைய சாமான்ய தேவர்களைப்போல நீயுந் தக்கன் வேள்விச்சாலையிற் சேர்ந்திருந்தாயாகலின் வேள்விச்சாலையிலிறந்த தேவர்களின் கேசங்களை (பிணங்களை) சுமக்கப் பெற்றனை. இதனால், இன்று முதல் நீ யெல்லாராலும் 'கேசவன்' என்று அழைக்கப்படுவாய். அன்றியும், நம்மை நிந்திக்க தக்ஷனுடன் சிநேகத்தை விரும்பியதால் உனக்கு நேர்ந்த பாவத்தினை யொழிக்கக் கேசவனென்னும் பெயருடன் பூமியிலேயென்று நாபிகவும் விரும்பத்தகுந்த திருவலிதாய க்ஷேத்திரத்தினை யடைந்து நமது அருட்குறியைப் பூசிக்கக்கடவாய்" என்று, கருணைசெய்து வீரபத்திரரைக்கொண்டு மற்ற தேவர்களைப் பிழைப்பித்துப் பிரமன் கேட்டுக்கொண்டபடி தக்கனை யாட்டுத்தலையுடன் எழுப்பி, இமய மலைக்குச்சென்று, பார்வதி தேவியாரை மணந்து கைலாயத்திற் கெழுந்தருளினர்.


பின்னர், சகசென்மாதி காரண வஸ்துவாகிய சிவபெருமான் திரு ஆஞ்ஞைப்படி கேசவ னெடிய மதிலால் சூழப்பட்ட திருவலிதாயத் தலத்தினை யடைந்து, தன்பேரால் தீர்த்தமுண்டாக்கி அதில் நீராடி, விபூதி உத்திராட்சந்தரித்துப் பூசைக்கு வேண்டும் முபகரணங்களாகிய பீதாம்பரம், இரத்தினபரணம், சந்தனம், திருமஞ்சனம், தூபம், திருப்பள்ளித்தாமம் தீபம் பஞ்சகவ்வியம், கனிகள், தேன் திருவமுது சேகரித்துச் சிவாகமப்படி ஆவாகனம், தாபனம், சந்நிதானம் சந்நிரோதனம் அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம் புட்பதானம், தூபம்-

தீபம், நைவேத்தியம், பானீயம், ஆராத்திரிகை, சப
சர்ப்பணையாஞ் சோட சோபசாரஞ்செய்து, உரைதடு
மாற என்பு நெக்குருக உடலெலா மென்மயிர்ப்
பொடிப்ப ஆனந்தக் கண்ணீர் பெருக அஞ்சலித்து,
மோட்ச விதாயகமான பஞ்சாக்கரஞ் செபித்து, வண
ங்கிக்கொண்டு திரும்பி, அத்தலத்திற்கு அஷ்டா
க்ஷரப்பதி எனப் பெயர்வைத்துச் சிறிது தூரத்திற்
குண திசையிலொரு பன்னசாலை யேற்படுத்தி, அதிற்
றங்கி, நாடோறுங் காலையிலு மாலையிலுஞ்சென்று திரு
வலிதாயநாதனை வணங்கிக்கொண்டிருந்தனர். ஒரு
நாள், "கேசவனே, நீ செய்தபாவ முன்னைவிட்டு வில
கியது" என்று அசரீரி கேட்டமாத்திரத்தில், கங்கு
கரைகாணாத ஆனந்தங் கொண்டவராய் அடியற்றபனை
போல் கீழ்விழுந்து எழுந்து தோத்திரித்து விடை
பெற்றுச் சென்றனர். இத்தலத்திற் கேசவன் தன்
பாவமொழிந்ததெனத் தெரிந்து தக்கன் யாகத்திருந்த
பிரமனும் இந்திரனும் இத்தலத்தினை யடைந்து பூசித்
துச்சென்றனர்.

திருவலிதாயத்திற்குச் சமீபத்தி லக்கேசவன்றொ
ழுத*கோயிலுக்குச் சனிவாரந்தோறுஞ் சென்று
கேசவ, ஆதிகேசவ, ஆதிகேசவப் பெருமானே, நாரா
யண, ஆதிநாராயண, ஆதிநாராயணப் பெருமானே,
தேவ, வாசுதேவ, வாசுதேவப் பெருமானே யென்று
வந்தனை வழிபாடு செய்யப்பெற்றவர்கள் பரியாற் பிடி

---

* இக்கோயில் சென்னூரில் இப்போது நூதனமாகப்
பிரதிஷ்டித்துள்ள தாமோதரப் பெருமானிருக்கு மிடமேயாம்,
அவ்விடத்தில் பூர்வமிருந்த கேசவப்பெருமான் ஆலயம் பல்லா
ண்டுகட்கு முந்திச் சிதைந்துவிட்டது. தாமோதரன் கோயில்
எனக் கர்ணபரம்பரையாய் வழங்கி வந்தபேரைக் கொண்டே
நூதனமாக வேற்படுத்திய கோயிலுக்கும் அப்பெயர் வழங்கி
வருகின்றது.





க்கப்படாமல் எக்காலும் அறுசுவையோடுங் கூடிய பிரசாதங் கிடைக்கப்பெற்று வாழ்ந்து, பின் வைகுந்தப் பதவியினைப் பெறுவார்கள். இவ்விடத்தில் அபாயபர யுகமுடிவில் தாமோதரனுருஞ் சிலகாலந் தங்கி வாழ்ந்து வலிதாயகாதனை தரிசனஞ் செய்துகொண்டிருந்து சென்றனர். இந்திரன் பூசித்தமையின் வலிதாயத்திற்கு இந்திரபுரி யெனவும் பெயருண்டு.

கேசவன் பாவநாசச்சருக்க முற்றிற்று.

## அனுமா ரபராத மன்னிப்புச் சருக்கம்.

சிவகாருண்ணிய முனிவர்களே! பூர்வத்தில் இலங்கைக் கதிபனான இராவணன் சன்னியாசிவேடம் பூண்டு, தண்டகாருண்ணியத்தில் இரவிகுலத்தோன்றலாரும் இராமன் பத்தினியாகிய சீதாபிராட்டியை யபகரித்துக்கொண்டு இலங்கைக்குப் போய்விட்டான். வீராதிவீரனாகிய இராமன் பெண்டிழந்து தன் தம்பி இலட்சுமணனுடன் வந்திக் காஞ்சியிற் சென்று, மறையுருவனமந்த மாவடியில் வீற்றிருக்கும் ஏகாம்பரநாதனைப்பணிந்து பாசுபதாஸ்திரம் பெற்று, கிஷ்கிந்தையைச் சேர்ந்து சுக்ரீபன் சேனையுடன் போய், சேதுபந்தனஞ்செய்து கடலைக்கடந்து, இராவணாதி யசுரர்களைக் கொன்று, சீதையைச் சிறை மீட்டுக்கொண்டு திரும்பிக் கந்தமாதனத்தில் வந்தவுடன், இராவணனது பிரமகத்தியானது இராமனைச் சூழ்ந்துகொண்டு இமைப்போது நீங்காமல் உம்மென்றும், தனது மார்பினைத்தட்டும், முகத்தினைச் சுளித்துக்கொண்டு சண்டைக்குவரும், ஆரவாரஞ்செய்யும், உரத்தட்டினம்பிக்கூம், கூரிய பற்களை நெறநெறவெனக் கடிக்கும், கீழே விழும், மேலேயெழும்பும், என்னை யெதிர்ப்பவரை

வென்னும், வாடா இந்த மானிடனை யின்றே கொன்று தின்றேப்ப மிடுவேனென்னும், அட்டகாசஞ் செய்யும், கோபிக்கும், என்னைப் பகைத்து உய்யவல்லனோடா வென்னும். இதனைக்கண்ட இராமர் முகம்வாடி, “தம்பி, தம்பி, இலட்சுமணா! இஃதென்னை? இராவணனுபத்திரவம் பண்ணுகின்றனனே” என்றனர். “அண்ணா அஞ்சவேண்டாம். அரக்கனன்றே யழித்தனன்” என்றான் இலட்சுமணன். இராமர் நடுங்கி, “ஜானகீ, ஜானகி! இதுவென்னை! பத்துத்தலையன் பதரச் செய்கின்றனனே” என்றனர். “சுவாமீ! பாவி முன்னமே படிகளத்திற் பட்டொழிந்தனனே” என்றனள் சீதை. இராமபிரானுந் தோன்றுதவராகித் திகைதிகைத்துத் திகிற்பட்டு வாய்வறண்டு நடுநடுங்கி நான்கு பக்கங்களிலுந் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தனர். அச்சமயம், அவ்விடத்தில்திருநீற்றி னொளிவிளங்கும் அதிசயத் திருமேனியுடையராய், சிவகதா சங்கீர்த்தன சீலராகிய சில முனிக்குழாங்கள் வந்து இராமனைக்கண்டு, “ஏ இராகவ அஞ்சற்க; நீ கொன்ற இராவணன் இராக்கதனே யாயினும் அவன் பிரமகுலத்தில் வந்த புலத்தியன் பௌத்திரனாதலின் பிரமகத்தியாகவந்து பிடிக்கின்றனன். அதனையொழிக்க வோருபாயம் கேட்பாயாக. திருக்கைலாயத்தினின் றும் ஒரு சிவலிங்கப்பெருமானைத் தருவித்து, இவ்விடத் தாபித்துப் பூசிப்பாயேல், அது இன்னே யின்னை விட்டு நீங்கும்” என்றனர். இராமர்கேட்டு-மனமகிழ்ந்து, இக்காரியம் முடித்துவைப்பான் புஜபலபராக்கிரமசாலியாகிய அநுமா னொருவனே யென வெண்ணிக் கூறுவாராயினர்.

“அநுமய்! சீதாசோகவிநாச! இப்போதெனக்குண்டாயிருக்கும் ஆபத்தினின்று நீங்க, திருப்பாற் கடலினழகு மாறிப் பின்னிட வெண்சோதி வீசுந் திருக்கைலாயத்திற்குச் சென்று அருட்குறி யொன்றினை



யுடனே கொண்டுவரக் கடவாய் என்று இராமர்சொல்லியவுடன் வாயுவின் ஔரச புத்திரனாகிய அநுமார் வெள்ளியங்கிரிக்குச் சென்றனர். அவ்வநுமார் வருதற்குச் சிலநாள் தாமதப்படவும், இராமர் மாதவர் கட்டளையின்படி எழுந்து நீராடி, நித்தியா னுஷ்டான முடித்து, கங்கணங் கரத்திற்சேர்த்து, விபூதி யுருத்திராட்சம் புனைந்து, மிதுனமாதம் சுக்கிலபட்சம் புதவாரம் அஸ்த நட்சத்திரம் இடபலக்கினம் கூடிய சுபதினத்தில், தனது மனைவியாகிய சீதாபிராட்டியார் தமது கரங்களாற் பிரட்டிக் குவித்தமைத்த * வாலுக லிங்கத்தைத் சோட சோபசாரத்துடன் பூசித்து, பிரதட்சண நமஸ்காரம் பல்லாயிரந்தரஞ்செய்து, பலவரம் பெற்று, தன் முன்றோன்றும் பிரமகத்தியினைப் பிலத்தில் வீழ்த்தி அவ்வாயிலை யடைத்து அதன்மேல் வைரவக் கடவுளைத் தாபித்து, மனம் பூரித்துச் சித்தியானந்துடன் எழுந்தருளி யிருந்தனர்.

இது நிற்க, திருக்கைலாயத்திற்குச் சென்ற அஞ்சனைதன் மைந்தனாகிய அநுமார், வெள்ளிமலைக் கிரணம் பொழியும் திருமேனியையுடைய நந்தியெம்பெருமான் சமூகஞ் சாரணிற்றுய்த்து, சிவலிங்கமொன்றினைப் பெற்று, கந்தமாதனம் வந்து சேர்ந்தவுடன் முன்னமே இராமரால் சிவலிங்கந் தாபித்துப் பூசித்திருக்கக் கண்டு விசனமுற்று இராகவனை நோக்கி ஐயா! என்ன காரியம் செய்தீர்! அடியேன் செய்தகுற்றமியாது! பெண்ணாசையால் சுக்ரீவன் உம்மைச் சிநேகங் கொண்டான்! மண்ணாசையால் விபீஷணன் உம்மைச் சரணடைந்தான். நானோ தேவரீர் திருத்தொண்டு ஒன்றினையே கைபிடித்தேன்; என்னை இங்ஙனம் செய்த வழக்கோ” என்று தேம்பி யழுதனன். சக்ரவர்த்தி திருமகனார் அநுமார் முகநோக்கி

* வாலுகம் = மணல்.

மாருதி மைந்த பெரியோர் குறித்த சுப முகூர்த்தம் தவறுதபடி செய்யவேண்டி நேரிட்டது. வேறொன்றும் நினைந்திலேன் நான் றாபித்த இராமலிங்கத்தின் முன்னர் நீ கொணர்ந்த சிவலிங்கத்தினைப் பிரதிட்டை செய்து பூசைசெய், இல்லையேல், என்னாற் பிரதிட்டித்த இலிங்கத்தினைப் பெயர்த்து நின்கையுற்ற பெருமானை அவ்விடத்திற் றாபிப்பாயாக" என்றனர்.


வாயுவின் மைந்தனை அநுமார் கேட்டவுடன் அனைத்துங்கொண்டு கிளம்பி, இராமலிங்கத்தினைத் தன்னிரு கரங்களாலும் பிடித்தசைத்து மசையாததைக் கண்டு தற்போதமுற்றுத் தன் வாலாற் பலவலயஞ் சுற்றித் தன் முழுவலிகொண்டு ஆகாயத்தி லெழும்பியவுடன், தன் பெரியதொரு வாலற்றுத் திடீரெனக் கீழேவிழுந்து மூர்ச்சித்துப் போயினன். கண்ட இராமர், இலக்குமணர், சீதை முதலியோர் அநுமாரது அகன்ற மார்பின்மேல் விழுந்து வாய்விட் டழுதயர்ந்தனர். பின்னொருவாறு தெளிந்து, அநுமாரை இராமர் தமது மலைபோன்ற தோளின்மீது சாய்த்துக்கொண்டு, "மாருதிச் சிங்கமே! என்செய்வேன்! என்செய்வேன்! பம்பைநதி தீரத்திலெனைச் சினேகித் தென்வயர்வை மாற்றினை! சுக்கிரீவனுக்கும் எனக்குஞ் சினேகஞ் செய்து வைத்தனை! கடலைக்கடந்தனை! மைநாகப்பருவதத்தை விசிறியெறிந்தனை! அம்மலைபாக்கி அரைவரக்கினை! இலங்காதேவியை இப்படிமுன் றூயினை? அசோகவனத்தினை ஆக்கிரமித் தழித்தனை! எண்பதிற்றுயிர அரக்கரை மண்படச் சாடினை! சம்புமாலியைச் சாய்வெறவாட்டினை! அட்சகுமாரனை அழியுற வதைத்தனை! இலங்கை முழுதும் வெந்தழல் மூட்டினை! இளையவள் சீதையை யென்பால் இன்பொடுசேர்த்தனை! ஆ! என்பொருட்டு இவ்வளவு பேருபகாரஞ் செய்த உனக்குப் பிரதியுபகாரம் நானென்ன செய்தனன்! ஒன் றுங்காணேனென் றுழந்தாய்! நின் கண்ணினைத் திறந்து என் முகத்தினைப்பார்.



அந்தோ உன்னை எவ்வணம் பிரிந்துய்வேன் என் கண்ணிற் கருமணியே" என்றனர்.

இத்தகைய வமுதமொழிகள் அகில குமாரனாகிய அநுமன் செவியி னுழைந்தவுடன் விழித்து கோபந் தீர்ந்து எழுந்து, இராமலிங்கத்துக்கு வடதிசையில் அநுமலிங்கந் தாபித்துப் பூசித்து தான், சர்வ வல்லபமாந் தன்மை பொருந்திய சிவபெருமான் மீட்டுச்செய்த அபசாரத்தினை யெண்ணி யெண்ணி நெஞ்சந் துணுக்குற்று வருந்தி வாடுகையில், மகதியாழேந்திய ஞான சிரோமணியாகிய நாரதமுனிவர் அவணடைந்து நடந்த யாவற்றையும் விசாரித்துக் கருணைகூர்ந்து கூறுவாராயினர். "சஞ்சீவிராய நீ அம்பிகை பாகனுக்கியற்றிய அபராதமொழிய வேண்டுமாயின், கேட்பாயாக! எந்தப் புருடனெவன் சர்வ சௌநியாய்ச் சிவனை யறிந்து இலிங்கத்தில் பூசிக்கின்றானோ, அவன் செய்த பாவமனைத்தும் மன்னிக்கப்படும், திருமாலாகவர் தனக்குப் பிருகுமாமுனிவர் சாபத்தாற் கிடைத்த பத்துப் பிறப்பும் உலோகோபகாரமாம்படி செய்து கொண்டது சிவலிங்கப் பூசையாலன்றோ? உனது நாயகனை முகுந்தனுக்குண்டான பிரமகத்தி யொழிந்ததும் சிவபூசையாலன்பது நீ காட்சியிலோர்ந்தனையே ஆதலின் நீயுமங்ஙன மன்பொடு இன்னே செய்யக் கடவை. அச்சிவலிங்கப்பூசை உத்தமதலங்களிலியற்றின், அது பல்லா கரதலா மலகம்போற் கிட்டக்கூடும் இது திண்ணம், முக்காலமும் நின்னாய் அறிவாயாக" எனக்கூற, அருந்தவமுடைக்கும் அநுமனெழுந்து திருமகள் நாயகனை வணங்கிச் சிவ பூசைக்குரிய அவ்வுத்தமத்தலம் எதுவெனக்கேட்க, மகதிமுனி அகமகிழ்ந்து, "சர்வபக்ஷ ரக்ஷ சரணம் செய்பவராகிய சிவபெருமானுக்குப் பிரியமான தலங்கள் இந்நில வுலகத்தின் கண் அனந்தமுண்டு. அத்தத்தலங்கட்குள், மணமலர்ச்சோலை சூழ்ந்த திருவலிதாய க்ஷேத்திரத்

தைப்பார்க்கிலும் மேம்பட்டதலம் எக்காலத்திலும் எவ்விடத்திலுமில்லை, பெருமானுக்கு அத்தலமே பிரியமானது. தண்டரளம்போல் விளங்குந் தண்ணீர்த் துறைகளையுடைய அந்த வலிதாயத் திருநகரத்தில் கருணைவள்ளலாகிய சிவபெருமான் தன்னடியார் வேண்டும் வரங்களை வேண்டியபடியே விரைந்து அளித்தருளுவர். மந்திரத்தலைமை பூண்ட பஞ்சாட்சரத்தினைத் தியானித்துப் பசியையாறுதலும் பனிமலரனலும் பிளவுபடா பத்தியுடன் பயித்தணிந்து தொழுது துதிசெய்வோர்க்கு அந்தப் பரம சிவத்திருப் பரம சந்தோஷம் ஆகின்றது. அவ்விடத்திற்குப் போய் விபூதி உருத்திராட்ச மணிந்து பசுபதி நாயகனை மனமொழி பூசித்து வேண்டிய வரங்களைப் பெறுவீர்களாக என்று உபதேசித்தருளி அகிலமுநி கூறி ஆகாயவழி போயினர். பின் அநுமார் இராமனைவணங்கி, சிவபூசைசெய்ய விடைபெற்று நாராயண விருது சமயத் திரமாகிய பஞ்சாட்சர நினைவாய்த் திருவலிதாயத் தினையடைந்து, தன்பெயரால் ஒரு தீர்த்தங்கண்டு, அதிலாடிச் சிவலிங்கம்ஸ்தாபித்து அன்பு மிகுந்து, ஆகமவிதிப்படி பூசைசெய்து, உண்ணாநாட்கள் முதலியவைகளை யொழித்து ஐம்புலனடக்கி நெடுங்காலந் தவஞ்செய்து கொண்டிருக்கும்போது, பொன்போல் விளங்குஞ் சடைமுடியுடைய சிவபெருமான் மயிலினுஞ் சாயல் போன்ற மலைமகளுடன் பளிக்குமலைபோல் விளங்கும் இடபத்தின்மீது காட்சி கொடுத்தருளக் கண்டு கைகூப்பித்தொழுது, "எம்பெருமானே, தேவரீர் மகிமைகளைப் பலதரம் எனது நாயகனாகிய இராமசந்திரனாற் கேட்டிருந்தும், சிற்றறிவினனாகிய யானது அறியாது, அகம்பாவமுற்று என்பாலியற்றிய அரிய அபராதத்தைச் சகித்தருளவேண்டும் சிவனே! பெருங் கருணைக் கடக்கடலாகிய பசுபதி! பார்வதிபாகா!" எனவேண்டி, இன்னும் ஓர் வரம் வேண்டுகின்றேன்





வானரச்சிரேட்டருள் தலைவன் அநுமானெனில்,— அடியேன் பூசையைக் கொண்டருளிய இந்தப் பரம லிங்கத்தைப் பணிந்து வணங்கப் பெற்றவர்கள் கடல் சூழ்ந்த உலகத்தில் உள்ள இலிங்கமெல்லாவற்றையும் வணங்கிய பலன் அடையும்படி கிருபை புரிந்தருள வேண்டும். நானெடுத்த தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்பவர்கள் எத்தகைய இழிகுலத்திற் பிறந்தவரே யாயினும், எத்தகையபாவஞ் செய்திருப்பவரே யாயினும் அவர்கள் செய்த குற்றங்களை மன்னித்தருள வேண்டும் என்று வேண்டுதல் செய்ய, வேண்டுவார் வேண்டியதை விரைந்து கொடுக்குங் கருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான் அவ்வநுமனுக்கு வரமீந்துங் கொடுத்தருளி உலகமாதாவாகிய உமையுடன் சோதி லிங்கத்தில் மறைந்தருளினார்.


அநுமாரபராத மன்னிப்புச் சருக்கமுற்றிற்று.

## சுக்கிரீவன் பூசித்த சருக்கம்.

சிவபூசா துரந்தரர்களே! ஆஞ்சனேயர் வலிதாயத்தினை நாடிச்சென்று அநேகநாளானமையின், இராமச்சந்திரர் தனது சமீபத்தி லிருந்துகொண்டிருக்கும் சுக்கிரீவனை நோக்கி, கிட்கிந்தை யரசனே நமது அநுமன் நம்மைவிட்டுப் பிரிந்து வெகுநாளாகிவிட்டது. அவன் நமது மந்திரியில்லா திருத்தல் சந்திரனில்லா வானம் போலிருக்கிறது. யோசித்து முடிக்கவேண்டிய காரியங்கள் அனேகந் தடைப்பட்டிருக்கின்றன. நாமயோத்திக்குச் செல்லவேண்டிய நாள் நெருங்கிவிட்டது, காலந் தாமதிருப்போமானால் பரதன் கதியேதாய்விடுமோ? முன்னதாக வனுப்பி நமது வரவைத் தெரிவிக்க அநுமனுமில்லை ஆகையால், நீயுடனே யதிவேகமாகச் சென்று வலிதாயத்தினையடைந்து அநுமனை யிட்டுக்

கொண்டுவரக் கடவாயென்றனர். சுக்கிரீவ மகாராஜன் சேதாரயனைக் கட்டளையைச் சிரமேற்கொண்டு ஆகாய மார்க்கமாகப் பறந்து அதிசீக்கிரத்தில் வலிதாயத் தினை யடைந்து சிவாலயத்துட்புகுந்து பார்க்கையில் அஞ்சனேயர் தன்னை மறந்து உருத்திராட்சம் கரங் கொண்டு பாதிரி மரத்தடியில் சிவலிங்கப்பெருமான் சந்நிதிக்கருகில் அமர்ந்து சிவமகா பஞ்சாட்சர ஜெபஞ் செய்துகொண் டிருப்பதனைக் கண்டு அவர் ஜெபத் திற்கு இடையூறு செய்யாது வெளிவந்து பார்க்கையில் அனேக முனிவர்கள் கூட்டங் கூட்டமாய்க் கூடிக் கொண்டு சிலர் சிவபூஜையும், சிலர் வேதபாராயணமும், சிலர் ஆகமவாராய்ச்சியும், சிலர் புராணபடனமும், சிலர் சாஸ்திர விசாரணையும், சிலர் யோகமுஞ் செய்து கொண்டிருக்கும் செயலைக்கண்டு களிகூர்ந்து வியப் புற்று ஆ! ஆ! நான் செய்த தவமேதவம். இத்தகைய திவ்விய தலத்தினையும், இத்தகைய புண்ணிய மூர்த்தி களையுந் தரிசிக்கப்பெற்றேனே. இக்காட்சியினைக் கண் டபின் சவனித்தலத்தினை விட்டுப்பிரியேன். என்னைப் போன்ற சாமானியனே பிரிய மனமொழாது நிற்பனேல் நவவியாகரண பண்டிதராகிய நமது அஞ்சனை மைந் தனாகிய அனுமானோ இத்தலத்தினைவிட்டு நீங்குவார். இவரை நானினியழைப்பது, ஆயினுமாகுக, வந் தது வரட்டும். இத்தலத்துப் புண்ணிய மூர்த்திகட்குச் சிலநாளைக்காயினுந் தொண்டுசெய்து வாழக்கடவேன் எனத் தீர்மானித்துக்கொண்டு வலிதாயத்துள்ள சிவ னடியார்கட்குச் சிவபூசையின் பொருட்டு வேண்டிய திரவியங்களைத் தினந்தோறுங்கொணர்ந்து கொடுத்து அப்பெரியோர்கள் ஆசிர்வாதமேற்று வாழ்ந்துகொண் டிருந்தனன்.

சுக்கிரீவன் பூசித்த சருக்க முற்றிற்று.





## இராமர் தரிசித்த சருக்கம்.


சிவாக்கிரயோகிகளே! வான்மைந்தன் மைந்தனுகிய அநுமான்மனைவியார் காதலி மறுமனக் காதலித்த திருவலிதாயத்தில் மிகக் காதல்கொண்டு, அத்தலத்தில் சிவபுராணஞ் சொல்லுகின்றவர்களையும், அவரை வியந்து கொண்டாடுகிறவர்களையும், சிவனடியார்களை யெதிர்கொண்டு சென்று அழைத்துவந்து அன்புடன் அமுதூட்டுகின்றவர்களையும், சிவபெருமானைப் பூசிக்குஞ் செயலையே மேற்கொண்டிருக்கிறவர்களையும், சிவகாம முழக்கத்தினையுங் கண்டு சிவபெருமானுடைய பத்தராது பாததூளித்திணைக் கவசமாத் தன்னுடலிற் றுங்கி அத்தலத்தினை விட்டுப் பிரிய மனமெழாது பல நாள் வாழ்ந்துகொண்டிருக்கையில், கௌசலை மைந்தனுகிய இராமர் கந்தமாதனத்தை விட்டு அயோத்திக்குச் செல்லும்போது, பிறவித்துன்பங்களைப் போக்கிப் பேரின்பவீடு கொடுத்தருளுஞ் சிவபெருமான் ஆட்சியில் விளங்குந் திருவலிதாயத்தினை யடைந்து, காமதகனஞ்செய் கண்ணுதலைக் கண்ணுறத் தரிசித்து அகண்ட சச்சிதானந்த கபூதனே சரணம், அவாங்கமனோகோசரனே சரணம். இலயபோக வதிகாரஸ்தனே சரணம் சாறுதிசபத வாச்சியார்த்தனே சரணம் உமா மகேஸ்வரமங்கள விக்ரகனே சரணம், ஊர்த்ததாண்டவ மூர்த்தியே சரணம், எல்லாம் வல்ல பரமசிவனே சரணம், எம்பெருமானே சரணம், அப்பனே சரணம் சரணம், ஐயனே சரணம் சரணம், அண்ணலே சரணம் சரணம், அரசே சரணம் சரணம் எனப்பல திருநாமங்களை யெடுத்துச் சொல்லி, அருச்சனை புரிந்து பேரின்பம் வளர்த்தொழுது பலதரம் பஞ்சாங்க அஷ்டாங்கமாகப் பணிந்து, வந்தனை வழிபாடு புரிந்து சில நாள் அவ்விடம் வாசஞ்செய்து, வேதத்தில் விளையாடும் விமலனது திவாநுக்கிரகம் பெற்று, அநுமனுக்குப் பல


முகமன் கூறித் தன் இடமடைந்துக்கொண்டு அயோத்திக்குச் சென்றனர்.

இராமர் தரிசித்த சருக்க முற்றிற்று.

## குசலவர் பூசித்த சருக்கம்.

சிவமுனீந்திரர்களே! சரயுநதியினாற் சூழப்பட்ட கோசல தேசத்திலே அயோத்திமா நகரமானது திருமாதுக்குத் திருமுக மண்டலம்போலவும், அத்திருமுகத்திலிட்ட திலகம்போலவும், அத்திருமுகத்திற்கு இன்றியமையாத கண்போலவும், அவளது மங்களசூத்திரம்போலவும், மார்பிலணியாநின்ற முத்துமாலை போலவும், இதயஸ்தானம் போலவும், திருமகள் வாசம் பண்ணுகின்ற பொற்றாமரை மலர்போலவும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அத்தகைய நகரத்திலே ஸ்ரீஜானகி மணாளனை ஸ்ரீராமச்சந்திர ராகவர் அரசாட்சி செய்துகொண்டிருக்குங் காலத்தில் தான் இராவண சம்மாரத்தின் பொருட்டுத் தென்தேசத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்குங் காலத்தில் தான் தரிசித்த ஸ்தலங்களின் மகிமைகளையெல்லாம் தனது குடும்பத்தினர்கட்குச் சொல்லிச் சந்தோஷங் கொண்டாடிக் கொண்டிருக்கும் சமயத்தில் வலிதாயத்தின் மகிமையினைக்கேட்ட அவ்விராஜபுத்திரர்களாகிய குசலவர் அத்தலத்தினைத் தரிசிக்கவேண்டுமென்று மாவல் கொண்டு தந்தைபால் விடை பெற்றுக்கொண்டு வலிதாயத்தினையடைந்து பரத்துவாச தீர்த்தம் படிந்து, விபூதி உருத்திராட்சம் பூண்டு, சிவலிங்கப்பெருமானை







அனேகவாண்டுகள் பூசித்து அனேகமான வரங்களை யேற்று அயோத்திக்குச் சென்றனர் அதுமுதல் இத் தலத்துப் பெருமானுக்குக் குசலிங்கேஸ்வர ரெனப் பெயருண்டாயிற்று.

குசலவர்பூசித்த சருக்க முற்றிற்று.

## அகத்திய ரத்தி யொழிந்த சருக்கம்.

சிவஞானத் தபோதனர்களே! கடலேழையு மொரு உழுந்தளவாக்கி யாசமனித்த முனிவேந்தனும் அகத்திய முனிவர், ஓர் காலத்தில் இமயமலையினின் றுந் தென்றேய நோக்கிவந்து கொண்டிருக்கையில், மாயையின் மகளாம் அசமுகியின் புத்திரர்களாகிய வில் வலன் வாதாபி யென்னுங் கண்டகர்களிருவருங்கண்டு இம்முனிவரைக்கொல்லவேண்டு மென்றெண்ணி, இளை யோனாகிய வாதாபி யென்பவன் அஜவுருத்தாங்கி ஓர் காட்டில் மேய்ந்து கொண்டிருந்தனன். மூத்தோனாகிய வில்வலன் நெற்றியிற் றிருநீறும், காதினிற் குழையும் கண்டத்திற் கண்மணியும், கரத்திற் றண்டு கமண்டல மும், அரையிற் கல்லாடையும் தாங்கி, முனிபோலுருக் கொண்டு குறுமுனிமுன் வந்து, மூன்றுதரம் பிரதட் சணஞ்செய்து அஞ்சலித்துச் சொல்லுவானாயினன். "ஏ முனியரசே! தேவரீர் இவ்விட மெழுந்தருள அடி யே னென்ன புண்ணியஞ்செய்தனன். மேலும் அடி யேனைக் கிருதார்த்த னாக்கும் பொருட்டு ஏழையின் சிறுகுடிசைக் கெழுந்தருளிப் போஜனஞ் செய்து போதல் வேண்டும்" என்று அவரது திருப்பாதங்களில் தண்டாகாரமாகப் பணிந்து நின்றனன். தன்னிகரில்லா விந்தியமலையின் செருக்கையடக்கிய கும்பமுனி அவன்

வஞ்சகத்தை யறியாது சம்மதித்து அவன் பின் சென்றனர். உடனே வஞ்சகவேடம் பூண்ட துர்முகத்தன் தனயனும் வில்வலன் நீராடிச் சமையற்சாலையிற் புகுந்து சுத்தஞ்செய்து கோலமிட்டுச் சுத்தமான வரிசியா லன்னஞ் சமைத்துப் பல பதார்த்தங்களுடன் தகருருவங் கொண்ட தன் துணைவன் வாதாவியை யறுத்துப் பக்குவமாகக் கறியாக்கித், தன் வேண்டுகோளுக்கிணங்கி அம்முனிசிரேட்டரை யோராசனத்தி லெழுந்தருளச் செய்து உபசாரத்துடன் பாத பூசைசெய்து அறுசுவையாகவமைத்த அன்னபானாதிகளுடன் அவ்வசுர மாமிசக் கறியினையும் படைக்க, ஐம்புலனவித்த அகத்தியராகிய சிவராசயோகர் அன்புடனேயுண்டு பசிதீர்ந்து எழுந்தருளி யிருந்தனர்.

அதன்பின், துர்முகன் மருகனும் தன்னா லியற்ற வில்வலன் தென்றிசை சிறந்த தென்றல் உலவும் பொதியமா மலைத்துப் பெருந்தவ வண்ணலாம் அகத்தியருயிரை வாங்கக் கருதி, தம்பீ! வாதாபீ! வா விரைவுட னென்றனன். கொலைத்தொழிலேயே தவமெனப்பூண் டவம்பெருக்கும் பாவியாகிய வாதாவி "அண்ணா! வந்தேன் இதோ வந்தேன்" என்று, உலோபா முத்திரையின் கொழுநராம் அகத்தியருதரத்தினின்று ஆட்டுருவங்கொண்டு வெளிவர உத்தேசித்த மாத்திரத்தில், மூன்றுபோதும் முழுதுணர் முனிவர் தெற்றெனத் தெரிந்து சிவசிவவென்று விண்பட்டுருவும் விந்தியமலையைத் தரைபடப் படுத்தியதன் திருக்கரத்தால் வயிற்றினைத் தடவுதலும், வாதாவியவன் கோதாகி விட்டுச் சீரணமாயினான். தம்பி மடிந்த சங்கதியைத் தெரிந்து துருவாசமுனிக் கோன்றலாகிய வில்வலன் தன்போன் சீறந்தி முனிவர்தலையில் மோதவந்தனன். திருவடியாதி தொழில்களாயு மியற்றவல்ல அகத்திய முனிபுங்கவர் தன்னெதிருற்றவொரு தரும்



பையினை யெடுத்துச் சிவாஸ்திரமாகப்பாவித்துப் பிரயோகஞ்செய்து வில்வலனைத்* தடிந்தனர்.

சிறிதுநேரத்திற்கெல்லாம் வாதாபியும், வில்வலனும் நீண்ட கரிய மேகம்போலு முருவங்கொண்டு, மிகக் கோபமுடையவராய் ஆரவாரத்துடன் அகத்தியர்முன் றோன்றினர், அதுகண்டு முனிவர், துருவாச முனிமூக்களிவர்கள். இவர்களைக் கொன்றமையால் பிரமகத்தி நம்மைச்சூழ்கின்றதென்றறிந்து இதை யொழித்துக்கொள்ளும் பொருட்டு, அவ்விடத்தில் ஒரு சிவலிங்கப் பிரதிட்டைசெய்து பூசித்தவுடனே, தன் முன் வந்த சாயைகள் இம்மென மறைந்துவிட்டன.

பின்னர், அவ்விடத்தினின்று மெழுந்து சென்று சமீபத்திற் றவஞ்செய்துகொண்டிருந்த பாரத்துவாச முனிவரைக் கண்டு அவருடன் அளவளாவித் திருவலிதாய நாதர் மகிமைகளைத் தெரிந்து தரிசித்து வணங்கிக் கண்ணீர் சொரிந்து ஆனந்தக்கூத்தாடிப்பாடி அழுது தொழுது நிற்க, சருவான் மாக்களையு மீன்ற இளமுலைக்கன்னி கெளரிபாகருகிய வலிதாயநாதர் காட்சிகொடுத்து, 'அன்ப! உன்னைப் பிடித்த பிரமகத்தி இனி யுன்னை யணுகாது. சுகமாகப்பொதிய மலைக்குப் போகக்கடவை' என்றனர், அகத்தியர் மீண்டும் வணங்கி, "பெரும! வில்வனைக் கொன்றவிடத்தில் தான் பிரதிட்டித்த சிவலிங்கப் பெருமானுக்கு அகத்தீஸ்வரர்' என்று வழங்கவேண்டும். நானெடுத்த தீர்த்தத்தில் மங்களவாரம் ஸ்நானஞ்செய்து அகத்தீஸ்வரரை வணங்குகின்றவர்கள் பிணிகளையெல்லாம் ஒழித்துச்


* வில்வலன் இறந்தவிடம்-வில்லவன் வாக்கம், இது-வில்லிவாக்கம் என வழங்குகிறது. இவ்விடத்திலேயே அகத்தியர் சிவலிங்கப் பிரதிட்டை செய்தது. வில்வலனையும் வாதாவியையும் கொன்றவிடம் 'கொன்னூர் என வழங்குகிறது. இவ்வூரில் வலிதாய நாதனைப் பூசித்த கேசவப்பெருமானென்று வழங்குகிறதாமோதரப்பெருமா ளாலயமுண்டு.

சிவஞானச் செல்வமளித்து ஆதரித்தருளவேண்டும்" என்றனர், பெருங்கருணை வள்ளலாகிய பரமசிவம் அவ்வரங்களைக் கொடுத்து, பரசிவையுடன், சிவலிங்கத்திற் கரந்தருளினர்.

அகத்திய ரத்தியொழிந்த சருக்க முற்றிற்று.

## பிரமன் முத்தியடைந்த சருக்கம்.

சிவபக்த சிரோமணிகளே! சத்திய லோகத்திலே வாணிசமேதனாய் நவரத்தின மயமான ஓர் சிங்காதனத்தின் மீது நான்முகக்கடவுளெழுந்தருளி யிருந்து ஒருநாள் தனக்குள்தானே சிந்திப்பா ராயினர். "நான் ஆண்டுகொண்டிருக்கும் இந்தச் சத்தியலோகம் உண்டாகி யழிந்ததற்குக் கணக்குமுண்டோ? அவ்வப்போது அவ்வுலகத்தினை யாண்ட பிரமர்களுக்குத் தாம் கணக்கேது? அவர்களில் நானுமொருவன்றானே? என்றைக்காயினு நானும் இறந்துபோக வேண்டியது நிச்சயமென் றேற்படுகின்றது. ஐயோ! இத்தகைய அனித்திய தேகத்தை நிலையென நம்பி விஷயா நந்தத்தில் மூழ்கி வீணாகக் கெட்டேன்! மோசம் போய் விட்டேன்! முக்கியமாகத் தேடிக்கொள்வதில் ஆசைப்பட்டே னில்லை. எத்தனையோ காலம் விருதாவாகக் கழித்துவிட்டது! அந்தக் காலங்களா னடைந்தபய னொன்றுங் காணேன். சீ, சீ! இவ்வென்னவாழ்வு இனியேனுஞ் சாக்கிரதையாக விராவிட்டால் மோசமாக முடியும் அந்தோ மாயையின் சாலமோ சாலம்! மாயையின் சால்மோ சாலம்!! மாயையின் சொரூபத்தைச் சிறிதேனுஞ் சிந்தித்து நோக்காது அம்மாயையிலே மயங்கி யுழன்றேன்! அம்மம்ம! மாயாபோகம் எவ்வளவு ஆனந்தத்தை விளைத்துவந்தது! இவைகளெல்லாம் உண்மையென்றல்லவோ நம்பியிருந்தேன் மாயை



யெனக்கு அன்னியமென்றறிந்தாற், அம்மாயையை நீங்கி யிருக்கமுடியவில்லையே. அல்லது மாயையாகவே நானிருக்கின்றேனோ வெனில், மாயை யொன்றுமன் றென்னை அதன் காரியங்களினால் வேறாக விளங்குகின் றேனே ஆ, ஆ! இந்த மாயை செய்வது இந்திரசால மேயாம்! இதினின்று மீண்டாலல்லவோ உய்தியுண் டாம். இம்மாயையினைக் கடப்ப தெவ்வணம்? மாயை கொடிது! கொடிது! மாயை யொழிந்தாலல்லது பிறவியொழியாதே! மாயையாலன்றோ தேகம் இடி கரைபோ லிடிந்து விழுந்து கரைந்து போகின்றது! அங்ஙனம் போவதற்கு முந்தியே யன்றோ நித்தியமான வொன்றைத் தேடிக்கொள்ள வேண்டும்! இம்மாயை யினை நானே யொழித்துக் கொள்வதற்குச் சிறிதுங் கூடாதே! பிறரைக்கொண் டொழித்துக்கொள்ளலா மெனில், யாவரும் மாயா சகிதர்களாகவே காணப்படு கிறார்கள். அவர்களை நாடுவது குருடன் குருடனைத் தேடுவது போலாகும். மாயா ரகிதனாயிருக்கிற வொரு வனை யடுத்தாலன்றி யிது நீங்காது, நீங்காது. அங் ஙன மிருப்பவன் யாவன? ஓ! ஓ! அவன் பிறப்பிறப் பில்லாதவனாக வன்றோ விருக்கவேண்டும். அவ்வண் ணம் விளங்குபவன் யாவன்? அவன் சர்வமுக்ய ஜீவர் திர்வியர்களுக்கும் போக்தாவாகி தகராகாசமத்யகத னுச்சினிது பிரகாசிக்கும் பரசிவப்பிரபு ஒருவரேயாம். இது சத்தியம், சத்தியம், சத்தியம். அப்பரமன் திரு வடியினையே சரணமென்றடைந் துய்வதுதான் மேலான நலம். அந்தோ! இதுகாறு நினையாது கெட்டேன்! கெட்டேன்!" என்று திடமனைச் சிங்காதனத்தினின் றுங் கீழே குதித்துச் சத்திய லோகத்தைத்துறந்து, வழிதோறுங் கயிலாயகிரி யடைந்து, அவ்விடத் தில், பிருங்கி முதலிய பதினெண் கணங்களும் பண் பொடு முழக்கக் கண்ணுதற்பெருமான் கருணையோ டிலங்குங் கனகத்தொட்ட கனக வாலயமும், அவ்வால

யத்தின் திருவாயலிலே யினி தமருந் தண்டுழாயலங் கலாதிப்பவைகை மணமருவித்தார் எண்டிசை மணக்கு மெழிலுடை வேத்திர தற்பவடியிளையை நலம் பெறத் தாங்கிய சிலாதமுனி நயந்தளித்ததீதார் மகவாகுஞ் சிவம் பெறவந்த திருநந்தி தேவும் இருக்கக்கண்டு பிரமன், அந்நந்தியெம்பெருமான் திருவடிகளை வணங்கி விடைபெற்றுத் திருக்கோயிலுள்ளே சென்றான். அவ்விடத்தில், நாரதன் முதலிய தேவர்கள் நலம் பெறத் துதிக்கவும், கணநாதர்கள் கவரி விரட்டவும், கிம்புருஷ கந்தருவ ராதிகள் கீதங்கள் பாடவும், அட்ட வித்தியேசுரர், அட்டமங்கலந் தாங்கவும், முனிவ ரனேகர் அர அர சிவ சிவ வென்றடி போற்றவும், அரம்பையாதியர் ஆடிப்பாடவும் சிவயோகிகள் சிவானந்த மேவவும், திருவருள் மழை பொழியவும் பச்சிளங் கொடியாகிய பார்வதி தேவியாருடன் எழுந்தருளி யிருக்கும் செம்பவளம்போற் சிவந்து விளங்கும் சடாமுடியையுடைய சந்திரசேகரனைத் தன்னிரு நான்கு கண்களுங் களிப்பக்கண்டு, அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பணிந்து வந்தனை வழிபாடியற்றி, "ஈரிரு முனிவர் இன்போடு தேற இருந்து பெருஞானம் இசையுடன் சொன்ன வித்தகமுதல்வ! வினையேன் பரிபவமிங்கு கூறுவன் கேண்மோ" வெனக் கைகூப்பி அதி வினயத்துடன் சொல்லுவானாயினன் வாணிகேள்வன்.

"தளை நீறணிந்த தண்ணளியுடையோய்! நான் பந்தத்திற்கேதுவாகிய வெனது சிருட்டித் தொழிலில் அடியேனுக்கு அனுபவமாயினு மாசையில்லை. விட்டுணு வாதியேனையோர்கள் வியன்பதவியிலும் விருப்பமில்லை. தந்தாளிலே புணர்ந்து சதானந்த முத்தியடைவதற்கே முழு ஆவலுடையவனாயிருக்கின்றேன்" என்று கதறிப் பதறி யழுதனன். அவன் பக்குவத்தினைப் பார்த்துக் கைலாயபதி, "கேளாய் பிரமனே! நீ கொண்ட வெண்ணம் மிக உத்தமமானதே. அம்



முத்தி நிலைக்குத் தவமிலேயே சாதனமாம்; அத்தவத்தை சிவதலங்களிற் செய்யின் சீக்கிரம் பலனுண்டாம்; போகபோக்கியங்களைக் கொடுக்குந்தானத்தாலும் தருமத்தாலும் கிடைப்பதன்று ஆதலின், கடல் சூழ்ந்த வுலகத்திற் சத்தபுரங்களி லொன்றான காஞ்சிமா புரத்திற்கு வடகிழக்கில், விருத்த க்ஷீரநதி தீரத்திலுள்ள வலிதாயத்தை யடைந்து, தவமுஞற்றி வருவாயாயின், உன்னிஷ்டஞ் சித்தியாகும்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

பின், நாரண னுந்திவந்தோனாகிய நளின மலர் வாசியாம் பிதாமகன் பெம்மானிடத்தில் விடைபெற்றுக் குடிலையின் வடிவினை நிகரெனக்காட்டுங் கொன்றைமாமலர் மணம் எங்கணும் வீசும் விண்டொடுமதில் சூழ் வலிதாயமடைந்து, அவணுறும் ஆலயத்திற்கு மேற்றிசையின்கண் தன்பெயரானோர் தீர்த்த முண்டாக்கி; சீரடித் தேன்றுளிக்கும் நிழலில் வீற்றிருந் தருளும் வலிதாய நாதரை அன்பு மிகுந்த அருச்சனை செய்து, அருந்தவஞ் செய்யச் சங்கற்பித்துப் பவரோக நிர்மூல வருமருந்தாகிய திருநீறு பூசி உருத்திராட்ச மாலைதரித்து, சந்திரசேகரப் பெருமானுக்குரிய சதவுருத்திர மந்திரத்தைச் செபித்துக் கனிபட்சணம், சருகுபட்சணம், சலபட்சணம், வாயுபட்சணஞ் செய்பவனாகி மோட்ச விதாயமாகிய பஞ்சாட்சரத்தினைக் கணித்து இதயார விந்தத்தினடுவிலே அம்மையப்பனை யமர்ந்தருள வைத்துப் பஞ்சாக்கினி மத்தியினின்று அகோரமான அருந்தவமுஞற்றுவானாயினன்.

இவ்வாறு நெடுங்காலங் கமலவேந்தன் கடுந்தவஞ் செய்து கொண்டிருக்கையில், திரிநேத்ர தாரியாகிய சிவபெருமான் இலிங்கத்தினின்று மாவிர்ப்பவித்துக் காட்சிகொடுத்தருளினர். நான்முகன்ற னிரு கண்களுநலம்பெறத் தரிசித்து, அருட்பெருங்கடலே,


அமுதசாகரமே அடியேனை யாண்டருளும், அறுதி மலமுத்தனே! ஆணவத்தா லழிந்தேன், மாயாரகிதனே! மாயையால் மயங்கினேன், காமனை யெரித்தோய் காமத்தாற் கலங்கினேன், சிவனே! சிவனே! இனி யுன் பாதமே கதி, இனி யெக்காலத்தும் பிறவாத வரமும், இந்தத்தீர்த்தம் பிரம தீர்த்தமெனவும், இத்தலம் பிரமபுரி யெனவும் வழங்கி வரவும் கிருபை செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க அருட்பெரும் வள்ளலா மரனுங் கண்டேன், அவ்வரங்களுடன் அயனார்க்குச் சிவகணங்களுக்குத் தலைவருரு முயர்பதவியையுங் கொடுத்தருளிச் சோதி லிங்கத்துட் கரந்தருளினர்.

பிரமன் முத்தியடைந்த சருக்க முற்றிற்று.

---

## வாயுதேவன் பூசித்த சருக்கம்.

சைவதபோதனர்களே! முன்னொரு காலத்தில் ஆதிசேடனும் வாயுவும் தங்கள் தங்கள் பராக்கிரமத்தினை மிகவியந்து பேசிக்கொண்டு அதனுண்மையை வெளிப்படுத்த வெண்ணி வாயுபகவான் நெடுநேரமாலோசித்து ஆதிசேடனுடைய அகங்காரத்தினை யடக்கியாளும் வலிமையைப்பெறுவதற்கு உன்னி வலிதாயத் தலத்தினையடைந்து கருணைநிதியாகிய கண்ணுதற் பெருமானைப் பூசித்துக் கயிலை நாயகன் கருணைபெற்று அதிக வலிமையடைந்து வடாதிசைசென்று ஆதிசேடனைக்காண இருவரும் மேருமலைக்குச் சமீபத்தில் சேர்ந்தனர். ஆதிசேடன் தனது ஆயிரம் படங்களால் மேருவின் ஆயிரமுடிகளையும் மூடிக்கொள்ள வாயுவு அவ்வாதிசேடன் முடிகளைக்கிளப்பும் பொருட்டு மோதியடிக்கவாரம்பித்தனன். ஊழிகாலத்துக் காற்றினைப்போலச் சண்டப் பிரசண்டமாய் வீசுகையில் இம



வாயுதேவன் இருவேதநாயகரைப் பூசித்துப் பாபத்தைப் போக்கிக்கொண்டது.




யம், மந்தரம், விந்தம், கிடகம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதன முதலிய மலைகள் அசைந்தன, கங்கை, யமுனை சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, சிந்து, தாமிரபருணி துங்கபத்திரி, கிட்டினி முதலியநதிகள் கொப்புளித்தன, உவர்நீர், நன்னீர், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் முதலிய கடல்கள் கொதித்தன, ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் முதலியயானைகள் வீறிட்டன. இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், குபேரன், ஈசானன் முதலியோர் பயந்தனர். சூரியன், சந்திரன் வழிதடுமாறினர். நட்சத்திரங்கள் உதிர்ந்தன. முனிவர்கள் பயந்தனர். அண்டபகிரண்டங்களின் அடுக்குகள் குலைந்தன. பூமியிலொரு காரியமு நிகழ்வதற் கேதுவில்லாமற் போயிற்று. இத்தகைய விபரீத வினைவினையறிந்த தேவர்கள் வாயுவினையடுத்துத் தனது செயலினைக் குறைக்கும்படி தங்களாலியன்ற வரையில் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு மிசையாதிருக்க, ஆதிசேடனை யடுத்து ஐய! உலகங்களெல்லாம் இன்னுஞ் சிறிது நேரத்தில் அழிந்து விடும்போலிருக்கின்றது. உங்களிருவர் சண்டையில் உயிர்கள் அனேகமாயிறபடுகின்றனவே இது தருமமாகுமோ, வாயுவோ எங்கள் வேண்டுகோளுக்குச் சிறிது மிசையாமல் முரட்டுத்தன்மை வாய்ந்திருக்கின்றான். நீ யாகிலுந் தயைசெய்து உலகோபகாரமாக உன் ஆயிரம் படங்களிலொன்றை யாகிலும் சிறிது எடுக்கக்கடவை யென்று வேண்ட, ஆதிசேட மனமிரங்கி யொரு படத்தினைச் சிறிது தளர்த்தினன், உடனே அப்படத்தின் கீழ யிருந்த பெருமுடியி லொன்றினைப் பெயர்த்து வாயு பகவான் வீசி யெறிந்தனன். இதனால் வாயு தான் செயித்து விட்டதாக வீறுமாப்படைந்து செல்லுகையில் நாரதமுனிவர்கண்டு வாயுவே நீ என்ன காரியஞ்

செய்தனை, நீ யுலகத்திற்கு அனேகமான விடையூறு விளைத்தனை. பல முனிவர்கள் தங்கள் தவங்களை விட்டனர். அனேக வுயிர்கள் மாண்டன, இவற்றால் பெரும்பாவத்தினை யேற்றுக்கொண்டாய் இங்ஙனம் செய்தல் தகுதியாமோ வென்றனர். வாயு திகிலடைந்து ஐய! இத்தகைய விபரீதம் விளையுமென் றெண்ணாது செய்துவிட்டனன். இனியான் என்செய்வது, என் பாவத்தினைப் போக்கடிக்கத் தேவரீரே பரிகாரம் சொல்லவேண்டுமென்று இரங்கிக் கேட்டுக்கொண்டனன். நாரதர் வாயுவை நோக்கி, மாருதமே! சர்வமங்களகரனான நமது சிவபெருமான் மிக விரும்பத்தக்க வலிதாய தலத்தினை யடைந்து பூசிப்பையேல் சுத்தனாவாயென்று கூறியேகினர். உடனே வாயு வலிதாயத்திற்குச் சென்று பரத்துவாச தீர்த்தத்தில் படிந்து விபூதியுருத்திராட்சமணிந்து பஞ்சாட்சரத்தியானத்துடன் வலிதாய நாதனைப்பூசித்து வருகையில் சுவாமி வெளிவந்து வாயுவே! நினது பாவமனைத்தும் நீங்கியது இனி நீ சுகமாக வாழக்கடவாயென்று வரமருளி மறைந்தனர். வாயுவும் ஆனந்தங்கொண்டு சில நாள் அத்தலத்திலேயே வசித்திருந்து தனது உலகம் போய்ச் சேர்ந்தனன்.

வாயுதேவன் பூசித்த சருக்க முற்றிற்று.

## மன்மதன் இந்திரன் பூசித்த சருக்கம்.

தவளநீறணிந்த தன்மையுடையோரே! சகல தேவாதி தேவனாகிய சிவபெருமானை நிந்தித்துத் தக்கனடத்திய வேள்வியினைச் சார்ந்த தேவர்கள் துன்பமனுபவிக்கும் பொருட்டுச் சூரபத்மன் பிறந்து நூற்றெட்டு யுகமாகத் தேவர்களை வருத்துவதைக்கண்டு அத்



மன்மதன், இந்திரன் இவர்கள் இறைவியிடைந்து, வலிந்தாயகாதலைப் புகுத்தத் தீங்கச் செய்ய
பயந்தப் போக்குகொண்டது.



துன்பத்தினைச் சகியாதவர்களாகித் தேவர்களிற் சிலர் பிரமாவினை யடைந்து மலரடி பணிந்து எங்கள் துன்பத்தினை நீக்கி யருளவேண்டுமெனப் பலபலவாகத் தோத்தரிந்து நின்றவருள் இந்திரன் மொழிகுவான். நான்முகக்கடவுளே! அதிவீர பராக்கிரம சாலியாகிய சூரனால் எங்கள் வலியாவுஞ் சிந்தினம் அநேகமான வேலைகள் செய்து இளைத்தனம். சூரனுக்குச் சமையற் செய்பவன் அக்கினி, சலங் கொணர்பவன் வருணன், விடு சுத்தஞ்செய்பவன் வாயு, தீபமேற்றுபவன் சந்திரன், பஞ்சாங்கஞ் சொல்பவன் தேவகுரு, அவுணர் அங்காங்குச் செல்லுந்தோறும் பின்னர் சென்று நாக் கானது வறண்டு உளந்துமொழிப் பின்றொடு செல்லும் சேவகனென், சமுத்திரத்தினின்று மீன்களைப் பிடித்துச் சுமந்து கொண்டு வருபவர் மற்றைய தேவர்கள் இத்தகைய இழிவான தொழில்களைச் செய்து பிழைக்கின்றோம் நாங்களுஞ் ஜீவிக்கும்படி கிருபைசெய்தருள வேண்டுமெனக் கண்ணீர் சொரிய நின்றனர். இரணிய கருப்பன் இந்திரனை நோக்கி ஐய! என் செய்வது பூர்வத்தில் நமது ஆண்டவனாகிய சிவபெருமானை விரோதித்த மகாபாவியாகிய தக்கனென்பவனுடன் சினேகித்திருந்ததனால் இத்தகைய துன்பங்களை யநுபவிக்கும்படி நேரிட்டிருக்கிறது. நமது சிவபெருமான் திருவருள் கிடைத்தாலன்றி யித்துன்பம் நீங்காது. தேவேந்திரனே! நானொரு சூழ்ச்சி சொல்லுகிறேன். கேட்பாயாக உலகமாதாவாகிய பார்வதியார் மேருசாரலில் தவஞ்செய்து கொண்டிருக்கிறார். மகாதேவர் கைலையின் கண்ணே யோகத்தில் வீற்றிருக்கிறார். மூவர்க்கு முதல்வனாகிய மூர்த்தி உமையாளை மணந்து சிவசுப்பிரமணியக்கடவுளைத் தருவரேல் அவர் சூரனைக் கொன்று தேவர்களிடுக்கணை யொழித்தருளுவர். தேவாதி தேவனாகிய பெருமான் யோகத்தினின்று நீங்கவேதாவது தக்கமுயற்சி செய்யக்கடவாயென்ற

ளர், கேட்ட வாசவன் மகிழ்ந்து இதற்கேற்றவன் மன்மதனே யெனத் தீர்மானித்து அவனை யழைப்பித்து மாரனே, சற்றேனு மில்லாத சருகுகளையுண்டு இனியயோகஞ் செய்துகொண்டிருக்கும் விரமிருத்த முனிவர்களுடைய பெருமைபொருந்திய மனதினுள்ள தவவலிமை கெட அகற்றி அம்முனிவர்கள் அழகிய மாதர்களோடு சேர்ப்பிக்கும் மாட்சிமையுடையவனே! கேட்பாயாக நதியானது இளமையான கன்றுக்குட்டி அலறும்படித் தாய்ப்பசுவை யடித்துக்கொண்டு போகும்போது அதனைத் தடுக்காமல் கரையிலிருந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிற யாவர்க்கும் பாவமுண்டாகாது. அவ்வெள்ளத்திற் சென்று அதனைத்தடுத்து மீட்டுக்கொண்டுவரும் சக்தியினை வாய்ந்தும் அங்ஙனஞ் செய்யாது கரையிலே சும்மாவிருப்பார்களேயாமாயின் அவர்களையே பாவமடையும். அது போல, வெளுத்துத் திரண்டு பருத்து குளிர்ச்சிபொருந்திய முத்துமாலைகளைத் தரித்து இளைத்துக் குவிந்த தனங்களையுடைய மாதர்களையும், திரண்ட தோள்களையுமுடைய புருடர்களையும் ஒன்றுய்ச் சேர்ப்பித்து அவர்களுக்குக் கலவியினை விளைவிக்கும் வல்லமை உன்னிடத்தி லிருப்பதால் கரும்பு வில்லினையுடைய காமனே! நீ தற்காலம் தேவர்களுக்குண்டான இடுக்கணொழியும்படி, வெள்ளிமலையில் வீற்றிருக்கும் விமலனரை யோகத்தினின்று நீக்கி விமலையினை விவாகஞ் செய்து கொள்ளும்படி செய்யக்கடவாய் அங்ஙனஞ் செய்யாயேல் உன்னையே துன்பமடையு மென்றனர்.


அங்ஙனமே செய்து முடிப்பதாக விசைந்து இந்திரனிடத்து விடைபெற்றுக் கயிலைக்குச் சென்று பஞ்சபாணங்களை வில்லிடையேற்றிக் கண்ணுதற் கடவுளின்மீது பிரயோகித்து விட்டனன். காமவாளி யானது சந்திர சடாதரனுகிய சாம்பசிவன் திருமேனியில் தாக்கியபோது தாமரைப்புட்பத்திற்கு முன்னே



மற்றக் குளிர்ச்சி பொருந்திய புட்பங்கள் போலாயின. யாதொரு விகாரத்தினையுஞ் செய்யாது அவ்வம்புகள் அழிந்து விட்டனவேயாயினும் அகாரவாச்சியனுகிய அமலனை அதிகக் கருவத்துடன் வெல்லும்படி நெருங்கியதால் அம்மன்மதனைத் தமது நெற்றிக் கண்ணினுல் பார்த்தனர், அண்டகோடிகளை யெல்லாம் அரைக்கணத்தி லழிக்கத்தக்க நெற்றிக்கண்ணினிற்கு முன்னும் நிற்பவர் யார்? கொழுந்து விட்டு எழுகின்ற அக்கினியின்மேல் விழுந்த ஈயைப்போல காமவேந்தன் வெந்து சாம்பலாயினன். இதனை யறிந்த இரதியானவள் ஐயகோ! ஐயகோ!! என்றலறிக் கீழே விழுந்தனள், பெருமூச்சுவிட்டனள், ஒடுங்கிச் சோர்ந்தனள். முலைகள் சிவக்கும்படி அடித்துக்கொண்டனள், வயிறு வீங்கும்படி அழுத்தினுள், கைகளை நெரித்துக்கொண்டனள் கூந்தலும், கரங்களும் கண்ணீரும் பூமியில் தழுவ முகம்வாடித் தவித்திட்டு என்றனுயிரே! என் கண்மணியே! எனக்கோருந்துணையே! எங்ஙனம் பிழைப்பேன். இந்திரனுக்குக் காமத்தினை மூட்டி ஆயிரங் கண்ணாகச் செய்தாய், பிரமனுக்குக் காமத்தினை மூட்டி அவன் பெண்ணின்மீது இச்சைவரச் செய்தாய், விண்டுவினுக்குக் காமத்தினை மூட்டிச் சுடுகாட்டி லலையச்செய்தாய் இத்தகைய நினது செயல் சிவபெருமானிடத்திற் செல்லுமா? தேவர்கள் உன்னையேவிட்டு இப்போது எங்கே நிற்கின்றூர்களோ இப்போது நான் துக்கப்படுகின்றேனு? அவர்கள் மனைவிமார் அழுகின்றூர்களா எனப்புலம்புகையில், தேவர்கள் பார்த்து வருந்தித் தங்கள் நாதனுகிய சாம்பமூர்த்தியின் திருவடிகளை மனத்தினில் தியானித்துத் துதிசெய்தார்கள்; சுவாமி யோகநீங்கித் தமது திருவுளத்தில் நந்திதேவரை நினைத்தருளினூர். நினைத்த மாத்திரத்தில் நந்தியெம்பெருமான் அறிந்து சென்று அவர் தம்பாதங்களைத் தொழுது நிற்க, நீ பிரமன் முத

னிய தேவர்களை யிங்கேயழைத்துக் கொண்டு வாவென்று கட்டளை யிட்டவளவில் நந்திதேவர் அழைத்துக்கொண்டு போனபோது அவர்களைநோக்கி நீங்கள் விரும்பியதென்னவென்று வினாவிக் கேட்க. எங்கள் ஐயனே! தேவரீர் உமையம்மையைத் திருமணஞ் செய்துகொண்டு ஒரு புத்திரனை யளித்தருள வேண்டுமென்று வேண்ட அங்ஙனமே செய்கிறோமென அவர்களை யனுப்பிவிட்டு, இரதியை நோக்கிப் பார்வதியைத் திருமணஞ்செய்து கொண்டு உன் கணவனையுந் தருகிறோம் நீபோவென்று திருவாய் மலர்ந்தருள இரதி யிமயமலையிற் போய்ச்சேர்ந்தாள்.

பரிபூரணசச்சிதானந்த பிழம்பாகிய பரமசிவம் இடபவாகனத்தி லெழுந்தருளி, தேவர்களனைவரும் சூழ, முனிவர்க ளொருங்கு இமயமடைந்து, மேவி யருஞ்சாயல்போன்ற, மலைமகளை மணந்து தேவர்கட்கு அனுக்கிரகஞ்செய்து கொண்டிருக்கையில் இரதிதேவி யாந்து வணங்கி வேண்டப் பரமசிவமானவர் மன்மதன் வரும்படி திருவுளத்திற் சிந்தித்தவுடன் மாரன் தோன்றித் திருவடியில் வீழ்ந்து நமஸ்கரித்துப் பிழையினைப் பொறுத்தருள வேண்டுமெனப் பலவாறு பிரார்த்தித்து வேண்டிக்கொண்டு விடைபெற்று இரதியுடன் சென்றனன். பின்னர் இந்திரன் மன்மதனையடைந்து அன்றுக்கினிய காமனே! நாமென்னகாரியம் செய்து விட்டோம், சர்வவல்லபமாத் தன்மைபொருந்திய சாம்பசிவத்தின் மகிமையினை நாமறிந்திருந்தும் நம்முடைய உன்மத்தால் புத்திமயங்கி அவர் யோகத்தினைக் கலைக்க முயற்சித்தோம். நானேவியபடி நீ செய்தாய், இருவரும் பாவத்திற்குட்பட்டோம் இப்பாவத்தினை யொழித்துக் கொள்வதற்கு வகைதேடவேண்டும் இது சிவலிங்க பூசையாலன்றி நிவர்த்திக்காது ஆகலின், பூர்வத்தில் நமது குலகுருவாகிய பிரகஸ்பதி பகவான் பூசித்துத் தனக்குக் காமத்தால்விளைந்த பாவத்



அக்கினி தான்செய்த அடாத காரியத்திற்கு, திருவலிதாயமடைந்து கடவுளைப் பூசித்துத் தன் குற்றத்தை மன்னித்துக்கொண்டு தனது கதியடைந்தது.



தினை நீக்கிக்கொண்டு பேறுபெற்றதும், அமலமுனிவராகிய அகத்தியர் அனுக்கிரகம்பெற்றது மாகிய வலிதாயத்தினை அடைக்கலமாக வடைவோமென இருவருஞ் சேர்ந்து தெற்கு நோக்கி வந்தடைந்து பரத்துவாச தீர்த்தத்திற் படிந்து விபூதி உருத்திராக்கமணிந்து வலிதாயநாதனைப் பூசித்து வருகையில், ஒருநாள் பொன்னகர்க்கிறைவனே, பூமகள் மகனே, நீங்களிருவரும் என்பாற் செய்த தீமையாலுண்டாகிய பாவமானது உங்களைவிட்டு விலகும்படி கருணை செய்தோம். இனி நீங்கள் சுகமே உம்பருலகத்திற்குப் போகக்கடவீர்களென, அசரீரி ஆகாயத்திலுண்டாயது கேட்ட இருவர்களும் ஆனந்தித்து ஆடிப்பாடிக் கொண்டாடிப் பெருமகிழ்வுடன் தங்களிருப்பிடம் போய்ச்சேர்ந்து வாழ்ந்தனர், அக்கால முதல் யானையும் வெல்லுமீசியென வொருபெயர் வலிதாயநாதனுக்கு வழங்கலாயிற்று.

மன்மதன் இந்திரன் பூசித்த சருக்க முற்றிற்று.

## அக்கினி பூசித்த சருக்கம்.

சிவநேசப்பெரியவுடையீர்! அக்கினிதேவனொருகாலத்தில் எங்குஞ் சஞ்சரித்து உலாவி வருகையில் தெற்குத்திசையினை யடைந்து எமலோகத்திற்சென்று அவன் வீட்டிற் பிரவேசிக்க அவ்வியமன் மனைவி சாமளை தனியாயிருப்பதைக் கண்டு நெருங்கி அவள் வாய்ந்த கயல்போன்ற விழியினையும், வில்போன்ற புருவத்தினையும் மூன்றாம்பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியினையும், மேகம்போன்ற கூந்தலினையும், கண்ணாடி போன்ற கபோலத்தினையும், முத்து போன்ற பற்களையும், கோவைப்பழம்போன்ற உதட்டினையும்,


குயிழம்பூபோன்ற மூக்கினையும், வள்ளைப்பூபோன்ற காதினையும், கமுகுபோன்ற கழுத்தினையும், வேய்போன்ற தோளினையும், தங்கக்கலசம்போன்ற தனங்களையும், ஆலிலைபோன்ற வயற்றினையும் நீர்ச்சுழிபோன்ற உந்தியினையும், உண்டோ இல்லையோ வெனச் சந்தேகிக்கும்படியான இடையினையும், ஆலவட்டம்போன்ற அல்குலினையும், வரால் மீனையொத்த கணைக்கால்களையும், ஞெண்டையொத்தபரட்டினையும், செம்பஞ்சியூட்டிய அடியினையும் கண்டுமயங்கி மோகாந்தகாரனாகி மூர்ச்சித்துத் தெளிந்து சாமளையை நோக்கிச் சொல்லுவானாயினன். பெண்கள் நாயகமே! நான் உனது நாயகனைக் காணவந்தவிடத்தில் உன்னைத்தனியேகண்டு நின்னழகால் அறிவுகலங்கி அலைப்படுகிறேன். நீயிதுசமயத்தால் உயிர்ப்பிப்பேன், உடனே என்னை ஆலிங்கனஞ் செய்து எனது ஆவியினை நீக்கியாட்கொள்ளுவாய், நீயும் ஆலோசிப்பதிற் பிரயோசனமில்லை. ஆபத்துக் காலத்தில் ஆட்கொள்ளுவதே அறிவுடையோர்க்கழகு. என்மீது பிழைகுற்றமில்லை. இவ்வளவிற்குங்காரணம் உன்னுடைய சௌந்தரியமே ஆகையால் நீ தடைசெய்யப்படாது என்றனன். சாமளை அக்கினிபகவானை நோக்கி ஐய! இஃதென்ன விபரீதம்! உன்னைப்போன்றதேவர் இங்ஙனமாய்க் கூறுவது அழகாமா? மற்றைய தேவர்கள் கேட்டா னகையாரா? நான் ஒருவருடைய மனைவியல்லவா? எனது நாயகன் உனக்குச் சிநேகிதனல்லவா? காமத்திற்குக் கண்ணில்லை யென்னும் பழமொழிக்கிணங்க இவ்வாறு முன்பின் ஆலோசியாது பேசுகிறீர். சற்று நிதானித்துத் தரும விஷயத்தை யோசித்துப் பாரும்! நானோ உமக்குச் சொல்வது? அக்கினிபகவானே, நமஸ்காரம் போய்வாருமென்றனள். இவ்வார்த்தைகளைக் கேட்ட அக்கினி சொல்லுவானாயினன். பெண்



மணியே! என்னிருகண்மணியே! கோபியாதே கிணற்றில் விழுந்துவிட்டவனை உடனே யெடுத்து வெளிவிட்டுக் காப்பாற்ற வேண்டுவதேயன்றி, இந்தவழி ஏன் வந்தாய், கிணற்றிலேன் விழுந்தாய், எப்படிவிழுந்தாய், கிணறு இங்குள்ள தென்பதைத் தெரியாமற் போச்சுதா? கண்ணில்லையா? என்று கேட்டுக்கொண்டிருக்கிற ஒரு புத்திசாலியின் பேச்சைப்போலிருக்கிறது உன்னுடைய சிங்காரமானவார்த்தை. சுகிர்தவமிர்தமொழியுமிழும் கயல்விழித் தோகையே! தேவர்கணகைப்பரெனச்சொல்லினையே, அவர்கள் தன்மையை நீயும் நானுமறியேமோ? உனது நாயகனாகிய நமன் டிண்டிடை மனைவிசாளையையும், உனது மாமனாகிய சூரியன் அந்தகவருக்கனிம சன்மகள் ஆனந்தையையும், உங்கள் இராஜனாகிய தேவேந்திரன் கௌதமர் மனைவி அகலிகையையும் உனது மைத்துனனாகிய சந்திரன் தனது குருவின் மனைவியாகிய தாரையையும், உங்கள் குலகுருவாகிய பிரகஸ்பதி அவர் தமையன் உதத்தியர் மனைவியாகிய மமதையையும், விண்டு சலந்தரன் மனைவியாகிய பிருந்தையையும், பிரமா தனது புத்திரியாகிய பத்மையையும் சேரவில்லையா? இது எல்லாவுலகுமறியுமே. இதனாலவர்கட்கு என்ன அபகீர்த்தி வந்த[illegible]. [illegible]ரசியே! நீ அழகிற் சிறந்திருப்பது போல் [illegible] யத்திலுஞ் சிறந்திருக்கவேண்டா[illegible] எனதெண்ணப்படி. சாதகமாகத் தயை செய்ய[illegible]மென விரண்டு கால்களையும் பிடித்துக்கொண்ட[illegible]. சாமளையுமிதற் குஞ்சிரிப்புக் கொண்டு கடைக்[illegible]ற் குளிர்ச்சியாய்ப் பார்த்தாள். உடனே அக்கினி [illegible]து ஆலிங்கனஞ் செய்து கொள்ள இருவரும் ப[illegible]ளியறையிற் புகுந்து சரசசல்லாப கலவியமளி முகற் [illegible] ரலக்கல் பன் [illegible]தம் சந்த, கதம்ப, கஸ்தூரி, புனு[illegible] னீர், கொந்தம், ஆலிங்கன, தாடன, [illegible]

முதலிய கரிகாலீலைகளுங்கண்டு ஆனந்தங்கொண்டனர்.

பின்னர் சாமளை அக்கினி தேவனைநோக்கி, என்னருமைச் சிநேகனே! உன்விருப்பத்தின்படி காரியநிறைவேறியது. எனது நாயகன்வரும் வேளையாயிற்று, சீக்கிரமிவ்விடத்தினைவிட்டு நீங்கிவிடுவாய், மற்றொரு காலத்தில் உனக்கிஷ்டமானபோது வந்திருந்து சுகித்துப்போகலாமென்றனள். அக்கினிபகவான் சாமளையைப் பார்த்து, அடியென் கண்மணியே! ஆசை நாயகியே! இருக்கணமு முனைப்பிரியேன், பிரிந்தா லுயிர்தரியேன், எமன் வந்தாலும்சரி, நமன்வந்தாலும்சரி, எனக்கச்சமில்லை யென்றனன், உடனே இயமன் தலைவாயலில் வந்தனன். சாமளை அக்கினியை விழுங்கி விட்டனள். அதுமுதல் சாமளை இரவில் இயமனுடன் கூடியிருப்பள். பகலில் அக்கினியையுமிழ்ந்து அவனுடன் கூடியிருப்பள். இவ்வாறு சிலகாலஞ்செல்ல, உலகத்தில் அக்கினியில்லாமல் பிராமணர்கள் தேவர்கள் முதலியோர் வருந்தித் தியானித்துச் சங்கதிதெரிந்துகொண்டு வாயுபகவானை யழைத்து உனது தோழனான அக்கினிபகவான் எங்கேபோனானென்று கேட்டார்கள், அதற்கிவன் அவன் போனவிடம் எனக்குந் தெரியாதென்றான், பின்னர் தேவர்கள் எப்படியாவது நீயவனையழைப்பித்துக் கொடுக்கவேண்டுமென்றுகூற தனும், வாயுபகவான் எல்லாத்தேவர்கட்கும் தன்வீட்டில் போசனஞ் சொன்னான். இயமனுக்கும் அவன் மனைவிக்கு முன்னே முன்னிலையிட்டான். அதற்கு இயமன் எங்கள் முன் முன்னிலை ஏன் போட்டாயென்றனன். வாயுபகவான் இயமனைப் பார்த்துச் சிநேகனே! உனக்கொன்றும், உன்மனைவிக்கொன்றும், உன்மனைவியுதரத்திலுள்ள அக்கினிபகவானுக் கொன்




சூரிய சந்திரர் திருவலிதாய நாதனைப்பூசித்து, கிரகணகாலத்தில் யாவரும ஸ்நானஞ்செய்து, மந்திரம் ஜெபிக்கும் படிக்கும், அது இப்பரத்துவாசதீர்த்தத்தில் செய்யின் ஒன்று ஆயிரமாகப்பலன் உண்டாகு மென்றும் வரம் பெற்றது.



றுமென்று கூறி, வாயுதேவன் சாமளையைப் பார்த்து மாதே! உன்வயற்றிற்குள்ளிருக்கிற அக்கினிபகவானை யுமிழென, அப்படியே யவளுமுமிழ்ந்தாள், அப்போது இயமனுக்குக் கோபமுண்டாகி அக்கினியைத் தண்டத் திலடிக்கச்சென்றனன். அதற் கக்கினிபயந்து சகலசரா சரங்களிலுமொளித்துமறைந்தவனாயினன். பின்பு அக் கினிதேவன் தான் செய்தகாரியம் அடாத அநீதி யென்று ஆலோசித்து அதற்குப் பரிகாரந்தேட வினைத் துத் தனது தோழனாகிய வாயுதேவன் பூசித்துப் பேறு பெற்றதும், ஏழுகோடி மகா மந்திரங்களும் உப மந்திரங்களும் யாவர்க்கும் சந்தேகமறத் தெளிவிக் கின்ற பாடல மரத்தின் சாரூபபதவியை அடைந்தன போல அழகிய பாதிரிமரங்கள் அநேகஞ் சூழப்பட்டி ருப்பதும் அப்பாதிரிமரத்தி னொன்றி னிழலிலே எழுந் தருளியிருக்கும் வலிதாய நாதனை வணங்கத் தீர்மானி த்து அத்தலத்தினையடைந்து அகத்தியத் தீர்த்தத்திற் படிந்து விபூதி உருத்திராட்சம்பூண்டு அநேகநாள் சிவ பூசைசெய்துகொண்டிருக்க அக்கினிதேவனே! உன்குற் றத்தை மன்னித்தோம் எனவசரீரி ஆகாயத்திற்கூற வொருநாள் கேட்டு ஆனந்தமுற்று ஆடிப்பாடித் தோத் திரித்து அருள் வாய்த்தவனாய்த் தேஜோநகரையடை ந்து சுகித்தனன். அன்றுமுதல் வலிதாயநாதனுக்கு வ ன்னீச்சுரரெனப் பெயரும் வழங்கியது.

அக்கினிதேவன் பூசித்த சருக்க முற்றிற்று.

## சூரிய சந்திரர் பூசித்த சருக்கம்.

சிவநேசச் செல்வர்களே! முன்னொரு காலத்தில் முகுந்தன் முதலிய தேவர்களும் அசுரர்களும் சிராஞ் ஞையின்றித் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில்

ஆலகால விடந்தோன்றிற்று. அவ்விடத்தினைக் கண்டு பயந்து அவர்கள் திக்குத்திசைக்கண்ட யானைகள் போலக் கலக்கமடைந்து ஓடிப்போய்த் திருக்கைலாயத் தினையடைந்து, சந்திரசேகரனாகிய சிவபெருமான் திருவடிகளை வணங்கி யடைக்கலம்புக, கருணாநிதி யாகிய கண்ணுதற் பெருமானும் அவர்களை யஞ்ச வேண்டாமென்று தாமே அவ்விடத்தினை யமுதாய்க் கொண்டு புசித்து, திருமால் முதலிய தேவர்களை * நோக்கி திருவலிதாயத்தினை யடைந்து நம்மைப் பூசித்து இன்னும் நீர் பாற்கடலைக் கடைவீராயின் அமுதந்தோன்றுமென அங்ஙனமே யவர்கள் அப்பாற் கடலையடைந்து முன்போல கடைந்தார்கள். அவர்கள் கணேசப் பெருமானை வழிபாடுசெய்யாமையால், கட லில் நட்டமத்தாகிய மந்தரமலையாழ்ந்து வீழ்ந்து நாக லோகத்திற் போய்ப்படிய அதுகண்டு விநாயகக்கட வுளை வணங்கி யர்ச்சனை செய்ய, மந்திரமானது பழை யபடி பிலத்தினின்றும் பெயர்ந்து மேலே யெழ மகிழ்ந்து வணங்கித் திருமகணாயகனாகிய திருமால் முதலோரேறி மீண்டுங் கடலைக்கடைந்தார்கள். அவ் வாறு கடைகையில் அமுதம்பிறந்தது. அதைக்கண்ட வானவர்களும், தானவர்களும் அவ்வமுதத்தை விரும்பி ஒருவர்க்கொருவர் மாறுபட்டுக்கொண்டு எனக்குரியது எனக்குரிய தென்றுபோர் செய்யத்தொடங்குகையில், விஷ்ணுமூர்த்தி மோகினி வடிவாயினர். அவுணர்களோ மண்ணிலும் விண்ணிலும் மற்றுலகத்திலுங்காணக் கிடையாத பெண்ணுருவத்தினைக்கண்டு அமுதத்தை விட்டு அவளைச் சூழ்ந்துகொண்டார்கள். மோகினி யாகிய திருமால் நான் வந்திருக்கிறேன். என்கையில்

* தேவர்கட்கு மங்களமுண்டாக வலிதாயத்தில் வந்து மந்தராசலமெடுத்தமையின்று இக்காரணத்தினால் மந்தராசல பதியென்றும் பெயருண்டாயிற்று.




அமுதமுமிருக்கிறது. நான் வேண்டுமா? அமுதம் வேண்டுமா சொல்லென்றனர். அப்போது தேவர்கள் அமுதமே வேண்டுமென்றனர். அசுரர்கள் நீயே வேண்டுமென்றனர். இமையவர்கள் அமுதம் பெற்ற னர். தைத்தியர்கள் மோகினியை யழைத்துக் கொண்டு ஓரிடத்தில் போயினர். நாரணர் அவர்களை நோக்கி நிசாசரர்களே! உங்களுள் யார் என்னையணை பவரென்றனர். அதைக்கேட்ட அவர்கள் ஒவ்வொரு வரும் அம்மோகினியைக் கூடவேண்டுமென்றெண்ணமை யால் தங்கட்குள்ளே போர்செய்து ஒருவரையொரு வர் கொலை செய்துகொண்டு மாண்டனர். அவ் வசுரர் கூட்டத்திலிருவர் இது விஷ்ணுவின் மாயை யென்றறிந்து தம்முருவைமாற்றித் தேவர்கள் போலுருக் கொண்டு அத்தேவர் கூட்டத்திற் புகுந்து வாழ்ந்தனர். மோகினியாகவந்தமாயன் தானவரெல்லாமொழிந்தன ரென்று மீண்டு தேவரையடைந்து அவர்கட்கு மத்தியி லிருந்து அமுதத்தினைத் தேவர்கட்குப் பங்கிட்டுக் கொடுக்கையில் தேவருள் மத்தியிலிருந்த அசுரரிருவர் மந்திரஞ்சொல்லாமலே அமுதத்தை புண்ணுவதனைச் சூரிய சந்திரரிருவருங் கண்டு இவர்கள் வஞ்சனையுடன் கொண்டிருக்கு மசுரரென மோகினிக்குக் கண்காட்ட அம்மோகினிதன்கையிலிருந்த சட்டுவத்தால் அவர்கள் தலைமேற் புடைத்தனர். அவ்வமுதம் அவர்கள் கண்டத் தில் வருமுன்னரே துண்டித்ததனால் யாக்கை நீங்க அற்றதாகத் தலையுடைய அவர்கள் மாட்சிமைநோக்கி, அமுதுண்டமையால் விண்ணில் நிற்பவெனத்துணிந்து அவர்கட்குச் சிவபெருமான் திருவருள் பெறுவித்து அவர்களை ஏழு கிரகங்களுடனே சாயாக்கிரகங்களாகிய இராகு கேதுக்களாக வைக்க அவர்கள் பரம சிவனைப் போற்றித் தவஞ்செய்து கரும்பாம்பு செம் பாம்புகளாக விருக்க வரம்பெற்றுத் தம்மைக் காட்டிக்

கொடுத்த சூரியசந்திர ரிருவரையு மறைந்து வருவாராயினர்.

பின்னர் சந்திர சூரியர்கள் இருவரும் மோகினிக்குத் தானவர்களைக் காட்டிக்கொடுத்த தோஷத்தினை நீக்கிக்கொள்ள தெய்வமென வாலோசித்துத் தங்கள் குலகுருவாகிய பிரகஸ்பதி பகவானை யடுத்துக் கேட்க அவர் அவர்களை நோக்கி, ஐயன்மீர்! குறுமுனிவர் விருப்பத்தின்படி ஆகாயகங்கையானது குசைஞானியிற் றோன்றிக் குசல நதியாக விளங்குகின்ற ஆதம்யன் தீரத்தில் * மகிமை பற்பல வாய்ந்துள்ள வலிதாயத்தினை யடைந்து சாம்பெருமானைப் பூசிப்பீரேல் புண்ணியம் பெறுவீரெனக் கூற, அவ்வார்த்தையினைச் சிரமேற்கொண்டு அந்தேவகுருவினிடம் விடைபெற்று வலிதாயமடைந்து பாரத்துவாசத் தீர்த்தத்திற் படிந்து விபூதி புருத்திராட்சம் பூண்டு சிவ மந்திர செப பாராயணஞ்செய்து சிவலிங்கப்பெருமானைப் பூசித்து வருகையில் சிவபெருமான் பார்வதி தேவியாருடன் இடப வாகனத்தின்மேல் காட்சி கொடுத்தருளக்கண்டு அவ்விருவரும் ஆனந்தக்கடலில் அழுந்தினர்கள். கங்கு கரையில்லாமற் பெருகிவரும் அன்புடன் கைகூப்பித் தொழுகின்ற சந்திர சூரியரிருவருக்கும் கைலாசபதியாகிய கண்ணுதற்பெருமான் அநுக்கிரகஞ்செய்து அன்பர்காள்! உங்கட்கு வேண்டும் வரம்யாது? சொல்லுங்களென்று திருவாய் மலர்ந்தருள, அவர்கள் கைகளைக்கூப்பிக் கண்ணீர்பெருகச் செந்தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தொழுது ஐயனே! மோகினிக்குத் தானவர்களைக் காட்டிக்கொடுத்ததனால் உண்டாகிய பாவங்களை விட்டொழிய வேண்டும். அவர்

* இக்குசல நதி சரித்திரம் பஞ்சேஷ்டிபுராணத்தில் கசேது பேறுபெற்ற சருக்கத்திற்காண்க.





கள் இராகுகேது என்னும் பாம்புகளாகி எங்களை மறைக்கிறபோதும் விடுகிறபோதும் உலகத்தினர் சமுத்திரத்திலும் நதிகளிலும் தடாகங்களிலும் ஸ்நானஞ்செய்து வரவேண்டும். அக்காலத்தில் மந்திரஞ்செபிக்கின் அநுபவிக்கிடவேண்டும். அந்தகைய ஸ்நானமும் மந்திரமும் இவ்வலிகாயத்தில் பாதாளவாச தீர்த்தத்தில் செய்யின் ஒன்று ஆயிரமடங்காகப் பலன் சித்திக்க வேண்டும் என்றனர். அங்ஙனமே அவ்வரங்களைத்தந்து அமலன் அந்தரத்தியானமாயினர். சந்திர சூரியரும் தங்களுலகமடைந்தனர். அதுமுதல் இந்நகரம் ஆதித்தபுரமெனவும் நிசாபதிநகரெனவு மழைக்கப்பட்டது.

சூரியசந்திரர் பூசித்த சருக்கம் முற்றிற்று.

## விண்டு பூசித்த சருக்கம்.

சிவபாத விருதயர்களே! சலந்தராசுரன் மூன்று லோகங்களையுந் தன்காலின்கீழ் அடங்கவைத்து, ஏகச்சக்கராதிபதியாய் ஆளுங்காலத்தில், இந்திரன் முதலான திக்குப்பாலர்களையும், தாமரைப்பூவிலிருக்கும் சதுர்முகனையும், துளபமாலை யணிந்த திருமாலையும் அத்திருமாலுக்கு வாகனமாகிய கருடனையும், நாகபாசத்தினாற் கட்டிச் சிறையிட்டு வைத்தான், சிலநாள் செல்லத் தேவர்கள் எல்லாரும் கூட்டமாய் வந்து,வணங்கி, அந்த வசுரனைவேண்டித் திருமாலையும் கருடனையும் சிறையிலிருந்து மீட்டுக்கொண்டு போனார்கள், பின்னர் அசுரன் தனக்குயாரும் சமான மானவ ரின்றி வாழுங்காலத்தில், இடபவாகனனாகிய எம்பெருமானுடன் யுத்தஞ்செய்யக் கருதிச் சர்வாயுத பாணியாய்ச்செல்ல, அவன் மனைவியாகிய பிருந்தை அதிக்கோடிவந்து கணவனை மறித்துக்கொண்டு பிராணநாயகா! திருக்

கயிலைக்குப் போகவேண்டாம்; பரமசிவனுடனெதிர்த்தவர்களில் யாவர் பிழைத்தனர். பிராணவானிவருமென்று பலவகைகளாலே தெருட்டவுங் கேளாமல் ஆயிக்கொண்டு யாழ்ஙியின அண்ட இராசரூடனாகி, சமுத்திரம்புரண்டதற்கிணையாகநடக்குஞ் சேனையைக் கலந்து கயிலையைக் கிட்டினான். கண்ணுதற்பெருமானிதுதெரிந்து விருத்த சந்நியாசியாகிக் குண்டிகையுங் குடையுந்தாங்கி, கோலூன்றித் தள்ளாடிக்கொண்டு, சலந்தரனெதிரில் வந்து, இராக்ஷதராசனே! நீயார்? எவ்விடமிருப்பது, யாரைத்தேடி இத்தலத்தில் வந்தாய், சொல்லுமென்று கேட்க, அசுரன்; என்பெயர் சலந்தரன் பிரமாதி தேவர்களனைவரையும் வென்றுக் கொண்டு சிவனுடன் யுத்தஞ் செய்யவந்தேனென்று மறுமொழி கொடுக்க, அவனைப்பார்த்து, நகைத்து நாம் இறையவன் சந்நிதானத்திலிருந்து, அவர் வல்லபங்களனைத்தினையும் அறிந்திருப்போம், பரமசிவனுடன் போர் செய்வையாயின், இறந்துபோவாய், இன்னுஞ் சிலகாலம் உயிருடனிருக்க மனமிருந்தால் திரும்பிப்போவது தகுதியென்று சொன்னார். உடனே சலந்தரன் வடவாமுகாக்கினியைப்போலக் கோபித்துத் தேகமெங்கும் வியர்வை யரும்பப் புருவம் நெறிப்பேற, மீசைதுடிக்க அக்கினியும் புகையும் பெருகப் பெருமூச்செறிந்து, நீர் என்னைச் சிறியனாக நினைத்தீர், என் வெற்றிகளையும் வன்மையையும் சொல்லியாவதென்ன, சில நேரம் பொறுத்து புயபல பராக்கிரமத்தைப் பாருமென்றுரையாட, அதைக் கிழவனார் கேட்டு, நல்லகாரியம் உன் சௌரியத்தையும் வலிமையையும் அறியத்தான் வந்தோமென்று தமது பாதப் பெருவிரலினாலே பூமியில் வட்டமாகக் கீறி, சலந்தரனே! உன்வல்லபத்தினால் இந்தவட்டமான பூமியை யெடுத்துச் சிரசிலே தாங்கமாட்டுவையோ? என்று



கேட்க, அவன் நகைத்து, இதோபாருமென்று அகங்காரித்து அந்தச்சக்கரத்தை ஒருகரத்தினாலேந்தி மற்றக் கரத்தையுந் தாங்கித் தாங்கப்படாமையால் மார்பிலணைத்து அதிகவெறுத்துச் சிரசில் வைத்தான். இதைக் கண்ட தேவர்கள் இவன் வலியே வலி, சூரனென்பது இவனுக்கே தகுமென்று கொண்டாடினார்கள். அத் தருணத்தில் அந்தவட்டமான பூமி கோடி சூரியப்பிரகாசமான சக்கராயுதமாகிச் சலந்தரனுடலை இருகூறு கப்பிளந்து தள்ளியது. பின்பு அச்சக்கரம் இறையவனிடத்திற்சேர்ந்தது. சலந்தரன் இறந்ததனை விஷ்ணு தெரிந்து கொண்டு அவ்வசுரன் தேவியாகிய விருந்தையின் சௌந்தரியத்தினைக் கண்டு அநேக நாளாக மையல் கொண்டிருந்த அவர் இதுதான் தருணமென்றெண்ணி, கபட சந்நியாசி வேடங் கொண்டு சலந்தரன் அரண்மனையில் வாசற்றிண்ணையி லுத்திருக்கின்ற நந்தவனத்திலே பெருங் குருக்கத்தியின் கீழ்வில் தவத்தைச் செய்கின்றவனைப் போலவிருக்க, விருந்தையானவள் கணவன் செய்தி யொன்றுந் தெரியவில்லையே, என்னசெய்வேனென்று வெதும்பி வாடி இங்குமங்குமாய், இருதலைக் கொள்ளியில் அகப்பட்ட எறும்புபோல அலைந்தும் ஒன்றுந் தோன்றாமலும் அரண்மனையிலிருந்து பூஞ்சோலையினிடம் வந்தாள், அத்தருணத்தில் கேசவன் கட்டளைப்படிக்கு வைகுந்தவாயிலைப் பாதுகாக்கும் துவார பாலகர் இருவர் புலிவடிவங் கொண்டு சீறி அவளெதிரிற் பாய அவளைக்கண்டு அபய மென்று நெருங்கினாள். அக்கபட சந்நியாசி பயப்படாதேயென்று கையமைத்துப் புலிகளை யதட்டித் துரத்திவிட்டனர். அப்போது அவ்விருந்தை அவரைப்பார்த்து, என்னிட்ட தெய்வத்தையைப் போலவும் பிதாவைப்போலவும் இத் தருணத்திற் காப்பாற்றிக் காத்த தபோதனரே! மங்கள

வன் பரமசிவத்தின்பேரிற் சண்டைக்குப் போயினர். இதுபரியந்தம் அவர் வரக்காணேன். செய்தியொன்றுந் தெரியவில்லை, தேவரீருக்குச் சகலமுந் தோன்றுமாதலால் அவர் இறந்ததும் இருப்பதும், அறிவிக்கிரகஞ் செய்யவேண்டுமென்றிரந்தாள். அக்கன்னி சந்நியாசி நல்லகாரியம் சற்றைவிடத்திருந் திருட்டாந்திரமாகக் காட்டுவோமென்று தபதென்னைப்படிக்கு ஆதியிற்புலியாக வந்த துவாரபாலகர் குரங்காக இறக்கக் குறித்து அவனை நோக்க அவரோடிப்பினந்து இடந்தலந்தரனுடலைக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அப்போது, அவள் இருகூறுயிருக்கிற கொழுநனைக் கண்டவுடன் பதைபதைத்து விழுந்து புரண்டழுது, மரண மூர்ச்சையாயினள். அக்காலத்தில் முன்னம் அவளிடத் தாசைபெற்றிருந்த சந்நியாசி அவளைவாரியெடுத்து மார்பிலணைத்துக்கொண்டு சயித்திய வுபசாரங்களைச்செய்து தேற்ற, அவள் தெளிந்தெழுந்து சந்நியாசியைச் சேவித்து, உண்மையொத்த பசுந்துவழுமையுடையவர்கள் எங்குமிரார். அடியேன் பிராணனைக் காத்தாற்போலவே என்கணவன் தேகத்தையும்பொருத்தி உயிருண்டாக்கிப் புருஷ பிச்சை தரவேண்டுமென்று போற்றினள். அச்சந்நியாசி நல்லதென்று சலந்தர னுடலைச்சேர்த்து, அதில் தான் பிரவேசித்தெழ, அதை விருந்தை கண்டமாத்திரத்தில் ஆனந்தவாரியில் மூழ்கிக் கொழுநனைச் சேவித்துத்தழுவி இருவருமாய் மாளிகையைச்சேர்ந்து, அறுசுவையுண்டியைப் புசித்துக் கலவைச் சாந்தணிந்து, பரிமளமிகுந்த புட்பமாலைகளைச்சூடிப் பஞ்சணை மெத்தையில் சரசசல்லாபங்களைச் செய்து, இன்பமுற்று, இவ்வகைபாக அளவற்ற காலம் இடைவிடாமல் களித்திருந்தார்கள்.


ஒருதினம் அம்ச தூளிகாசயனத்தில் மெய்மறந்து முகுந்தன் நித்திரை செய்யப்பரமசிவன் கட்டளைப்



படி விஷ்ணு கோலந்தோற்றியது. அதைக்கண்ட பிருந்தை நடுநடுங்கி இவன் மாயனாகுமென்று நிதானித்து நடந்தவிருந்தாந்தங்களை யெல்லாந் தன்னறிவா லறிந்து கொண்டு, புலியாக வந்து உன்வாயில் காப்போர் உனக்கு வயிரிகளாக அரக்கர் குலத்துதிக்கக் கடவர் நீயும் பூமியிலரசர்குலத்திற் பிறந்து, என்னை வஞ்சித்தபடியே உன்பத்தினியை அவ்வசுரர் கொண்டு போய்விடக் குரங்கினங்களைச் சேர்த்துக்கொண்டு வனங்கள் முழுது மலைந்து உழன்று உலகோரிழந்து பழிகூற வாழக் கடவா யென்று கொடிய சாப மீந்து, அக்கினியை வளர்ப்பித்து அதில் விழுந்திறந்தாள். இதைக்கண்ட விஷ்ணு அவளிடம் வைத்த இச்சையினாலேங்கி வாடிவருந்திப் பிருந்தை யிறந்த சுடலைப் புழுதியில் விழுந்து புரண்டு பிரலாபித்துக் கொண்டிருந்தனர், பிரமன் முதலிய தேவராயிந்து இருக்கைகலையடைந்து இறைவன் திருவடிகளைப்பணிந்து விண்டுவிற்கு நேர்ந்த கதியினை விளம்பக்கேட்ட பரமன் புன்சிரிப்புக்கொண்டு உமாதேவியைப்பார்க்க, அம்மையார் திருவையுற்று ஒரு வித்தை யுண்டாக்கித் தந்து, இதனைக் கண்ணன் முன் நாட்டக்கடவீரென்று கொடுக்க, நான்முகன் வணங்கி வாங்கிக்கொண்டுபோய், பிருந்தையிறந்த மயானத்திற் சாம்பலைப்பூசி மயங்கிக்கிடக்கின்ற கேசவ னெதிரினட்ட, அது துளசியாகமுளைத்து உடனே திவ்வியவடிவுடைய பெண்ணுருப்பெற்றுநிற்க அவளைத்தாமோதரன் கண்டு, பிருந்தையிடத்திலுள்ள மையலையொழித்து அவள்மீது மோகமாகி அவளை மணஞ்செய்துகொண்டு * வைகுண்ட மடைந்து வாழ்ந்த விண்டுவானவர் நடந்த வற்றைமனதிலெண்ணு வாராயினர், என்னகாரியம் செய்துவிட்டவன், சாமோ

* வைணவர்கள் பிருந்தாவன வேடிக்கை கொண்டாடுவது இச்சரித்திர சம்பந்தத்தாலேயே யுண்டாயது.

ளியமான தேவர்களும் நகைக்கத்தக்க விஷயத்தினை நாடினேன். பிருந்தையின் அழகினைக்கண்டு மயங்கி வஞ்சகமாய் அவள் கற்பினை கெடுத்துச் சாபமேற்றவன் என்னைப்போன்றார் இத்தகைய இழிவான காரியத்திற் பிரவேசித்தல் தகுமா. என்னறிவை பெய்கேசித்தினேன். அற்பமாகிய சிற்றின்பத்தினுக்கு ஆசைப்பட்டு அலைந்திருந்தேன். அந்தோ ! இச்செய்தி எவ்வுலகும் பரவி நிலைபெற்றுவிட்டதே. இனி இதைமாற்ற யாரால் முடியும். ஐயோ ! இதன் பொருட்டு ஒரு சென்மமும் உலகத்திலெடுக்கும்படி நேரிட்டதே. அச்சென்மத்தில் என்னென்ன பாடுபடவேண்டுமோ அறியேனே, கற்பினிற் சிறந்த மாதர்களின் சாபம்வீண் போகாதே, அனுபவித்தே தீரவேண்டும் தேவாதிதேவனாகிய மகாதேவனையன்றி மாயையில் மயங்காதவர் யாவர்? ஒருவருமில்லை, இது இங்ஙனமாயினும் ! கற்பினைக் கெடுத்ததனாலுண்டாகிய மகாபாவத்தினை எப்படி நீக்கிக் கொள்வது? இதற்கெங்ஙனம் பரிகாரந் தேடுவது என்று வெகுநேரமாலோசித்து, தெளிந்து சிவசிவா ! சம்போ ! சங்கரா ! மகாதேவா ! வலிதாய நாதனே ! உன்னைவிட வேறுகதியேது ? இதோ உன் தலத்திற் கோடிவருகிறேன். அவ்வெல்லையினை மிதித்த மாத்திரத்தில் எத்தகைய பாவமும் பஞ்சாய்ப்பறக்குமென்பது நானநுபோகத்தி லறிந்திருக்கிறேன். இதாசத்தியம் சத்தியமென, உடனே விஷ்ணுவானவர் வைகுண்டத்தினின்று நீங்கி வலிதாயத்தினை யடைந்து பரத்துவாசதீர்த்த நீராடி விபூதி உருத்திராட்சம் பூண்டு, ஆனந்தக்கண்ணீர் பெருக வலிதாய நாதனைப் பூசை செய்து பேரன்புபூண்டு வாழ்ந்திருக்கையில், சந்திரசேகரனாகிய சிவபெருமான் பிரத்தியட்சமாகி விண்டுவே ! உன்பாவம் விமோசனமாயிற்று எனத் திருவாய்மலர்ந்தருளி, மறைந்தருள, நாரணன் கேட்டானந்தித்துப்,



இயமன் திருவெண்காட்டையடைந்து சிவலிங்கபூசைசெய்து, சிவபாரத்தைப் பெற்றுக்கொள



பாடியாடிப் பலநேரம் வீழ்ந்து வணங்கி விடைபெற்று வைகுந்தஞ்சென்று சிவஞானத்துடன் வாழ்ந்தனன். விண்டு இந்நகரில் பங்கயங்கொண்டு பூசித்தமையின் பங்கயபுரமென வொருபெயர் வழங்கியது. (பங்கயம்-தாமரை.)

விண்டு பூசித்த சருக்கமுற்றிற்று.

---

## இயமன் பூசித்த சருக்கம்.

சிவபாத விருதயர்களே! துவாபரயுகத்திலே சூரியகுலத்திலே சுவேதனென்று ஒரு அரசனிருந்தனன். அவனுக்கு சுலோசனை யென்னு மனைவியிருந்தாள், இச்சுவேதன் நெடுங்கால மரசாட்சி செய்து கொண்டிருந்து பின்பு இராஜாங்கத்தில் வெறுப்படைந்து தனது புத்திரனுகிய வாதாவி யென்பவனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து வைத்தாத்தான் தன்மனையுடன் வானப்பிரஸ்த மடைந்து அரிய தவஞ்செய்து கொண்டிருக்கு நாளிலே, சுலோசனை சிவபதமடைந்தனள். அதுகண்டு சுவேதன் மனம் வருந்தி யொருவாறு தேறிக் கவற்சி நீங்கி, பெரியநாயகி யம்மை சமேதராகச் சுவேதாரணியேசுரர் எழுந்தருளி யிருக்கும் திருவெண்காட்டினையடைந்து முக்குள நீரென்னுந் தடாகத்திற்படிந்து, சிவலிங்கப் பெருமானுக்குச் சமீபத்திற் தவஞ்செய்து கொடிருக்கு நாளிலே, ஒரு நாள் இயமனெனவன் அவனுக்குச் சமீபத்திற்குறுகி மேகமானது மின்னலினை வீசியதுபோலக் கயிற்றினையவன் கழுத்திற்பூட்டினன், சுவேதன் நடுநடுங்கிச் சிவலிங்கப் பெருமானைச் சேர்த்து ஆலிங்கனஞ் செய்து கொண்டனன், அப்போது எமன் அரசனை நோக்கி, சுவேதனே! இச்சங்காமேனோ? என்னிடத்தினின்று

முன்னை மீட்பவன்! சிங்கத்தினை யோர் யானை தடைசெய்யுமோ? எத்தனைகோடி நாரணர்கள், எத்தனை கோடி கோடி பிரமர்கள், எத்தனை கோடி கோடி கோடி இந்திரர்கள் எமன் கையினா லழிவுபட்டனர் *இறுதிகாலம்வரின் ஒருசிறு முள்விழிக்கவு முயிர்நீங்குவர். வச்சிரதேகத்தினை யுடையவராயினும்வாழ்வதில்லை கண்டாய். வேலேந்திய யானைக் கூட்டங்கள் விலக்கினும் விலகேன். மிகுந்த தவத்தினர்கள் தடுத்திடினு மீள்கிலேன், கால்பிடித்து வணங்கி ஏங்குங்கரையப்பேசினு மிரங்கிடேன். அங்ஙனமாகத் தோலுடுத்த இத்தேவனோ தடைசெய்வன் சொல்லுக. என்று கூறி இடியினைப்போல் முழங்கி, பகட்டி. உதட்டினைப் பற்களாற்கடித்து, கால்களைப் பூமியிலறைந்து, சிவந்த கண்களினின்றும் அழல்சிந்த நெருங்கின வுடனே சுவேதன்கண்டு நில்லடா நில்லடா! நமனே! நன்று நன்று உன்பிரதாப மெனநகைத்து, அந்தகா! என்னை வெருட்டுவ தென்னை? கேளடா நான் சொல்வதனை, திருமாலும் பன்றியாத் தேடியு மறியவொணாத திருவடி யெனக்குற்றதுணையாம். முப்புரத்தினை நகைத்தெரித்தவன், மூவருக்கருள் செய்தவன் அன்பர்பவரோக வயித்தியன், மங்கைபாதியன், மாரவேளை யெரித்தவன். அவனுக்கு அன்பனாகிய நானுனக்கு அஞ்சுவனோ? சந்திரசேகரன், கருணாகரன், பக்தவற்சலன், சித்தன் அற்புதன், நீலகண்டன், நிராமயன், நின்மலன் அவனுக்கு அன்பனாகியநானுனக்கு அஞ்சுவனோ? பிரமாதி தேவர்களின் மனைவிமார்களின் மங்கல நாண்நிலைபெற ஆலத்தினை மிடற்றிலடக்கிய அமலனுக்கு அன்பனாகியநானுனக்கு அஞ்சுவனோ? விபூதியணியாதவர், உருத்திராட்சம் பூணாதவர், பஞ்சாட்சரந் தியானியாதவர், சிவபூசை செய்யாதவர், உனைக் கண்டஞ்சுவர். அவர்களிடத்தில் உன்வல்லபம்பலிக்




கும். நீ என்செய்வாய். அப்பால் நட வென்றனன், மறலிகேட்டுக் கோபங்கொண்டு மன்னனை யெட்டிப் பிடித்தனன் அப்போது சுவேதன்! சம்போ! சங்கரா! மகாதேவா! சதாசிவா! சச்சிதானந்தா! என்றலறினன். அத்தட்சணமேக ருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான் வெளிவந்து கட்கம், கேடகம் வில்லு, வாளி, கணிச்சி, சூலமெடுத்தடர்ந்து உட்குமாறுதாக்கினன், நமன் கீழ்விழுந் தெழுந் தோடினன். சுவேதன்கண்டு ஆனந்தங்கொண்டு பரவசமாகிப்பலவாறு சிவபெருமானை நித்திய கல்யாணசுந்தர குணங்களைத் தோத்திரித்துப் பழையபடியே தவஞ்செய்து கொண்டிருந்தனன்.

ஓடிய நமன் பிழைத்தேனெனக்கூவி யோரிடந் தங்கி, என்செய்தேன்! என்செய்தேன்! சிவாபராதம் அடைந்தேனே என்புத்தி யெங்கேபோயிற்று, சிவனடியார்கட்குத் தீங்குசெய்ய நினைத்தேனே, விபூதி உருத்திராட்ச பஞ்சாட்சரமகிமையினை மறந்திருந்து, சென்மாந்தர வினையால் மயங்கி மதியாது நெருங்கி உதையுண்டு ஓடிவந்தேனே, என்சென்மமு மொரு சென்மமா? என்னைக்கொல்லாது விட்டது என்பூர்வ புண்ணியமும், சுவேதனைத் தரிசித்ததினால் வந்த பாக்கியமுமாம். என்பிழைப்புமொருபிழைப்பா? சிவனடியாரிடத்து என்சாமர்த்தியம் தலையெடுக்குமா? அந்தோ! மார்க்கண்டேய முனிவரிடஞ்சென்று அப்போது நேர்ந்த ஆபத்தினை நினைக்குந்தோறும் இதயந் துடிக்கின்றதே. அதையிவ்வளவு சீக்கிரத்தில் மறந்து இக்காரியஞ் செய்யத்துணிந்தது என் கன்மவசமென்பேனோ? எனக்குண்டாயிருக்கும் இறுமாப்பென்பேனோ? இப்பாவத்தினை யெவ்வாறு எவ்விடத்தி லொழிப்பேனெனச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், நல்வீணை யேந்தி நம்பரமனையே பாடும் நாரதபகவான் சந்தித்து நமனே! என்னகாரியஞ் செய்தாய், இந்த காலத்தி

ற்கு முந்தியுனக்குத் திருக்கடையூரிலேநேர்ந்த விபத்தினை மறந்து இவ்வளவுஞ் செய்யத்துணிந்தாய். இனியேனுஞ் சிவனடியார்களைக்கண்டு பயந்து வாழக்கடவாய், இப்போது உனக்கு நேர்ந்துள்ள பாவத்தினையொழிக்கவகை தேடுவாய். அதற்கோருபாயம் நானே சொல்லுகிறேன். கவனிப்பாயாக. எத்தகைய பாவச்செயல்களையும் எல்லையின்றி மித்தமாத்திரத்திலே போக்கடிக்கத்தக்க புண்ணியத் தலமாக விளங்குவது வலிதாயம். அதனருமையினை நன்னெடுத்துச் சொல்லுந் தன்மையுடையேனல்லேன், நீ சென்று நேரே கண்டு அவ்விடத்துச் சிவலிங்கப்பெருமானைப் பூசித்துப் புநிதனாகக் கடவாயென்று கூறி வழியே சென்றனர். இயமன் கேட்டு இருகரங்களையும் சிரமேற்கொண்டு வடக்கு நோக்கி நடந்து அதிசீக்கிரம் வலிதாயத்தினையடைந்து குசலைநதியில் மூழ்கி, விபூதி உருத்திராக்கம் பூண்டு பரத்துவாசத் தீர்த்தக்கரையில் ஜெபதபங்கள் முடித்து, சிவலிங்க பூசை பற்பலநாள் பணிவுடனே செய்து வருகையில் சிவபெருமானே பிரசன்னராகி, இயமனைப் பார்த்துக் காலனே! உன்னை மன்னித்தோம், சிவாபராதம், உன்னைவிட்டு விலகியது, இனியேனும் சிவனடியாரிடத்தில் நெருங்காது வாழ்வாய். நீ இத்தலத்தில் என்னைப் பூசித்தமையால் இங்குவந்து பணிகின்றவர்களுக்கும் எமபயமுண்டாகமாட்டாது என வரங்கொடுத்தருளி அந்த லிங்கத்தின் இடமாக அந்தர்த்தானமாயினர். பாவந்தீரப்பெற்ற இயமன் காலனாகிய சிவபெருமானைச் சிந்தித்துக்கொண்டே தன்னுலகடைந்து சுகித்திருந்தனன். அதுமுதல் இத்தலத்திற்குத் தருமபுரமென்பெயர் வழங்கலாயிற்று. (தருமன் - எமன்.)

இயமன் பூசித்த சருக்கம் முற்றிற்று.






## திருவிழாச் சருக்கம்.

சிவபஞ்சாக்ஷர நாவினர்களே! காவேரிநதியினைத் தனக்கங்கமாகவுடைய பொன்னிநாட்டினை யரசாட்சி செய்து வந்த விக்கிரமச் சோழனென்னும் அரசனது சபையில் ஓர் நாள் வைதிக சைவ சித்தாந்தச் செல்வராகிய ஓர் சிவனடியாரெழுந்தருளினர். அரசன் அவ்வடியாரைத் தரிசித்தவுடன் எழுந்துவணங்கி விபூதி யேற்று உபசரித்துச் சொல்லுவானாயினன், சுவாமீ! அடியேன் அநந்த கல்யாணகுண பரிபூரணரான சிவபெருமான் திருவருளால் பொன்னுலகத்திந்திரனைக் காட்டிலுமதிகச் செல்வத்தினை யநுபவித்து வருகிறேன். அங்ஙன மிருந்தும், புத்திரப்பேறின்மையினால் உண்டாகுஞ் சஞ்சலம் அதிகமாயென்னை வாட்டுகின்றது. அல்லும் பகலும் நித்திரையின்றி யேங்குகின்றேன். தேவரீர் தயைபுரிந்து ஏழையேன் கவலை தீருங் வண்ணம் ஒரு யுக்தி சொல்லவேண்டுமென்று இரந்தனன். சிவனடியார் அரசனைநோக்கி, "ஐயா! இதோ என்பால் புண்ணிய ரூபமான க்ஷேத்திரக் கோவை என்னு மோர் நூலிருக்கின்றது. இன்று சோமவாரமாயிருத்தலின் இதனை யன்புடனே பூசித்துக் கயிறு சாத்திப் பார்ப்பையேல், எவ்விதப் புண்ணியத்தலங் காணப்படுகிறதோ, அத்தலத்திற்குச் சென்று அங்கெழுந்தருளியிருக்கு முமாநாத சாமி திவ்ய மங்கள விக்கிரகத்தினைப் பூசிப்பையேல் புத்திரப்பேறுண்டாம் என்றனர். அங்ஙனமே அரசன் கயிறு சாத்தலும் 'திருவலிதாய க்ஷேத்திரம்' வரக் கண்டு அளவிலா மகிழ்ச்சியடைந்து, அத்தலத்தினை இப்போதே தரிசிக்க வேண்டுமென்று பேராசையுற்றுத் தனதாசினை யமைச்சர்பா லொப்புவித்துத் தனது கற்பினிற்சிறந்த மனைவியுடன் வெளிப்பட்டுத் திருவலிதாயத் தினையடைந்து, தீர்த்தமாடி ஆலயத்துட் சென்று அர்ச்சனைபுரிந்து, சன்னிதானத்தரிசிக்குங்

துதித்து வணங்கி அப்பாற்போந்து உலகமாதாவாகிய தாயம்மையைப் பூசித்துக் குறையிரந்து நிற்க, அம்மையார் திருவுளமுருகிப் புத்திரசந்தானமுண்டாகும்படி வரந்தந்தருளினர். அவ்வரம்பெற்ற வரசன் மனமகிழ்ந்து மீட்டும் வணங்கி விடைபெற்றுப் புறம்போந்து ஓராண்டளவும் சிவபுண்ணியங்களைச் செய்துகொண்டிருந்து மதில்கள், மண்டபங்கள், கோபுரங்கள், மடவளாகங்கள், மாடவீதிகள் உண்டாக்கிப் பின்னொருநாள் திருவிழாநடத்தத் தொடங்கினன். அரசன் கட்டளைப்படி ஆதிசைவர்கள் எண்ணிறந்த திருவாபரணங்களையும் பீதாம்பரங்களையும் பெருமானுக்கு அணிந்தனர். எங்கணுந் தோரண நாட்டினர். நவரத்தின மிழைத்த தம்பங்களில் வாழை முதலியவை கட்டினர். பூம்பந்தர்கள் சந்திகளிற் றூக்கினர் வீதிகளிற் கோலமிட்டனர். சித்திரை மாதத்திற் பூர்வபக்கத்தில் புனர்பூச நட்சத்திரத்தில் கொடியேற்றிப் பலவிழாவாற்றி, முதனாண்முதல் பத்துத்தினங்கள் வரையில் பலபல, வாகனங்களிலேற்றி ஆனைமுகன் ஆறுமுகன் சண்டேசன் அம்மையாருடன் அரனுக்குத் திருவிழா வாரம்பித்து, காலையில் வீதிவலம் வந்தபின்னர், இரவில் உறையவர் வேதபாராயணஞ் சொல்லவும், குங்கிலிய தாபமெங்கும் வீசவும், அடியார்கள் நாமாவளி கூறவும், வெண்குடை நிழற்செய்யக் கவரி ஆலவட்டம் சாந்தாற்றி நெருங்கவும், கொடிகள் தூங்கவும் எள்விழுந்தற்கிடமின்றிப்பலர் சூழ்ந்தனர். சூரியன் சந்திரன் நட்சத்திரம் யானைசிங்கம் போன்ற தீவர்த்திகள் முன்னும் பின்னு மேந்த, பேரிகையாழ் கைப்படகம், பறை, முரசு, குடமுழவு, சின்னம், பூரி, எக்காளம், சங்கம், தாளம், தண்ணுமை முழங்கவும் வெளிவந்தனர், வீதிகடோறுங் கும்பமமைத்தனர், வேதியர்கள் அட்ட மங்கலத்துடனே தட்டுகளில் தேங்காய் தாம்பூலங் காசு கற்பூரத்துடனே வந்து தீபாரதனை





செய்யவும், சில அடியார் ஆடவும் சில வடியார் பாடவும் மாலயற்கரியோன் வந்தான், அன்பருக்கெளியான் வந்தான், இருக்கினி விருப்போன் வந்தான், மறையினில் மறைந்தோன் வந்தான், வலிதாய நாதன்வந்தான், தாயம்மைத்தலைவன் வந்தான் என்று தோத்தரிக்கவும் இந்தகையை ஆடம்பரத்துடன் மாடவீதி வலம்வந்து தூலலிங்கமாகிய கோபுரவாயிலை யடைந்தவுடன், ஆதிசைவர் நிவேதனத்துடன் தீபாராதனைக்காட்ட, உருத்திரகணிகைகள் தாள விசை மருவிய நடனமுடன் ஆலத்தி சுழற்றி எச்சரிக்கை சோபனம் பாடினர். நந்தியெம்பெருமான் முன்னேக ஆலயத்துட் பிரவேசித்துப் பெருமான் எழுந்தருளினன். இவ்வகையாப் பத்துத் தினங்களும் பலவாகனம் பல விமானந் தேர் மீதிற் கொண்டாடித் தீர்த்தமாடி, அடுத்தநாள் மவுனபலிநாவி, பிறபூசையுஞ் செய்து இடபக்கொடியை யிறக்கினர். அரசன் அத்திருவிழாக்களில் அநேக பூதானம், சுவர்னதானம் அன்னதான முதலியசெய்து திருவலிதாய நாதனைத்தரிசித்து விடை பெற்றுக் கொண்டு தனது நகரத்தினையடைந்து, புத்திரர் பௌத்திரர்களை வாய்ந்து, தெய்வங்கட்குத் தெய்வமாகிய திருவலிதாய நாதனது கலியாணசுந்தர முதலியகுணங்களையே சிந்தனை செய்து கொண்டிருந்து சுகமாக வாழ்ந்து வந்தனன்.

திருவிழாச்சருக்க முற்றிற்று.

## தீர்த்த மகிமைச் சருக்கம்.

### பாத்துவாச தீர்த்தம்.

மனமடங்கப்பெற்ற மாதவர்களே! மும்மலங்களையும் போக்கு முத்திச்செல்வம் கொடுத்தருளுந் திருவலிதாயத்துச் சிவாலயத்தின் தென்திசையிலுள்ள

பரத்துவாச தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்யப்பெற்றோர் புண்ணியத்தை யடைவார்களென்பதிற் சந்தேகமில்லை. தண்ணீரில்லாவிடினும், வேறு சலங்கொண்டு வந்து அவ்விடத்தில் விட்டுப், பின் அத்தீர்த்தத்தை எடுத்து உட்கொள்ளினும், சிரசின்மேற் புரோட்சித்துக்கொள்ளினும் உலவா வரும் பெருமணி பொன்னிதியையும் முப்போகம் விளையு நன்னிலங்களையும், நற்குண நற்செயலுறு நன்மனைவியையும், நல்லறிவுடைய நன்மக்களையும், பௌவமகற்றும் பல கலைஞானத்தையும் முத்தியையும் பெறுவர். அத்தீர்த்தத்தில் விருச்சிக மாதத்திலே சோமவாரத்திலே சூரியோதய மாகும் போது ஸ்நானம் செய்பவர் பின்னோர்போதும் பிறவிக் கடலில் மூழ்கார். அத்தீர்த்தத்தில் அமாவாசையில் தத்தம் பிதுர்க்களுக்குத் தருப்பணமொருவன் செய்வானாயின், அவன் பிதுருக்கள் கண்ணுதலுறையுங் கயிலாயமடைந்து நித்தியானந்த பரசுகமெய்யப் பெறுவரென்றறிவீர்.

## அனுமதீர்த்தம்.

பற்றற்று விளங்கும் பரமஞானிகாள்! இகபர சுகங்களைக்கொடுக்கும் வலிதாய நாதனாகிய சிவபெருமான் திருவோலக்கங் கொண்டெழுந்தருளிய ஆலயத்தின் குணதிசையிலுள்ள அனுமதீர்த்தத்திலிருந்து சற்பாத்திரமாயுள்ள சிவனடியா ரொருவருக்கு ஓர் கவள அன்னமேனும் இடுவானாயின், அவனெக்காலத்தும் வெள்ளியங்கிரியை விட்டு நீங்காத நல்வாழ்வு பெறுவான். மகாபாவிகளாயினும் இழிந்தகுலத்திற் பிறந்தவர்களாயினும் இந்தத்தீர்த்தத்தில் அன்புடன் ஆடப்பெற்றவர்கள் அவர்கள் குற்றங்களினின்றுங் கறை ஏறுவதன்றி, அறம் பொருளின்பம் வீடெனப் பகரும் புருடார்த்த நான்கினையும் பெறுவர்.



## பிரமதீர்த்தம்.

தத்துவஞானத் தபசிகளே! மலிதரு பிறவித்துயர்தனைப்போக்கி மாண்பெறு முத்தி யின்பத்தைக் கொடுக்கும் திருவலிதாயத்தின் குடதிசையில் பிரமதீர்த்த மொன்றுள்ளது. அத்தடாகக்கரையில் உத்திராயண தட்சணாயனங்களிலும் சூரிய சந்திர கிரணங்களிலும், அமாவாசை பருவங்களிலும், விதி பார்க்கிம மாதப்பிரவேசங்களிலும், மாலியபட்சத்தும், மற்றைய புண்ணியகாலங்களிலும் சிரார்த்தம் செய்யின் அந்தப் புண்ணியத்தினுக் களவேகிடையாது, அன்றியும் இரத்தினங்களோடு, பொன்னேனும், பூஷணமேனும், வஸ்திரமேனும், பொருளேனும் இந்தத் தீர்த்தக்கரையிற் சிவனடியார்களுக்குத் தானஞ்செய்யின், இம்மையிற் பெருஞ் செல்வத்துடன் வாழ்ந்து, பின்னர் மறுமையிற் கிடைக்குஞ் சிவானந்த சாகரத்தின் மூழ்குவர்.

## அகத்திய தீர்த்தம்.


பாசவைராக்யப் பாக்கியவான்களே! மணமதுமருவியபூவினார் விழுமணி மலர்ச்சோலை பாங்குடன் சூழ்ந்த ஆலயத்தின் வடதிசையில் புகழ் பெற்றோங்கும் அகத்திய தீர்த்த மொன்றுளது, காண்பீர். இதில் படிந்தவர்கட்கே யல்லாமல், இந்நீரினை அந்நிய தேசங்களுக்கு ஒழுக்கத்துடன் கொண்டுபோய் அன்புடன் முழுகுவோர்க்கும் மிக்கபுண்ணியமுண்டாகும். இவ்வரிய தீர்த்தத்தின் உதவியால் முளைக்கும் புல்கொடி மரமாதியவசேதனப்பொருளும் மோட்சமடையுமெனில், இகபர சாதனங்களை நன்குணரும் சேதனராகிய மானுடர்கள் வீடடைவாரென்பது அதிசயமாமோ! கூறுவீர்.

## க்ஷீரதீர்த்தம்.

முத்திச் செல்வத்திற்குரிய முனிவர்காள்! திருவலிதாயமாகிய பிரமபுரியை யடுத்த விருத்தக்ஷீர நதியினீரிலே ஏலம் இலவங்கம் விலாமிச்சு முதலிய வாசனைத்திரவியங்களைக் கலந்து நூறு குடங்கொண்டு வலிதாய நாதருக்கு மகாபிடேகஞ் செய்பவர் கல்வியறிவில்லாதவர் கல்வி யறிவெய்தப் பெறுவர்; பொருளில்லாதவர் பொருள் கிடைக்கப் பெறுவர்; இடமில்லாதவர் இடமனுகப்பெறுவர். விவாகமில்லாதவர் விவாகங் கூடப்பெறுவர். புத்திரப்பேறில்லாதவர் புத்திரப் பேறெய்தப்பெறுவர். ஆயுளில்லாதவர் தீர்காயுளடையப்பெறுவர். இவை முதலாகிய ஐஸ்வரியங்கள் பலவும் இனி தடைந்துய்ந்து, பின் திருக்கயிலாயஞ்சேர்ந்து சிவசொரூபமுற்றுப் பேரின்ப மெய்தப் பெறுவர்.

நஞ்சமர் நீலகண்டனுக்குகந்த நைமிசாரணிய மாதவமுனிவீர்! பிரணவாகாரமாகிய பூக்கள் நிறையப்பெற்ற கொன்றை மரத்தினீழலிலே, தாயம்மை சமேதரா யெழுந்தருளியிருக்கும் வலிதாய நாதரின் சிறப்புப் பொருந்திய மான்மியத்தினை, நாஞ்செய்த முற்றவப் பயனென்று ஓதவுங் கேட்கவும் பெற்றோம். நாஞ்செய்த தவமென்றே தவம்! இம்மான்மியத்தினைத் தத்தம் வீடுகளில் சோமவார முதலிய புண்ணிய தினங்களில் அன்புடனே படிப்பவரும் அதனைக் கேட்போரும் இம்மையிலே தாம் விரும்பிய புத்திர பௌத்திர களத்திராதிகளுடனே சகல ஐஸ்வரியம் பெற்று வாழ்ந்து மறுமையிலே சிவபெருமானது திருவடி நிழலில் வீற்றிருந்து பிரமானந்த சுகம் பெறுவர்; இது சத்தியமென்று கூறியருளினார் சூதமாமுனிவர்.

தீர்த்த மகிமைச் சருக்கம் முற்றிற்று.





## க்ஷேத்திரமாலைச் சருக்கம்.

சிவமுனீந்திரர்களே! இது காறும் கூறிவந்த மிக மகிமை வாய்ந்த திருவதிகாயத்தலம் ஒரு அரிய அமைப்பினை வாய்ந்திருக்கின்றது. அதாவது இத்திவ்விய தலத்திற்குத் திருமயிலையும், திருவான்மியூரும், திருவேற்காடும், திருவிற்கோலமும், திருவிலம்பையங் கோட்டூரும், திருவூறலும், திருவாலங்காடும், திருவெண்பாக்கமும், திருப்பாசூரும், திருவடமுல்லை வாயிலும், திருவொற்றியூரும் ஆகிய பதினொரு க்ஷேத்திரங்களும் ஓர் அழகிய மாலையாகச் சமைந்திருக்கின்றன. இவை யாவும் பல அற்புதங்களுடன் கூடிய அநேக மகிமைகளுடன் விளங்குவது. பிரணவ சொரூபியாகிய விநாயகப் பெருமானுக்கு திருவிவாக மகோற்சவம் நடந்தேறிய திருவதிகாய தலத்தினைத் தரிசித்துக் கொண்டு முறையே திருமயிலை முதல் திருவொற்றியூர் வரையில் யாத்திரை செய்து மறுபடியுந் திருவதிகாயத் திருவினையடைந்து மகாபிஷேக முதலிய சிறப்பேற்றி வணங்குவோர்கட்கு, அம்மம்ம! அவர்களடையும் பலன் இவ்வளவென ஆயிர நாவுடைய ஆதிசேடனாலும் முடியா தென்னில் நான் என்னவென்று உங்கட்குச் சொல்லப் போகின்றேன். இத்தலத்திற்கு வந்த தேவர்களும், முனிவர்களும், அரசர்களும் இங்ஙனமே யாத்திரை செய்து அபாரமான திருவருளை யமைத்து கருணைக் கடலாகிய கன்றுநற் பெருமானிடத்து அடையப் பெற்றார்கள் எனக் குருமா முனிவர் திருவாய் மலர்ந்தருளிய வார்த்தையினைக் கேட்ட நைமிசாரணிய வாசிகள் ஆனந்த மடைந்து முனிவரை வணங்கிப் பல தோத்திரம் புரிந்து அவர்பால் விடை பெற்றுத் தென்றிசை நோக்கி நடந்து வதிகாயத் தினையடைந்து தரிசிக்கையில் தங்கட்குக் குருமுனிவர் சொல்லியிருந்த மகிமை யனைத்துங் கண்டு களிப்

படைந்து பன்னிரு க்ஷேத்திர யாத்திரைசெய்து முடித்துத் தங்கட்கு வேண்டிய வரங்களை யடைந்து சில காலம் அத்தலத்திலேயே யிருந்து பின்னர் நைமிசாரண்ணிய மடைந்து சிவராஜ யோகத்தவஞ் செய்து செய்து கொண்டிருந்தனர்.

க்ஷேத்திர யாலைச் சருக்க முற்றிற்று.

---

## வாழி.

போற்றிடுநற் கொன்றைமுடி லத்தொளிரும் வலிதாயப் புனிதன் வாழ்க, சாற்றிய நற்கருணையுரு வாகி யெழுந் தாயம்மை சால வாழ்க, வெற்றி திரு நீறுமணி யைம்பதமின் னுலகமெலா மிலங்கி வாழ்க, தேற்றிடுவை தீக்ஷித்தார்தனை எப்பேறு சிறந்து வாழ்க.

அறுபான் மும்மை நாயன் மார்களி லொருவராகிய
வாயிலார் நாயனார் பரம்பரையில் வந்தவரும்,
சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவப்பிர
வர்த்தகாசிரியரும், மதுரைத் தமிழ்ச்சங்
கத்து மகாவித்துவானும், சென்னை
மெய்கண்ட சந்தான சபை அக்
கிராசனாதிபதியு மாகிய சித்தாந்
சரபம்-அஷ்டாவதானம்

**பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்.**

இயற்றிய

திருவலிதாய புராணம்

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

# வலிதாய நாதர்மீது

## எச்சரிக்கை.

இராகம்-ஸஹானா தாளம் ரூபகம்.

அருமாமறை தினமேத்திடும் ஐயா அருள் துய்யா
திருவாழ்தரும் வலிதா யத்துறை தேவே எச்சரிக்கை. ௧.

பண்ணார்மொழி தாயம்மையின் பாகா அன்பர் மோகா
தண்ணார் பொழில் வலிதா யத்துறை தலைவா எச்சரிக்கை ௨.

புலிமீதினி லன்பர்க்கருள் புண்யா மிக கண்யா
பவநீக்கிடும் வலிதாயத்துறை பதியே எச்சரிக்கை. ௩.

நீலஞ்செறி கண்டம் பெறு நேயா அதி தூயா
கோலம்செறி வலிதாயத்துறை கோவே எச்சரிக்கை. ௪.

தேவர்குரு சாபத்தினைத் தீர்த்தாய் கண்ணிற் பார்த்தாய்
மூவர்பணி வலிதா யத்துறைமுதலே எச்சரிக்கை. ௫.

அநுமாரப ராதத்தினை யழித்தாய் பவ மொழித்தாய்
முனிவோர்செறி வலிதா யத்துறை மொய்ம்பா எச்சரிக்கை ௬

குறுமாமுனி யிகவேந்திடுக் கோவே பெருந்தேவே
துறவோர்துதி வலிதா யத்துறை துரையே எச்சரிக்கை. ௭.

சீதைகண வற்குத்தயை செய்தாய் கிருபை பெய்தாய்
வேதன்பணி வலிதாயத்துறை வித்தகா எச்சரிக்கை. ௮

ஆனைமுக னாறுமுகன் அத்தா நனி சுத்தா
சோலைபொழில் வலிதாயத்துறை சுகமே எச்சரிக்கை. ௯.

விடைமீதுவந் தடியார் மனம் வெருவாய் வரந்தருவாய்
தொடைசூழ்தரு வலிதா யத்துறை தூயா எச்சரிக்கை. ௰.

எச்சரிக்கை முற்றிற்று.

## லாலி.

இராகம்-பைரவி தாளம்-ரூபகம்.

தாயம்மை மோகனுக்கும் போகனுக்கும் லாலி
தன்னிகரில் ஐயனுக்கும் தூய்யனுக்கும் லாலி லாலி. ௧.

பத்தர்மகிழ் நேயனுக்கும் தூயனுக்கும் லாலி
பன்னவர்சி னேகனுக்கும் ஏகனுக்கும் லாலி லாலி. ௨.

பங்கயநற் பாதனுக்கும் நீதனுக்கும் லாலி
பாந்தமுக் கண்ணனுக்கும் வண்ணனுக்கும் லாலி லாலி. ௩.

அருமறையின் மூலனுக்கும் மேலனுக்கும் லாலி
அன்பர்பவ நாசனுக்கும் நேசனுக்கும் லாலி லாலி. ௪.

அத்திமுக னைப்பெற்ற அத்தனுக்கும் லாலி
ஐம்முகங்கொள் வித்தனுக்கும் சுத்தனுக்கும் லாலி லாலி. ௫.

நெற்றியினற் கண்ணனுக்கும் வண்ணனுக்கும் லாலி
நீலமுண்ட கண்டனுக்கும் சண்டனுக்கும் லாலி லாலி. ௬.

தமிழ்மறையில் மோகனுக்கும் வாசகனுக்கும் லாலி
தனியானை யுரித்தோர்க்கும் சிரித்தோர்க்கும் லாலி லாலி. ௭.

அசுரர்குல காலனுக்கும் சீலனுக்கும் லாலி
ஆறணிந்த குழகனுக்கும் அழகனுக்கும் லாலி லாலி. ௮.

அரவணிந்த மெய்யனுக்கும் செய்யனுக்கும் லாலி
அருக்கயிலை வாசனுக்கும் ஈசனுக்கும் லாலி லாலி. ௯.

வானவர்கள் நாதனுக்கும் போதனுக்கும் லாலி
வலிதாய ஊரனுக்கும் தீரனுக்கும் லாலி லாலி. ௰.

லாலி முற்றிற்று.



## மங்களம்.

இராகம்-அசாவேரி தாளம்-ஆதி.

வலிதாய நாதனுக்கு ஜெயமங்களம்-தமிழ்
மாமறைநல் மூலனுக்குச் சுபமங்களம்
புலியாடை தரித்தவற்கு ஜெயமங்களம்-நாளும்
புண்ணிய சொரூபருக்குச் சுபமங்களம். ௧.
தாயம்மை நாதனுக்கு ஜெயமங்களம்-நம்பால்
தண்ணருள்தந் தாள்பவற்குச் சுபமங்களம்
பாயும்விடை யூர்பவற்கு ஜெயமங்களம்-பல
பாம்பணி நற்றோளனுக்குச் சுபமங்களம். ௨.
தந்திமுகன் தந்தையற்கு ஜெயமங்களம்-மதி
தவழ்கங்கை தரித்தவற்குச் சுபமங்களம்
அத்திவண்ண மேனியற்கு ஜெயமங்களம்-தாவும்
அழகுமா னேந்தினற்குச் சுபமங்களம். ௩.
சண்முகனைத் தந்தவற்கு ஜெயமங்களம்-உயர்
சடைமுடியைக் கொண்டவற்குச் சுபமங்களம்
கண்விழியைத் தெரித்தவற்கு ஜெயமங்களம்-யார்க்கும்
கருணைதந் தாள்பவற்குச் சுபமங்களம். ௪.
கேசவனைக் காத்தவற்கு ஜெயமங்களம்-அநுமான்
கேடொழித் தாண்டவற்குச் சுபமங்களம்
வாசமலி கொன்றையற்கு ஜெயமங்களம்-சுடர்
மழுவேந்து கையினற்குச் சுபமங்களம். ௫.
இன்பமுறு மீசனுக்கு ஜெயமங்களம்-மிக
ஏழைவிசு வாசனுக்குச் சுபமங்களம்
அன்பர்பணி நேசனுக்கு ஜெயமங்களம்-எங்கள்
அழகுவலி தாயனுக்குச் சுபமங்களம். ௬.

மங்களம் முற்றிற்று.

உ

சிவமயம்.

# ஓம் பிரணவ சொரூபாய நம:

பாடியென வழங்கும் திருவலிதாய க்ஷேத்திரமான்மியம்:

இது

ஸ்ரீநந்திநாடியிற்கண்டது.

பரவை நீர் மேல்பாகத்தும் பால்நதி வடபாகத்தும்
இறைவனும் கபாலிநாத னிருக்குகன் முதலாப் பூசை
சரசமாப் புரிந்த போத சார்பினும் முறைமை தங்கும்
குரவனும் வன்னிவன்வாழ் குறிநிலை தனக்கும் பக்கல் 1

இருதயத் தடைத்துவேத விறைவனைப் பூசித் தேற்றித்
திருவெனு தருமாருக்குந் தேர்ந்ததோர் வன்னிதிக்கில்
குருமுனி யசுரர் தம்மைக் குடிபுகவீ டளித்த
மருவிய நிலைக்கு மேல்பால் வலிதாயமென்னும் பேரே 2

வேறு.

பிரமனின் றவத்திடை பிறந்த தோகைமார்
சிறந்திடு கடவுளைச் சேர்த லுன்னியே
யறம்பல பயின்றிடு மன்னை தன்னொடு
சிறந்த பூசனைசெயுஞ் செய்கை பூண்டனர் 3

மூவரின் முதல்வனு முதுமறைக்கெலாம்
தேவரின் தேவனுந் தெளிந்த வின்பமே
யாவர்க்கு மருள்தரு மாதிநாயகன்
பாவனை புரிந்துமே பண்ணினார் தவம் 4

தவமது முயலுநாள் தக்க தேவர்கோ
னவமதா யழித்திட வமரர் சென்றுழி
சிவமென வினைந்திடாச் செய்கை சான்றமை
தவனுமுற் றிருந்தனன் கடவுளக்கனை. 5



விடையிசை பாவையும் வேத வேதனும்
மடமயில் தவம்புரி வனத்தில் தோன்றினன்
கடவுளின் வரவெதிர் கண்டங் கேத்தியே
படவரவல்குலார் பணிந்து போற்றினார். 6

பாதுகா ரணமலை விரும்பினீர் தவம்
போதுறப் புரிந்தமை புகலுமென்றனர்
மாதரவ் விருவரும் மகிழ்ந்து வேட்டவை
போதுநாயக னெனக்குரிமை வேட்டென 7

கலகல வெனநகை புரிந் தங்கையனும்
நலமுறு மடந்தைகேள் நாயகன்னென
குலவுநலமுகல கொண்டகிந்தினை
நிலவுறு பிரணவ நிலைக்குமோ சொலாய் 8

என்றுகொண் டிவ்வித மியற்றச் சங்கரன்
கன்றுறு மகிழ்வனீ யாகவேண்டியே
நின்றுயாம் கெடுந்தவ நிலைபுரிந்தனம்
கன்றுறு பசியினை யாவறியாததோ 9

பிரணவ சொரூபமாம் பேத மின்றியே
யரனுரு வைங்கர மூர்த்தமா கியாம்
குறைதவிர்த் தருளுவோம் கோதாய் மற்றவை
யுளாயருளுதுமென வுரைத்து நின்றனன் 10

மாசிலா வடிவமே வந்து கூடினும்
நேசமொன் றெயலால் நேர்ந்தமாய்கையாம்
பாசமே யொழிந்திடப் புரிந்துநீ ரருள்
ஈசனே யென்றனர் இருவ ராயவர் 11

இப்பெரு வரத்தினை யீந்து வன்னனும்
மெய்ப்பெரு மடைந்த கேளுட் குறைபாவமே
செப்பிடு மருளுது மெனச்செவி மடுத்திட
ம்பினை யிந்நக ராதிபாகுதி

பாடலத் தருவடி தன்னிலே தவ
மாடலோ டிருந்து மெய்த்தவ மியற்றினார்
மாடுயர் கடவுளும் மகிழ்வுட னங்ஙனே
யாடல்கொண் டிருந்தன ரரிவை மார்க்கதாய்

(பாடலம் என்பது பாதிரி விருக்ஷம்.)

காயியத்தலமதைக் கன்னிமார்களும்
மேமுற் றிழைத்த தானிலமுண்டவ
னுமிதிற்சயம்புவாயமை யனுகியே
காயிலனமெனக் கருதிக்கூறினன்.

முல்லைமாமலர்கொடு மொய்குழற்றவ
மெல்லையிலருச்சனை யிட்டகாரணம்
தொல்லைகளகற்றிடத் தோன்றல்தோன்றினர்
முல்லைமாவனமென முனிவர்கூறுவார்.

கன்னிமாரும்வலி களைந்தவெல்லையில்
கன்னியவிடமதை நாயகன்யிடர்
தன்னிடையமைத்ததும் தானவப்பகை
யன்னரிலைகளைந்ததுமாகுமென்பரால்.

மான்மகனின்றிடும் மடந்தையர்க்குமே
தேன்பெருஞானவாருதியை யீந்தனன்
வான்பொழிமலரயன் வந்துபோற்றியே
யாண்மையுமுதிர்ந்தனரரசும் பெற்றனர்.

கற்பெலாந்திரண்டொரு வுருவமாகிய
பொற்கொடிமணம் புணர்ந்திட்ட மேன்மையால்
கற்பகாடவிறை கனமழை பொழிந்துமே
யற்புதம்புரிந்தனன் மமரர்கோவுமே.

செப்பியமுனிவரின் செயலறிந்துமே
யொப்பியவற்புத வுமையகிழ்ந்திதை
யப்பனேகூறிய வரிவைமார்கன்பி
னெப்படிபிரணவத்தை யிழையலாயினர்.



கயமுக னென்றுமோர் கரியதானவன்
நயம்தா யிறைவனை நன்மலனைக் கொடு
வயனுறப் பூசனை புரிந்தங் குலகெலாம்
செயலுற வதுவினைச் சேரப் பெற்றனன்.

பெற்றுக் கொண்டிந்திரன் முதற்பெரு தேவர்கட்
குற்றநீங் கிழைத்திவ னுறையுந் திசைகளிற்
பற்றிய பாலரை பகைத்துமே ஜெய
முற்றுவாழ்ந் திருந்தன னுலகில் மிக்குமோன்

அரிதரு மயனிடை யழுது வெம்பியே
சுரர்க்குன பகையெலாம் சொல்லவாயினர்
முறையுற பதுமனும் முதியமாலிட
முரைப்பதற் கிசைந்துமே யுற்றுக் கேகினர்

மாலடி வணங்கியே மாற்றலரின் பகை
யேலவு மெடுத்திவை யிசையக் கூறினர்
மாலொடு பிரமனும் மற்றுளோர்களு
மாலமுண்டவ னிடமறியக் கூறினர்

கயமுகன் செய்கொடுங் கடமை கேட்டுமே
யயனரி யிந்திரன் தன்னை நோக்கினர்
ஜெயமுறு பிரணவ முருவமே யருள்
கயமுக னெனும்பகை களையு மென்றனர்

அந்தநாள் வரைகொடும் பகை களைந்திட
சிந்துவேணியனும் நீ யிருப்ப தென்னினும்
சிந்துர மதகரி செய் யிடுக்கமு
மெந்தநா ளொழிதலே யென்று கேட்டனர்

கேட்டவத் தேவருக் கிறைய ருளியே
நாட்டமிற் பிரணவ ரூப யானையாய்
வேட்டமாப் படைகளும் மேன்மை பூணனி
யாட்டமின் சடையுளோ னவதரித்தனன்

ஐங்கரம்பாலமுமமழுதண்டமும்
சங்கர பாசமும் சடையுமென்முடி
தங்கிய திகிரியும் தனுவுஞ்சங்கும்
மங்கணனருளினி லங்கரன்தோன்றினர். 27

வேறு.

சந்திசத்தர்கள் தமுருவெலாந்திரண்டு
சார்ந்ததோர் வேழமாமுகமும்
வெற்றியைங்கரமும் மென்புரிநூலும்
விளங்கிய கிண்கிணி யரையும்
பற்றியகரங்கள் தோறுமாயுதமும்
பசுபாசம் விலக்கிடுநோக்கு
முற்றுநற்றவத்தோ ருளத்தினின்றுறு
மொருபெரும்பொருளெனநிற்கின்றான். 28

பிரணவசொருபத்தனமும் பெரியோர்
பேசவுங் கூசுகன்மொழியும்
பரனருள்மதலை பாரினைப்பிளக்கும்
பற்குவதந்தமுமுலகை
யரைக்கணமதனில் வலம் வருநடையு
மருமறைதமக்கெலா மெட்டாப்
பிரணவவடிவ வொருவனை நோக்கிப்
பிஞ்ஞகனறைகுவ னிதனை. 29

உலகிடைநீசென்றுருவெலாந்திரண்டே
யோங்கிய கயமுகனென்னும்
நிலையிலா வவுணன் குடிகெடுத்தருளி
கொடியமாலூழ்வினைபோக்கி
நலமுறக்கருதி நம்மையேவிரும்பி
நாயகிமாரிருவோர்கள்
வலமுறவணைப்புதுக்கி யன்னவர்தம்
மனக்களிப்பேற்றியேவருக. 30



இமையவர்க்குத்துணையாயிரண்டாயிரம் வெள்ள
மியற்றியபூதமாகணமும்
பிறையணிசடையான் தந்துமேலிருக்கிற்
புகட்டியமந்திரமுறைத்துக்
கரிமுகன்றன்னை வாழ்த்திமெய்குளிரக்
கட்டியே தழுவியும்விடுத்தா
னரையில் கிண்கிணிகளார்ப்பவுமார்ப்ப
வமர்க்கோலங்கொண்டனனையன். 31

துரகதம்பரிமா முன்னதாய் நடக்கத்
தோன்றலின் பின்னணிபதனில்
முறையுறு தேவ ரார்ப்பரித்தெழுந்தே
முனிவர்கள் மறைதிரம்படிக்க
வருமறைவாசி பூட்டியரதத்தி
லார்ப்பரித்தெழுந்து சென்றருளிப்
பெருவலியுடைய வவுணனூர்புகுந்தான்
பெருவலிகொண்டவனெழுந்தான். 32

ஆர்வலிகொண்டு தனுவினைவளைத்தங்
கடல்வலிகொண்டவந்நாளில்
பேர்வலிகொண்டவவுணனினுயிரைப்
பெருவலிகொண்டிவன் கவர்ந்தான்
சீர்வலியுடைய வவுணன் மூஷிகமாய்ச்
சிவபிரான்மதலைமேல் சீறி
நேர்வருநாளில் குஞ்சிதத்தாளால்
செறித்தனனவுணனுஞ்சோர்ந்தான். 33

எவ்வரம்வேண்டு மவுணனே யுனக்கென்
றெனவானைமதலையுஞ்சாற்ற
வவ்வரமுமது பாதமென்நாளு
மடியன் மேல்வருத்து சென்றருளிப்

பல்லமாம்வினைகள் யாவையுந்தொலைத்துன்
குன்பார்வையென்மீதுறக்கருணை
யொவ்வவேபுரிய வேண்டினனென்று
றுடன்வையளித்தனனொருவன். 34

கருங்கடலென்னத்திரண்ட வான்படையைக்
கணங்களுக்கிறையவனோக்கி
யருங்கனாக்கனியினி தத்தினையுடைய
வாதிமால் சாபமும் நீக்கும்
பெருங்கடற்கருணை பூத்தவான் படையைப்
பேசரும் பாடியில் விடுத்துத்
தரும்வரைசிகரம் நிகர்புயமுடைய
தையலார்தாபந் தீர்த்தருள்வோம். 35

இவ்விதமியம்புமத்தனன் திருத்தா
ளிறைஞ்சினியசங்கனென்பவனு
மொவ்வியகருணைவள்ளலே யுன்ற
னுளத்திடைக் குடிகொளுமாட
லெவ்விதமுளதோ யாங்களுந்திய
வியற்றினிரத்தவமிழைத்தோம்
கொவ்வைசேர்மொழியார் புண்ணியம்யாதோ
கூடவுமாடவுமென்றார். 36

படைக்களத்தவிர்த்த வுனைவெலாமுண்ட
பாரிடத்தலைவரைநோக்கி
விடையதேவிதி யமைத்தனிர்க்கின்மி
னிவ்விடத்தன்னிலே நெடுமால்
தடையரவனை புன்மை நீத்தருளித்
தையலர்மோகமுந்தவிர்ப்போம்
விடையினைசவுரியோனருளினனென்றான்
வேதமுமறிவுறுமூர்த்தி. 37



இறைவனுரைசெய்த பூதமாம்படைக
ளிருப்பதற்கிடமமைத்தனனால்
பிறைமுடிச்சடையோ னருளினுள்ளவன்
குன்றிருந்தருளியப்படைகள்
கருணையேவடிவா யெழுந்தருள்மூர்த்தி
கனமலரடியினைத்தொழுதங்
கொருவருமுணரா மூவராலறியா
வுத்தமன்மால்பழி நீத்தான். 38

மாலினுங் குற்றமாம்புருகனைந்து
மான்மகன் மகள்தனை மணந்து
மேல்வருமின்றார் விரும்பியவரங்கள்
விரும்பிய வாறவையளித்துச்
செவ்விழிபோன்ற மாதரோடிசைந்து
சிறந்ததோரவர்கள் பூசித்த
மேனுறைமுல்லை வனமதையடைந்து
விரும்பினான் தவனிலையம்மா. 39

இந்நாளில் மாலிந்த முருவழித்து
மால்பூசைக்கிருந்து காத்துப்
பின்றனிலரிதனக்குப் பெரியவ
குண்டமெனும் பதமளித்தே
யன்றேனுங்கேட்டபடி யாழிமுதற்
படைக்கலமுமேயளித்துப்
பின்னேனென்பெண்ணனை கற்பாவையளை
மணந்தாளட்டியாய் பேசுநாலே. 40

தன்னுரிய பரிசனத்துக்குற்றபணியேயமைத்துத்
தவமேற்கொன்றும்
மூன்னுரிய முனிவர்க்கு மரியலரமீந்தருளி
யடல் மேற்கொண்ட

பண்பினியபாரிடரின் பசிதவிர்த்துப்
படிவீடுபடியச்செய்த
முன்னிலையால் பரிடியெனு மொழிவதிந்த
நகரமதை முனிவர் என்றான். 41

பாவையர்களிருவரையும் பகர்ஞானவுருவாக்கிப்
பாவாயெம்மைத்
தாவிதவமிழைத்தமையால் தையலரே யிந்நகர்
முத்திதர
மாவதெனவாச்சருளி யனுதினமுமிக்குறையோ
மரனைப்பூசை
நாவுதவமிழைத்திடவே வேண்டுமெனத்தனிச்சடவு
ளெழுந்தாருக்கு. 42

கொண்டவாயுதங்கள் பாடிவீடமைத்துக்
குளிர்புனலாடியே யின்றங்
கண்டர்கள்போற்று மஷ்டமியதனு
லரன் பூசைவிரும்பியேபுரியத்
தண்டயிழுதனைக்குறுமுனிக்களித்த
திருவ்வலிதாயநா தன்முன்
கண்டுபூசித்தானெக்கரத்தோடும்
கனமவரீந்தனர் மாதர். 43

அசுரர்தம்வலியை யடக்கியாண்டருளி
யாரிழைமார்க்கின்பமேதந்து
பசுநிறத்துகளால் பூசனை புரிந்து
பராபரன்கருணையேயடைந்து
திசைவனச்சுரர்கள் குலங்களைக்காத்துச்
செய்யருர் கயமுகன்றனக்கே
வசிதமாந்தனது மெல்லடி யவன்மேல்
விளங்கிடத்துலக்கினுறுலகை. 44



பதுமனின்புதல்வி யிருவர்க்காச்செய்யப்
பாடலத்தருவடி நிழலில்
முதுமறையறியா வந்தணனிருக்க
முன்னவன் கருணையைநோக்கிப்
புதுமலரனந்தம் பூவையர்பரித்தங்
களிக்கவுங் களித்தருச்சித்துத்
துதிபெருநதியுஞ் சோலையுஞ்சாலச்
சூழ்ந்தனமுல்லைமாவனமே. 45

வேறு.

அறிவே சிவமா யருளே பொருளாய்வருநாதன்
குறுமாமுனிவர் தொழுவோர்வினை தீர்வலிதாயன்
திருமால்முதலோர் தினமும்வழிபாடுளபோதன்
கரிமாமுனிவரே பொருளென்றுணர்வாயே. 46
அடியார்வினையைப் பொடிசெய்தருள்வீடருளுநாதன்
குடியாயடியார் மனவீடடையும் குணக்குன்றம்
பிடிசேரிடையுங் குயில்போல்மொழியுங் குலமாதர்
துடிசேர்விழியாய் மயல் தீர்த்தருளும் துரையம்மா. 47
மணமாமிருளை யடிவேர்களையும் மொருகொம்ப
னிணமானவரை யினமேசேர்க்கு மிருதாளன்
கணமார்மலரோனடிமேல்வருமெங் கணபாதன்
முனமாதொழவே வினைதீர்த்தருளும் முதல்வன்றே. 48
இருக்காலறியாப் பொருளையிறைவன் கரங்கொண்டு
திருக்காலமுமே யிருக்கால்பூசை தெளிவித்தான்
தருக்கால் மாதா தழையுற்றோங்கித் தனியானை
செருக்கால் பூசை புரிவாரிவரே வலிதாயன். 49

வேறு.

உபெதிபூசைக்கிரங்கி வலிமையுளதெய்திப்
படுவிடயாற்றிப் பகலுக்குற்றபதமெய்திக்
கடுவிட்டுமண்டு கண்டங்கறுத்தசடலானைத்
தொடுமலர்பூசை புரிபவர்மேல்வீடடைவாரே. 50

வாகமிகொண்டபகையை விலக்கும்வலிதாயம்
தேசயர் வன்னி பூசனைபுரியுந் திகழ்கோமா
னீசனென்று வாமனுக்கு வரந்தரு
மீசனுமிவனை பிரணவமிது வென்றறிவாயே.

கற்பகமலரோன் பூசனைபுரிந்தகணேசாத
னற்புதமார்தம்முடை வின்றங்களாரும்
சிற்பரன்பாதம் பூசனைபுரிந்தான் இனையென்றால்
பொற்புளவுலகோர் புகழ்வதுவெளிதோபுகல்வாயே.

மல்லிகைமுல்லை செண்பகமலரு மரம்வித்த
சொல்லருகுவினங் குவளைகற்புன்னை பரிசாதம்
நல்லசருக்கேனினித்தெழுந்தருள் மலர்கொண்டு
வல்லவனுனை வைவசுரன் பூசைசெய்வலிதாயம்.

மாமலர்கொன்றை பாடலஞ் செய்தல் மகிழம்பூ
கோமுறைவெட்டமருகொடி தும்பை குடமல்லி
சாமயம்விருட்சி பன்னீர்மருக்குமல்லி
பூமியிலுள்ளமலரெலாக்கொடு பூசித்தானே.

கனிரசம் கறுநெய் பால்தேன்கொண்டுபடைப்பித்துக்
கறுசுவை போனக மட்டுவமைத்தே யனவாரும்
குருபரன்பூசை குறையறச் செய்தான் குணமாத
கிருபையின்றயேத் தினமுறுமை யென்சொல்வேன்.

சோதிபெறுவொளி மாதிருவரும் வசமாக
காதலருள்கொடு போதமலர் தனிற் பணிவெய்திப்
போதமலர்கொடுகோதனடியிணை போற்றுக்கால்
வேதமுதிவுநா காதலர்சிறப்பெற்றுயர்ந்தார்.

வேறு.

கற்பமெனக்கடந்தருளிக்
காரணபஞ்சாக்கரமாக்கடவுள்பூவி
லற்புதமாகவென்றே
புரைப்பிப்போரே பாச்சவருமுறுவென்றிவ்னா



வற்புதனையடியவர்க
ளாக்கமலங்குடிகொன்றமறுநிமுத்த
சிற்பரனையிப்புவியோ
ரப்படியென்றிப்படியென்றுரையொன்றதே.
கவமுகூர்த்தந் தனக்குதலை
நான்மறைக்குத்தலையாகி நாதாந்தத்தின்
சிவமுகூர்த்தந்தனக்குதலை
சின்மயத்தின் முதலாகிச் சிறந்தோருள்ளம்
பவமகற்றும்பொருளாகிப்
பராபரமுங்கடந்ததுவாய்ப் பொருளொன்றுண்டென்
றவமகற்றும் பொருளதுவோ
வதுவிதப்பொருளென்று வரைந்திட்டேனே.
அரிபிரமாதியதேவர்
தமக்கயிந்தியமா மனுவிதுவன்றும்
பிரிவிலையென்னிருக்கும்
பொருளதுவோ வெனவுரைக்கிற் பிரணவந்தான்
கரிமுகமுங்கரனமர்ந்தும்
நால்வாயுமுப்புரியுங் காமலைபாத
திருவின்றுபூசிக்குந்
திருமால்பூசித்ததிருவடியீதம்மா.

வேறு.

இப்பெருங்கருத்திரு லீனைவன் வாழ்பதி
யற்புதம்பெருகிய வரியபாடியாம்
பொற்புறவடக்கையர் புனர்ச்சியின்பமாங்
கற்பினையாற்றிய கருத்துண்மை
மற்புதமயிர்த்தமே யறிவைக்காட்டுறான்
சிற்பரனருளினைச் செய்யத்பாலதோ.
தேவிமாதிருவரை நோக்கிமுன்னவன்
வாலிருதிக்கிலுந் தன்னிலைதவம்
மேவிநீர்செய்த மேற்குறியதிக்கியாதெனா
வாவியரக்கடவினை யரிவையர்காட்டுறார்.
கைமுகம்புரிந்தமே னங்கைமார்மனம்
பகைகளைந்திடவரும் பருதிபோலவும்
முகைபுனைவேதுாப் பொருளுமாயிருட்
பகைகளைந்தவத்திலை யறிக்குக்கூறுவான்.

பொருவிலையறிந்துநீ புரிந்தசெய்கையால்
கருதியபடிதவக் காட்சிகண்டனை
அறிவினிற் சிறந்தவ ராகினின்றெமைப்
பிறிவுறுவரமுமீர் பெற்றதென்றனர். 63

பாடலவிருட்சமும் பாடிநாமமும்
ஆடகச்சபையிடை அமருந்தேவியும்
வீடகமிதுவென விளங்குநாடொறும்
நாடகத்தொழுபவர் தனிவீடெய்துவார். 64

வேறு.

சிந்தையில் நினைத்ததெல்லாஞ்
சிவபிரானருளால் பெற்றே
எந்தையையிவ்வாறு பூசை
யியற்றினோர் பெரும்வீடெய்தி
அந்தணன்பாதந்தன்னை
யடைகுவரென்றும் வாழ்த்திப்
பைந்தொடி மாதரோடு
பராபரன் கைலைசார்ந்தான். 65

வேறு.

பரிசனக்குமரனும் பருதிமைந்தனும்
கரிகடாவியநெடுங் கனவேந்தனும்
பருதியின்குலப்பகை பரித்தராமனும்
இருவுடன் பூசைசெய் தெய்வமாநகர். 66

மான்மகனுடுபதி வன்னிசெங்கதிர்
வான்பொழிசதமகன் மறலிவாயுவும்
தேன்பொழிபங்கையன் தேவர்க்காரியன்
ஊன்பகைகளைந்து செழுநீங்கினார். 67

பரவையின்கருவரு பாரத்துவாசனும்
முறையுறுதவத்தினால் முன்னவன்றனைப்
பிறையுறுமெனவியைப் பேதகமகன்றிட
மறையுறவிதிப்படி வைகினான்றவம். 68



இன்னவர்யாவரும் யாதுகாரணம்
அன்னியில்தனிறவ மறிந்திழைத்தனர்
என்னவல்லுமையவட் கிசைந்தவாய்மையால்
முன்னவன்றொண்டுசெய் முனிவன்கூறுவான். 69

வாசகிதல்பெரும் வனுவடக்கிடத்
தேசயர்வாயுவும் தேவதேவனைப்
பூசனைபுரிந்தல கேத்தமேன்வரு
நேசமுற்றடைந்தனன் நிலைமையென்னவே. 70

அடைந்திடுபரிசன னமரர்நல்லுல
கடைந்திடவம்புலி சிறிதுறங்கிட
மடக்கவேசிகர்வரை முடிகவர்ந்தனன்
நடம்பயில்சங்கர னல்லடிகொடே. 71

பின்றுகன்றிருத்தவு மழித்தல்வேண்டியே
வஞ்சமுற்றிந்திரன் மதனைப்போக்கினன்
அஞ்சுதுகணையினால் அரனின்மேனியில்
பஞ்சபாணம்படப் பகைத்தெரிந்தனன். 72

அரன்விழிகன்லினு லரியின்மைந்தனும்
எரியுறவானவ ரிசைந்தமாயனும்
திரிபுரதகனன்பால் தேவர்வேண்டவே
குறியறுமாரனைக் குழகன்றந்தனன். 73

ஈசனுக்கிழைத்த வழுவைசழிந்திட
வாசவன்முதலினோர்ம மாரன்றன்னொடு
தேசுயரிங்கர் தேர்ந்த பூசைசெய்
தாசினையொழிந்தனர் தவத்தின்மேன்மையோர். 74

கலவியுமறலியின் கற்பினையே
புலவிருகிடைகவர்ந் தொளித்துப்போயினான்
அனலிலாதுலகெலா மழிந்தனழினால்
கனலியுமேற்றனன் கடிதிற்பாவமே. 7

அக்கொடும்வினையினை யகற்றவேண்டியே
மைக்குழல்பாகனுக் வாழுமிந்நகர்
புக்கொருபூசனை புரிந்தவ்வூழியைச்
சிக்கறத்தலைத்தனன் செய்யவங்கியே. 76

ஈசனின்னன்பரை யேமனென்பவன்
நேசமொன்றின்றியே நெருக்கிப்பாசம்விட்
டீசனையன்பரை யீர்த்தபாதகம்
ஆசறவருச்சனை புரிந்தறுத்தனன். 77

உடுபதிதினபதி யுரகர்புன்மையால்
தொடுமெனவஞ்சி யத்துயரம்நீக்கிடக்
கொடுவிடமுண்டவன் குஞ்சிதத்திரு
அடிமலர்பூசைசெய் தாசுநீங்கினர். 78

அஞ்சனமேனியா னசுரர்தங்கு
வஞ்சியின்தப்புறு மகிழ்நர்போன்றமே
வஞ்சனைமீறுறப் பருகானையில்
பஞ்சியுமுணர்ந்தனள் மாலவனென்னவே. 79

அழகுறுமகிழ்நர் போலாடல்பூண்டனை
சொரூபனரியென வுன்னக்கொண்டபாதகம்
அழிபுடல்விடுவதே யழகதாமென
தொழுகனல்மூழ்கினன் செய்யவல்லியே. 80

ஆருயிர்கரைத்திடு மந்தகாலையில்
பார்வீகர்மடந்தையும் பாவைமார்களால்
பெருறுமோகமாம் பித்துழன்றுசீ
சோர்வுறச்சாபமே சொல்லிப்போயினள். 81

மடந்தையர்சாபமும் மாற்றல்வேண்டிய
விடர்தனையுண்டவன் மெல்லடிக்குகான்
அடர்ந்தருமலர்கொடர் கருச்சனைபுரிந்
திடர்தவிர்த்தொழித்தன னின்பமிக்குளான். 82



தக்கனும்மகம்புரிந் திட்டகாலையில்
மைக்குழல்பாகன்மேல் வசைகள்கூறியே
இக்கொலாய்போற்றிடத் தேவரேத்திட
யிக்குறையாகத்தீ மூட்டினனரோ. 83

அம்பெருமகத்திடை யயனுஞ்செங்கண்மால்
புக்கியுமுணர்ந்திதை புனிதனக்குறு
தக்கனுக்கவையினை தானுணர்ந்திடா
மிக்கவும்விரிக்க வியற்றினர்மகம். 84

அறிபவரறிந்திலர் தமக்கறிந்தமெய்
தெறிவுறக்கூறுதல் தேவரிடியால்
உரியவனக்குறு துணர்விலாச்
உரியவனிகழ்ந்தமை செவிகொடுத்தனர். 85

சதமகன்பதமனே சாருந்தேவர்பால்
இதமுறுமிருந்திவ ரியற்றுமிம்மகம்
அதம்தாமொழிந்திட வையன்நோக்கினன்
சிதைவுகொலைசெய்தொழிந்தனர் செய்தமாக்களே. 86

ஞானமாமலரிடை கடிக்குமீசனை
மோனமுற்றவரறிந் தானருமெந்தையை
வானகவயிர்தமாய் வனரும்பேற்றினை
வினையோர்புன்மொழி யேற்றவபாவமே. 87

இப்பெரும்பாதக மீட்டறுத்திட
ஒப்பிலாமூவரு முய்தல்வேண்டியே
செப்பினமுலையினள் சேர்ந்தநல்வலி
யப்பனைபூசைசெய் தவலநீங்கினர். 88

வானவாமிர்தம்வேண்டி வாருதிகடைந்தபோது
ஆனைதுமொருறுதிகொண்டு கடுக்கிடவிடத்தைவிட்டான்
வானவர்மனநடுக்கி மாதேவன்றன்னைப்போற்ற
ஊனமில்லாமலுண்டோ னுறைவலிதாயமாமே. 89

அந்தநாள்தொடர்ந்து ஐயன்வாழ்பதிக்கே
அரியபஞ்சாக்கரப் பதியென்றும்
விந்தையாம் நீதிதருமமுமுறையுட்
விளங்குமந்தகன் பூசைசெய்ததனால்
கொந்தலர்குழலாய் தருமபுரமென்றும்
குறித்தோர் வாயுபூசையினால்
எந்தையர்தமக்கு வலிதாயரென்றும்
இயல்பின்மால் பூசித்தநெறியால்.

அந்தகாரணத்தால் அஷ்டாக்ஷரப்பதியாய்
அரியதாமரை மலர்கொண்டு
எந்தையைத்திருமால் பின்னும்பூசித்த
இயல்பினால் தாமரைத்திருச்
செந்துவர்வாயாம் பங்கயபுரமென்றும்
சிறந்த இந்திரன்பூசித்ததனால்
அந்தமாநகர்க்கு இந்திரபுரமென்றும்
அறைகுவர் கற்றுணர்ந்தோரே.

எழுபரித்தேரோன் பூசனை புரிந்தே
இராக்கதர் குலப்பகை களைந்த
அழகுறுமுறையால் இந்நகர் தனக்கே
ஆதித்தன் நகரெனப் பெயராம்
புகழுறுமதியம் பூசனைபுரிந்து
புன்மையை யகற்றியதனால்
பகருவர்சான்றோர் சசிக்கிறைபெயர்கள்
பாவையேபொருந்து மிந்நகர்க்கே.

தழலவன்களித்துப் பூசனைபுரிந்து
தையலர் பாதகமெல்லாம்
அழலினில்விடுத்தல் சமரர்நாடடைந்தே
அரிதுயர் நீக்கியவதனால்



மழுக்கரமுடைய வள்ளற்குநாமம்
வளர்ந்தெழுவன்னி யென்றொருபேர்
இழிவடைந்திருந்த மாரன்பூசித்த
இயல்பினால் சங்கரன் றனக்கு. 93

யாவையும்வெல்லும் மீளியென்றொருபேர்
யாவர்க்குமரியா னென்றொருபேர்
காவனமதனில் நின்றகாரணத்தால்
காகுத்தன் பூசனைபுரிந்து
ஆவணவசுராகுலந் தகர்த்தொழித்த
அரியபாதகமெலாம் ஒழிந்து
தேவதேவனின் சகாயமும்பெற்றுத்
தேர்ந்தன னிவரெலாமம்மா. 94

இரவியின்மைந்தன் பரிசனமைந்தன்
இருவரால் பூசனைபுரிந்த
ஆரணன்றனக்கே யருள்தருவலியோன்
ஐந்தக்கரத்திறைவ னென்றொருபேர்
காரணமுடைய கன்னிகையான
கமலவல்லியர் பூசைசெய்த
பூரணன்றனக்குப் புலத்தின் பேரெல்லாம்
பொலிந்திடுமென்றனர் மறையோர். 95

பாவையின்மைந்தன் பூசனைபுரிந்து
பண்புறுதமக்குக் கண்ணொளியை
இறைவனாற்பெற்றுக் கென்றுமேயங்கு
இருந்தனன்தவக் கோலமுடனே
அரன்றிருவடியை யண்டரிறைசான்
அடைந்துபூசனை புரிந்தமையால்
திருவடிதமக்குக் குருவடியென்றே
கூறுவர்மறையுணர்ந்தவரே. 96

2112D

முனிவரிலனந்தர் தேவரிலனந்தர்
முழுமறையாதியராக
பனிவரைக்கடவுள் தமக்குமேயவபேர்
பார்வதிபாகனுக் குண்டாம்
இனியவே திரவிகுலத்திடைவந்த
இயறருகலவரென்றும்
புனிதபூசனையைப் புரிந்தகாரணத்தால்
புகழ்ந்தது குசலிங்கமென்றே.
இப்பெருசிவத்தின் குறியதாகிருக் [illegible]
இருக்கிடம் யாதெனவினவில் [illegible]
அப்பறும்பெயர்ப முருகனை [illegible]
அகிலமார் தமக்கதாவிந்த
பொற்புறுமிலிங்க வடிவமாகித்திற்
பொருந்தறு பர்வதாகார
அப்பனென்றிவர்க்கே யாரணமெல்லாம்
அறைதருவ தன்னாடிய லென்றார்.

வேறு.

காசினியதனிற்காசிகாளத்தி [illegible]
பூசிதப்பேருராரூர் பஞ்சநியப்புகலூர் [illegible]
வாசிதிருவண்ணாமலை மயிலை [illegible]
தேசிகனுறையுங்கோயில் விளைக்கெலா மதிகமாமே.
சிறந்தவின்க கலைக்கண்டு சேவிப்போர் செல்வமெய்தி
பிறந்தருவிறுதிக்கீழ் பெரின்பப்புணலிற்மூழ்கி
அறம்பயில் லண்டபாக வன்பருக்கண்பேறுமெய்
வீரந்தரவீடடைந்து [illegible] வாழ்வார்.
இப்பெருந்தலத்தில் வந்தோர் கவிந்தவர் பிறந்திருந்தோர்
ஒப்பிலாப்புனலின்மூழ்கி யொழுக்கமாய்வமைவந்தோர்
மெய்ப்புவைபடர்தடாகம் மேன்மலர்வனங்கள்வைத்தோர்
அப்பனைப்பூசிப்போர்கள் அரியவீடடைவர்மாதோ.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

578

# இந்நூலாசிரியரியற்றிய நூல்கள்.

---

சித்தாந்தம்
சித்தாந்தக்கட்டளை
சித்தாந்தசாதனக்கட்டளை
சித்தாந்தசாகரியக்கட்டளை
சித்தாந்தவசனபூஷணம்
திருவான்மியூர்ப்புராணம்,
பாதகசின்ரேடிதோகம்
சீநிசாகரம்
திருவொற்றியூர்க்கலம்பகம்
புலைச்சிக்காதல்
திருக்கழுக்குன்றத்திரிபந்தாதி
செய்யுளிலக்கணம்
திரிபுரசக்திமாலை
மகாதேவிபந்திரமாலை
உருத்திராட்சமாலை
அருணசகோதரம்
கடம்பவனம்
தருக்கசோபானம்
பஞ்சரத்நாந்தபங்கம் [னம்
சிவத்துரோகசண்டன ...சிகர
சேக்கிழார்புராணவசனம்
சிவராத்திரிபுராணவசனம்
பூவாளூர்ப்புராணவசனம்

H.1-84

திருப்பாசூர்ப்புராணவசனம்
திருவயிந்திரபுரத்தலபுராணவசனம்
பஞ்சேஸ்வரத்தலபுராணவசனம்
திருவூறல்தலபுராணவசனம்
சிந்தாமணித்தலபுராணவசனம்
திருக்காளத்தித்தலபுராணவச
னம்
ஆவியூர்த்தலபுராணவசனம்
திருப்பாலைவனத்தலபுராணவச
னம்
திருவொற்றியூர்ப்புராணவசன
ம்
அருணாசலபுராணவசனம்
அட்டாங்கயோகம்
செங்கல்பட்டுயாத்திரை
வாயிலார்நாயனார்சரிதம்
போஜனவிதி
பதிகம் ... [புராணம்
உமாபதிசிவாசாரியர் ...
தாயுமானவர்பாடல்விளக்கம்
விருத்தியுரை
பட்டினத்தார்பாடலுரைத்த
ிபவுரை.

இவை வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்குமிடம்

பூவை-கலியாணசுந்தரமுதலியார்,
82, திருப்பள்ளித்தெரு, சென்னை.